குண்டூசி

மே - 83

ரூ.1.20



Cover Printed at Sri Murugan Offset Printers, Madras-5.

பண்டிகை நாட்களில நெஞ்சை அளளும் ராஜேஸவரியின
புத்தாடைகளை அணிந்து உங்கள மகிழசசியை இரட்டிப்பாக்குங்கள்
பட்டு
ஜவுளிகளுக்கு....
ஸ்ரீ ராஜேஸ்வரி
ஹால
121, ராஜவீதி, கோவை.1
போன்: 25859
ANURIKHA
புலநாகரீக ஜவுளிகளுக்கு...
உஷா
சாரி பாரடைஸ்
333, ராஜ வீதி
கோயமுததூா-641001
பேசன 33369
OSR

ஏப்ரல் இதழில் வெளிவந்துள்ள அட்டைப்படம் மிகவும் நல்ல முறையில் அமைந்துள்ளது. தென் திருப்பதி எனக் கொண்டாடப்படும் தான்தோன்றி மலைப்பெருமாளேயாவார். அந்த வரலாற்றை தமிழர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகையில் அழகுற விளக்கம் தரப்பட்டு உள்ளது என் இதயங்கனிந்த அன்பு, மகிழ்ச்சி பாராட்டுக்கள்.

தமிழிசைச் செவ்வேள் பி மாணிக்கவாசகம்—திருச்சி-8.

சென்ற இதழ் தலையங்கம், மிகவும் தைரியமாய் உண்மையை எடுத்துச் சொல்லியுள்ளீர்கள். கோவில் பணத்தைக் கொள்ளையடிக்கும் கும்பலாக உள்ளார்களே தவிர, கடவுள் பக்தி இவர்களுக்கு எங்கே ஏற்பட போகிறது? நாடு எப்படி செழிக்கும்? வானம்தான் எப்படிப் பொழியும்? ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

தேசிகாச்சாரி—மதுரை-1.

கவிசேரியாரின் வியாச பாகவதத் தொடரை ஏழு வருடங்களாய் தொடர்ந்து படித்து வருகிறேன். அலுப்புத் தட்டாமல் நல்ல முறையில் விளக்கமாக எழுதிவரும் பெரியவரைப் போற்றுகிறேன்.

மைதிலி ராஜகோபால்—சேலம்

காஞ்சி காமகோடி பெரியவாள் மஹாராஷ்டிரம் முகாம் முடித்து தெலுங்கு தேசத்தில் காலடி வைத்துள்ளார். தமிழ்நாட்டுக்குக் கங்கை வருகிறது, நல்ல சகுனமல்லவா? விரைவில் தமிழகத்தில் காலடி எடுத்து வைக்கவேண்டும். நம் நாட்டுக்கு நல்லது. வரட்சி ஒழிந்து செழிப்பு ஏற்படுமல்லவா?

எம் வீரப்பப்பிள்ளை—நெல்லை.

சிருங்கேரி பெரியவாளின் பொருள் பொதிந்த அருளுரை ஒவ்வொரு மாதமும் வருவது, மனிதனை சிந்திக்க வைக்கிறது. கடமையை எப்படி செய்யவேண்டும் என்ற விதிமுறையின் தத்துவத்தை நன்குக விளக்கியுள்ளார்கள். அன்பர்கள் அவசியம் படித்து தெளிவடைய வேணடும்.

பஞ்சனுத சிவாச்சாரியார்—ஈரோடு

எல்லா பத்திரிகைகளும் விலை ஏற்றி வருகின்ற நேரத்தில் குண்டூசி மட்டும் எப்படி சமாளிக்கிறது? அட்டைப்படமே விலை அதிகமாகுமே? ஒன்னரை ருபாயாவது வையுங்கள். இதைவிட குறைந்த பக்கங்கள் உள்ள பத்திரிகைகள் அதிகவிலை வைத்துள்ளார்களே!

வசந்தா கேசவன்—தஞ்சாவூர்.

பட்டை 36 ஊசி 8

மே — 1983

ஹரே ராம! ஹரே ராம!!

ஹரே ராம, ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

இந்த தாரக மந்திரத்தை தன் எழுபத்தி ஒன்றாவது வயதில சைதன்ய பிரபுவின் வழியில் வந்த ஒரு மகான் அயல்நாடு சென்று பத்துவருஷத்தில் சுமார் அறுபது நாடுகளுக்கும் மேல் இந்த ஹரே கிருஷ்ண இயக்கத்தை ஸ்தாபித்து, அந்த தேச மக்களை தலையை மொட்டையடித்து உச்சிகுடுமி வைத்துக்கொண்டு கையில் மத்தள துடன் ஹரே கிருஷ்ணா என்று பாட வைத்து விட்டு தன் எண்பத்தோராவது வயதில் தாயகம் திரும்பி சமாதியடைந்தார்.

இந்த ராமா—கிருஷ்ண நாம மகிமையையும், பெருமையையும் அள விட்டு சொல்ல முடியாது.

நமது தென்னக அரசியல் ராமர்கள் ஒன்றுபட்டு சென்னைக்குக் கிருஷ்ணாவைக் கொண்டு வருகிறார்கள். இது நல்ல செய்தி. ராம — கிருஷ்ண நாமத்தின் மகிமைதானல்லவா?

நாட்டுக்கு ஒரு நல்ல காரியம் ஏற்படுகிறதென்றால் பல எதிர்ப்புகளும் ஏற்படத்தான் செய்யும்.

தெலுங்கு ராமன்கள் யார்? நம் சகோதரர்கள்தானே? நம்முடன் ஒன்றாக இருந்து சமீப ஆண்டுகளுக்கு முன்பு தனியாக குடிபோனவர்கள் தானே? இவர்கள் எப்படி அன்னியர்களாகி விடமுடியும்?

தெலுங்கு தேசத்தில் நம் அண்மையில உள்ள மாவட்டங்களில் பல லட்ச ஏக்கர்கள பலன் ஏற்பட்டால நமக்கும் நல்லதுதானே? தண்ணீர்ப் பஞ்சத்துடன் அரிசி பஞ்சமும் தமிழ்நாட்டுக்கு ஏற்படாதல்லவா?

எத்தனை கோடி யார் கொடுக்கிறார்கள் என்பது முக்கியமில்லை. இதனால் பொதுவாக ஏற்படும் நன்மையைத்தானே மனதில்கொண்டு நிறைவுடன் மகிழ்ச்சி பெறவேண்டும்.

கருணை உள்ளவர்களிடம்தான் நிதியை எதிர்பார்க்க முடியும். இரண்டும் உள்ள கருணாநிதியே இந்த நிதி விஷயத்தில் எதிர்ப்பு தெரி வித்து வீணாக வரட்டுவாதம் செய்யலாமா?

எப்படியோ நம் சகோதர நாடும் பயன் பெறுகிறது என்ற பரந்த மனப்பான்மையில், தமிழன் பண்பாட்டுடன் மன நிறைவு பெற, மாறு பட்ட அரசியல் தலைவர்களுக்கும் ஆண்டவன்தான் நல்ல புத்தியைக் கொடுக்கவேண்டும்.

வானம் பொழிந்து, நாடு செழிக்க ஆண்டவனை உள்ளன்புடன் போற்றி வணங்குவோம்.

—ஜெய்ஹிந்த்.

காஞ்சி காமகோடி
பரமாச்சார்யாள்
அருளியது

பற்று அற்றவனைப் பற்றுக!

ஈசுவரனுக்குப் பல பெயர்கள் இருக்கின்றன நித்தியபுத்தன், நித்திய முக்தன், பட்டமரம் போன்ற ஸ்தானு,ஸர்வக்ஞன் என்றெல்லாம் அவனுக்குப் பெயர்கள் அவனிடம் பக்தி பண்ணு, அவனிடத்தில் அன்பு செய் என்றெல்லாம் அடிக்கடி சொல்லுகிறோம். எதற்காக அப்படிச் சொல்லப்படுகிறது? நாம் நம்முடைய அழுக்குகளைப் போக்கிக் கொள்ளத்தான். நமது அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளத்தான். மனத்திலுள்ள குறைகளை நீக்கிக் கொள்ளத்தான். கஷ்டம் துக்கம், மோகம், காமம் எல்லாவற்றிலும் நமது மனம்சஞ்சலப்படாமல் இருப்பதற்காகத்தான். சித்தி விருத்தி நிரோதம் செய்து சதா ஆனந்தமாக நம் காரியங்களைப் செய்வதற்காகததான் அந்த ஸ்தாணுவைப்பற்றிக் கொண்டு பக்தி செய்ய வேண்டும்.

நாம் பற்றுள்ளவர்கள். ஈசுவரன் பற்றற்றவன். பற்றுள்ளவர்கள் பற்றில்லாதவர்களாக ஆவதற்குப் பற்றில்லாதவன் தாள்களைத்தான் பற்ற வேண்டும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்
பற்றினை
பற்றுக பற்று விடற்கு.

என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம். எவன் ஒருவன்பற்றுகளை எல்லாம் அறுத்துவிட்டுப் பற்றில்லாதவனாக இருக்கிறானோ, அவனைப் பற்றிக்கொண்டால் நம்பற்றுகளும் நம்மை விட்டுப் போகும்என்கிறார் வள்ளுவர்.

இதர வயல்களில் மேயாமலிருப்பதற்காக நாம் பசுவைக் கட்டிப் போடுகிக்றும். மற்றவர்களின் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு மட்டும் பசுவைக் கட்டிப் போடவில்லை. மற்றவர்களிடமிருந்து அடிவாங்காமல் பசுவைக் காப்பதற்குக் கட்டிப் போடுகிறோம். அது போலவே நாம் எல்லாம் பசுக்கள். ஈசுவரன்தான் பசுபதி நாமும் காமம், குரோதம் போன்ற உணர்ச்சிகளுக்கு ஆளாகி கஷ்டப்படாமல் இருப்பதற்காக நம்மையே உறுதியுள்ள கயிறுகளால் கட்டிக் கொள்ளவேண்டும் இக்கயிறுகள்தாம் நாம் அனுஷ்டிக்க வேண்டிய சதாசாரங்களும் கர்மாக்களும் பக்தியும். எப்போது பசுவை கட்டவிழ்த்து !விடவேண்டுமென்று இடையனுக்குத்தெரியும். அப்போது பசுவைக் கட்டவிழ்த்து விடுகிறான். பசுபதியாகிய ஈசுவரனுக்கு எப்போதுநம்முடையகட்டுகளிலிருந்து நம்மை அவிழ்த்து விட வேண்டுமென்று தெரியும் அப்போது நம் கட்டுகள் அவிழ்ந்துவிடும். கட்டுகளை முடிவில் அவிழ்ப்பதற்காகவே இப்போது ஆசாரங்கள், அனுஷ்

டானங்கள் என்ற கட்டுகளால் கட்டிக் கொள்கிறோம்.

நூல் கயிற்ருல் கட்டப்பட்ட ஒரு பேல் கட்டு இரும்புத் தகடுகளால் இறுக்கிக் கட்டப்படும்போது நூற் கயிறுகள் தளர்ந்து நழுவி விழுந்து விடும். அதுபோலவேஞானம் என்ற இரும்புத் தகடிஞல் நம்மை இறுகக் கட்டிக்கொண்டால் காமகுரோதம் என்கிற நூற்கயிறுகள் தளர்ந்து விழுந்துவிடும், இந்த நூற்கயிறுகளான காமக் குரோதாதிகள்தான் நம்மை இவ்வுலகத்துடன்பிணைத்து பிறப்பு, இறப்புக்குக் காரணமாக இருக்கின்றன. இவற்றினின்று விடுபடுதற்கு யக்ஞம், தபஸ், கர்மாக்கள், ஈசுவர பக்தி என்று பலவிதங்கள் சொல்லப்படுகின்றன. எல்லாம் ஞானத்தை அடைவதற்குச் சாதனங்கள். ஞானம் வந்துவிட்டால் பற்றுகள் அற்றுபோகும். ஈசுவரன் ஞானஸ்வருபி, நித்தியமுக்தன்.

இதற்காகத்தான் நாம் ஈசுவர பக்தி செய்யவேண்டும். பகல் என்ருல் ராத்திரியிருக்கிறது. நல்ல வெயில் என்ருல் மழை இருக்கிறது. ஜடம் என்ருல் சித்து (உயிர்கள்) இருக்கிறது. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்றுப் பொருளிருக்கிறது இதிலிருந்து ஒரே அழுக்கு, ஒரே துக்கம், ஒரே கோபம், ஒரே காமம் எப்போது பார்த்தாலும் ஒரே சஞ்சலம்—இப்படிப் பலஜீவாத்மாக்கள் இருக்கும்போது இதற்கு நேர் விரோதமாக எப்போதும் பரிசுத்தமாய், பரம ஞானமாய், பரமானந்தமாய், சித்தத்தில் கொஞ்சங்கூட அசைவு இல்லாத பட்டமரம்போல் ஒரு பரமாத்மா இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இது இல்லையென்ருல் இந்த ஜீவாத்மாக்கள் கடைத்தேற வழியே இல்லை. சுத்த, நித்திய முக்தப் பொருளாக இருக்கிற ஈசுவரனிடத்தில் நாம் பக்தி செய்வது நாமும் அந்த மாதிரியே ஆகவேண்டுமென்பதற்காகத்தான்.

தொகுப்பு : ஏ.எஸ்.எம்.,சென்னை.

- நீ குழந்தைகளை வளர்க்கும்போதுதான் உன் பெற்ரேர்களின் அன்பின் திறத்தினை உணர முடியும்.
- ஒரு புன்முறுவல் பல துன்பங்களை விரட்டியடிக்கும்,
- நீ எந்த காரியத்தில் வெற்றி பெறவேண்டுமென்று எண்ணிஞலும் அதைப் பற்றி மூன்று பெரியோர்களிடம் கலந்து ஆலோசனை செய்.
- புதிய ஆடைகளே சிறந்தவை. பழைய நண்பர்களே சிறந்தவர்கள்.
- முதலில் நீ பத்தாயிரம் ருபாயைத் தேடு. பிறகு அந்தப் பத்தாயிரம் பல ஆயிரங்களைத் தேடித் தரும்.

—சீன, மலாய் பழமொழிகள்.

வீட்டின் நிலைப்படியின் மேல் லக்ஷ்மி வாஸம் செய்வதால், காலை வைக்கக்கூடாது. வீட்டில் நுழையும்போது வாசல் படிக்கு நேராக நுழையவேண்டும்.

மந்த்ராலய மகானை தரிசியுங்கள்

33

தூய மனதுடன் பக்தி மார்க்கத்தில் இருக்கும் சகலவிதமான ஜனங்களுக்கும் ஸ்ரீமகாவிஷ்ணுவின் பிரதிநிதி என்கிற வகையில் உலகுக்கெல்லாம் குருவாக நின்று சம்ரக்ஷணை செய்துவருகிறார் அருட்கடலான ஸ்ரீ ராகவேந்திரர். இங்ஙனம் வைஷ்ணவ தத்துவத்தை நிலைநிறுத்தி லோகசம்ரக்ஷணை செய்து வருகிறார். ஜாதிமத வேறுபாடின்றி உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் தெய்வ நம்பிக்கையை உண்டு பண்ணி, அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்கெல்லாம் தெய்வப் பிரசாதத்தை வழங்கியருள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே செய்த அவதாரமாதலால் 'ஜகத்குரு' என்று அழைக்கப்படுகிறார்.

ஸ்ரீனிவாஸராவ் என்பவர் சிக்மகளூர் என்ற இடத்தில் லக்ஷாதிபதி. மிகச் சிறந்த வழக்கறிஞர். மக்கட் செல்வம், உயர்ந்த சிந்தனைகள், திரண்ட ஐசுவரியம் ஆகியவை பெற்ற அவரது அமோகமான வாழ்வில் சர்க்கரை வியாதி என்ற புல்லுருவி முளைத்தது. மிகக் கட்டுப்பாடான ஆகாரம் உட்கொள்ள வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டும் குணம் தெரியவில்லை.

இந்நிலையில் அவரது மனைவியான ஸ்ரீமதி லலிதம்மா மந்திராலயத்திற்குச் சென்று வழிபாடு செய்யலாம் என்று கூறினார். ஸ்ரீனிவாசராவ் தமது குடும்பத்துடன் மந்திராலயம் சென்று பக்தியுடன் தரிசனம் செய்தார். பல நாட்கள் சென்றதும் அவர் மனம் சாந்தியடைந்து சந்தோஷத்துடன் சிக்மகளூர் திரும்பினார். அவரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் அவரது வியாதி பரிபூரணமாகக் குணமடைந்துவிட்டது என்று கூறினர்.

ஸ்ரீனிவாசர் மந்திராலயத்துக்குத் திரும்பிவந்து, ஸ்ரீகுருராஜருக்கு ஹஸ்தோதகம் கொடுத்து ஏராளமான காணிக்கைகளைக் கொடுத்தார் அனுதினமும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவலுடன் தமது வீட்டிற்கருகிலேயே ஒரு இலட்ச ரூபாய் செலவில் ஒரு மடத்தை நிர்மாணம் செய்தார். தாம்ஒருவரே செலவு செய்து அழகிய பிருந்தாவனத்தையும் அமைத்தார். சிக்மகளூர் வாசிகள் அவரது தூய சேவையின் பயனாக ஸ்ரீராகவேந்திரரைத் தரிசனம் செய்யும் பேறு பெற்றனர்.

ஸ்ரீசுயமீந்திர தீர்த்தர் மடாதிபதியாக இருந்தபோது ஸ்ரீராகவேந்திரரின் அற்புத சாதனைகளைப் பரவ

பி, எஸ், பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவரது குறிப்பின்படியே செட்டி நாட்டைச் சேர்ந்த ராம னுதன் வெள்ளி ரதமொன்றைப் பரி சளித்தார் ஸ்ரீசுயமிந்திரர் தமது சிஷ்யர்களுள் சிரேஷ்டரான ஒருவ ருக்கு மடத்தின் நிர்வாகப் பொறுப்பை ஒப்புக் கொடுத்தார். அவரை சுஜயீந்திரர் என அழைத் தார். தாம் மந்திராலயத்திலேயே பிருந்தாவன சமாதியடைந்தார்

ஸ்ரீமத்வாச்சாரியார் தொடங்கி 37வது மடாதிபதியான ஸ்ரீசுஜயீந் திரர் மத்வாசாரியரது 300வது ஜயந் தியை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார். மந்திரால யத்தை புனர்நிர்மானம் செய்து ஸ்ரீமடத்தையும் நன்கு விரிவாக்க வேண்டிய ஏற்பாடுகளை ஆரம்பித் தார். பிருந்தாவனத்துக்கு தங்கக் கவசம்சாத்தஎண்ணங்கொண்டார்.

அவரது மனம்நிறைந்ததொண்டு முடிவடையும் தறுவாய்—மேலும் மூப்பது தோலா தங்கம் தேவைப் பட்டது. இன்னும் இரண்டு நாட் களில் மேலும் பணம சேகரிததுத் தங்கம் வாங்கக் கூடிய அளவுகாலம் போதாது என்றும் தமக்கு உதவி செய்யும்படியும் ஸ்ரீசுவாமிகளைப் பிரார்த்தனை செய்துகொண்டே உறங்கச் சென்றார்.

மறுநாட் காலை கண் விழித்துத் தமது அன்றாட வேலைகளை முடித்த பின் மடத்துக்குச் சென்ற அவர் வாயிலிலேயே தமக்காகக் காத் திருந்த இருவரைச் சந்தித்தார். "ஸ்வாமிகளே! நான் பம்பாயைச்- சேர்ந்த ஹரிகிருஷ்ணன், என் கன வில் ஸ்ரீராகவேந்திரர் தோன்றி மூப் பது கிலோ தங்கம் கொடுக்கும்படி கூறினர் இது தங்கக் கவசம்பூர்த்தி யாவதற்கு தேவையாக|இருப்பதாக கூறினர்.

ஆகவே நான் அவரது உத்திரவு படி நீங்கள்செய்து கொண்டிருக்கும் கைங்கர்யத்துக்கு இவற்றைக் காணிக்கையாக அளிக்கிறேன். பெற்றுக்கொண்டு என்னை ஆசீர் வாதம் செய்யவும். இப்பேற்றை எனக்கு அருளிய ஸ்ரீராகவேந்திர ருக்கு நான் மிகவும் கடமைப்பட்ட வனுகிறேன் என்று கூறினர்கள்.

ஸ்ரீசுஜயீந்திர ஸ்வாமிகளும் ஹரி கிருஷ்ணனைக் கண்டதும் மகிழ்ச்சி யடைந்து உமக்கு ராகவேந்திர ஸ்வாமிகளின் கடாக்ஷம் பரிபூரண மாகக் கிட்டும் தங்கக் கவசத்துக் குத் தேவையான 800தோலா தங்க மும் இதோடு பூர்த்தியானது என்று கூறினர். (தொடரும்)

கம்பன் கவியமுதம்

ஜி. என். சுப்பாராவ், பி.ஏ.,பி.எல்., உடுமலைப்பேட்டை.

அமுதமும் நஞ்சாகலாம் அளவு கடந்தால்! ஆனால் அள்ள அள்ளக் குறையாத கொள்ளத்தெவிட்டாத அமுதம் ஒன்று உண்டெனின் அது கவியமுதமன்றோ! அதிலும் கம்பன் கவியமுதம் என்றால் அது கரை கடந்த கவின் சுவைக் கடலேயல்லவா? கம்பன் படைத்த அமுதத் துளிகள் சில கண்டு சுவைப்போமா?

எம்பெருமான் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமுதினைப் பருகிய தேவர்கள் மீண்டும் அத்தகைய அமுதம் கிடைக்குமா என்று ஏங்கியிருந்தார்கள்! அப்படியொரு அமுதம் பின்னரும் கிடைத்தது; அது சேது சமுத்திரத்தில் அனுமன் முதலாம் வானரவர்கள் அணை கட்டும்போது வேய்ந்த கற்களால் தெரித்த கடல்நீர்த் துளிகளாம் என்று கம்பன் கூறுகின்றான். அப்பாடலைப் படியுங்கள்;

குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரியும் திரைக்கடல்
துமிதம் ஊர் புக, வானவர் துள்ளினர்,
அமுதம் இன்னம் எழும் எனும் ஆசையால்

(யுத்த காண்டம்—சேது பந்தன படலம்)

உவர்ப்பாம் திரைகடல் தெரிக்கத் தோன்றிய நீர்த்துளிகள் வானை எட்டின என்றால் வானரசேனையின் வலிமைதான் எத்தகையது. அவ்வலிமை இராமநாமத்தை அவர்கள் உச்சரித்தலால் தோன்றியது அல்லவா? உவர்ப்பாம் கடல் நீர்த்துளிகள் வானவர்களுக்கு அமுதமாக இனிக்கக் காரணம், இனிமேல் அவர்கள் இராவணன் என்ற அரக்கனின் கொடுமைகளினின்றும் விடுதலை பெறுவார்கள் என்ற உவகையாலே அல்லவா? இவ்வாறு செம்பொருள் உள்ளடக்கி, நயம்பட உரைத்தக் கவிச் சக்கரவர்த்தியின் நாவன்மையினை, நாம் முழுதுமாக அளவிடக் கூடுமோ?

ஞானமும், கல்வியும் நன்கு அமையப்பெற்ற கம்பன், விநயத்தில் சிறந்தவன், வீண் பெருமை பேசத் தெரியாத விமலன் அவனே கூறக்கேட்கிறோம், இராம காதையைப் பாட அவன் முன் வந்தது வெறும் ஆசையால் மட்டுமே என்று, அதுவும் அளவறியா ஆசை தன்வலியறியா ஆசை, அலை வீசுதலால் உயர்ந்தும் அடங்கியும், அளவிற் சற்றும் குறையாத பெரும்பாற் கடல் ஒன்றின் முன் நின்று, ஒருசிறு பூனை, ஒரே தடவை தன் நாவால் நக்கி. அப்பாற்கடல் முழுவதையும் குடித்துவிட ஆசைகொண்டால், எப்படியோ, அப்படிப்பட்ட ஆசையால், தான் இராம காதையைப் பேசத் துணிந்ததாக, கம்பன் வெகு விநயமாக அவையடக்கத்திலேயே கூறுகிறான்.

அப்பாடலையும் படிப்போம் :—

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதை அரோ

(பால காண்டம் — பாயிரம்)

மேற்கண்ட இரு பாடல்களிலும், வானவர்கள் ஆசை, பூனையின் ஆசை, கம்பனின் ஆசை, பாற்கடலின் மேன்மை, கடலின் நீர்த்துளி பாற்கடல் அமுதினும் மிகு சுவையாக வானவர்கட்கு இனித்தமை, ஆகியவைகளைப் பற்றி அடுத்தடுத்து நாம் எண்ணிப் பார்க்க, நமக்குத் தோன்றும் இன்பம் முழுவதையும் எங்ஙனம் எழுத்தில் வடிக்க முடியும்?

இராமனைப் பெற்ற கோசலையும், வளர்த்த கைகேயியும் இராமன் அழகு முழுவதையும் கண்டு மகிழ்ந்திருக்கமாட்டார்கள். ஆனால் கம்பன் தன் காவியம் நெடுகிலும், அவ்வழகு முழுவதையும் அங்கங்கே, 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று நமக்கு எடுத்துக் காட்டுகிறான். முதன் முதலாக விசுவாமித்திரன் பின் செல்லும்போதே இராமனை அளவிட்டு அவனுக்கு ஒரு இலக்கணம் வகுத்து, தன் மனக் கண்ணால் கண்ட அவன் அழகை, நம்முன் கடை விரிக்கின்றான் கம்பன்,

இராமன் தன் பக்க வாட்டிலே உடையுடன் கட்டிக்கொண்டிருப்பது வெறும் வாள் அல்ல; வெற்றி வாள். அவன் ஒரு தோளிலே உள்ளது சாதாரணமான அம்பறாத் தூணியல்ல. அவ்வப்போது கூர்மை படுத்தப்படும் அம்புகள் அல்ல அவைகள். உண்மைக்கு எப்படி தேய்வு என்பதில்லையோ அது போல், அவ்வம்புகட்கும் அழிவென்பது இல்லை அது மட்டுமல்ல; மறத்திலும் அறவழி நின்று, என்றும் என்னைச் சார்ந்தவர்க்கு உறுதுணையாக நிற்கவல்ல அம்புகள் அவை அவைகளைத் தாங்கியது அத்தூணி. அத்தூணியே தேய்வு இலதாகிறது. அதுவும் மெய்மைபோல் தேய்வு இலதாகிறது. மற்றொரு தோளில் தாங்கிய வில், ஒரு தனி வில் — ஒப்பற்ற வில் — அது அரச வில் — கொற்றத்து வில்! கோதண்டமாம் அதற்கு வெற்றி மட்டுமே இலக்கு அல்ல; உலகைக் காத்தலும் அதன் சிறப்பு! எனவே அதைத்தாங்கியது இராமன் உலகைத் தாங்குவதற்காகவே என்று கம்பன் தெளிவுப் படுத்தும் பான்மைதான் என்னே? அது மட்டுமா, அன்று முனிவன் பின்பு இராமன் செல்ல முனைந்தது, பின்பு அவன் உலகைத் தாங்குவதற்கு அடிகோலுவதான செய்கையல்லவா? இவ்வாறு நம் சிந்தனையைத் தூண்டும் அப்பாடல் :

வென்றி வாள்புடை விசித்துமெய் மைபோல்
என்றுந் தேய்வுறுத் தூணி யாத்துஇரு
குன்று போன்றுயர் தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினான்

(பால காண்டம்—கையடைப் படலம்)

உண்மைதான்! இராமன் அழகை இவ்வளவிற்கு அவன் தாய்மார்களும் நுகர்ந்திருக்கமாட்டார்கள் என்பதில் ஐயமுண்டோ?

அழகிய மணமக்களை திருமண மண்டபத்தில் காணுகின்ற நிறை மனப் பெரியோர்கள் என்ன நினைப் பார்களோ அதை, தான் கண்ட நிறைவுபோல், கம்பன் தன் கவி நயத்தால் காட்டும் காட்சி ஒரு தனி அழகு. அது மட்டுமல்ல; அன்றே, கம்பன் சீதையின் தெய்வீகக் காதற் தன்மையையும், செம்மையாம் அவள் கற்புநெறியையும் தன் அகக் கண்களால் கண்டது போல், சிலவாகிய சொற்களால், சிறு குறிப்பால், சீதையை 'ஆர்வத்து இன்துணை அன்னம்' என்று குறிப்பிடுவதும் உணர்ந்துபோற்றத் தகும். இதோ அப்பாடல்;

மன்றலின் வந்து மணித்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை யன்னமும் எய்தி யிருந்தார்,
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்

(பால காண்டம்—கடிமணப் படலம்)

'இன்னலினும் இணை பிரியாது, நின்பின்னர் வருவேன். நிற்பிரிவினும் சுடுமோ பெருங்காடு?' என்று அண்ணல் இராமனிடம் பின்னர் சீதை கேட்பதாய் அமைத்துள்ள காட்சியை, முன்னதாக இங்கு நினைவூட்டவே, 'ஆர்வத்து இன்துணையன்னம்' என்ற சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது.

மேலும், 'ஆர்வத்து இன்துணை அன்னம்' என்று சீதைக்கு ஏற்றம் தந்து கூறியதற்கு விளக்கமாகவும், இராமனது ஆர்வத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போலவும் அமைத்துள்ள ஒரு காட்சியை கம்பன் நம்முன் நிறுத்துகிறான் அது. இலங்கையைக் காண்பதற்கு இராமன் தன் பரிவாரங்களுடன் மலையுச்சியில் ஏறும் காட்சியாகும். அப்பாடலையும் படியுங்கள் :—

அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல் தூண்டப் பொன்னகர் காண்பான் போலப்
பெருந்துணை வீரர் சுற்றத் தம்பியும் பின்பு செல்ல
இருந்த மால்வரையின் உச்சி ஏறினன் இராமன். இப்பால்

(யுத்தக் காண்டம்—இலங்கை காண்படலம்)

ஆயுள், பொருள், வீட்டின் ரஹஸ்யம், மந்த்ரம், ஔஷதம், சங்கமம், தானம், மானம், அவமானம் இந்த ஒன்பதும் ரஹஸ்யமாயிருக்கவேண்டும்.

கடவுளின் அருள் அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகள் உள்ளன. இந்த நான்கையே பக்தியோகம், கர்மயோகம், தியான யோகம், ஞானயோகம் என கீதை கூறுகிறது.

அருட்பிரகாச வள்ளலார் அருளிய

— ஆன்மீகன் —

மனமான ஒரு சிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மா இரான்
காம மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்
சினமான வெஞ்சுரத்து உழலுவான் உலோபமாய்
கிறு குகையி னூடு புகலுவான்
செறு மோக இருளிடைச் செல்குவான்
மதம் என்னும் செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும் அந்தோ
என்சொல் கேளான் எனது கைப்படான்
இதற்கு ஏழையேன் என் செய்குவேன்
தனம்நீடு சென்னையில் கந்தகோட்டத்து உள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே **22**

மனம் என்னும் சிறுபிள்ளைத்தனமான வழியில் என்னைப்படாதபாடு படுத்துகிறது நல்வழியில் செல்லாமல் பல இன்னல்களை அனுபவிக்கிறேன். ஆதாரமே இல்லாத என்னை, என் மனதைக் கட்டுப்படுத்தி நீதான் அருள்புரிய வேண்டும் என்று இப்பாடலில் முருகப் பெருமானை வேண்டுகிறார் வள்ளல் பெருமான்.

மனம் என்னும் ஒரு சிறுவன் குருவாகிய புத்தியை மதியாமலும், முருகா! உன்திருவடிப்பெருமையை விளக்கும் நல்ல நூல்களைக் கற்றுத் தெளிவு பெறாமலும், காமக் குழியில் விழுந்து சுழலாமலும் சும்மாவும் இருக்கமாட்டான்.

மேலும், கோபம், லோபமாகிய குகையினுள்புகுந்து அவதிப்பட்டும் மோகம் என்னும் இருளிலடைந்து

நிலைதடுமாறுவான். நான் எனது என்னும் அகங்காரமாகிய மலையி னுச்சியில் ஏறி அழிவிற்கு வழிதேடு வான்.

எந்தவித நல்புத்தியையும்கேளா மல், நல்வழியில் செல்ல அகப்படா மலும் அல்லல்படுகிறேனே! ஏழை யாகிய நான் என்ன செய்வேன் என்று மன்றுடுகிறார் கந்தனிடம்.

சென்னை நகர் வள்ளலார் வாழ் நாளில் செல்வம் கொழித்து செழித் திருக்கவேண்டும், அதனால்தான் செல்வமிகுந்து வளரும்சென்னையம் பதியில் கந்த கோட்டத்தில் வாழும் ஆறுமுகப் பெருமானே! நீதான் என் மனதை அடக்கி நல்வழிக்கு என்னை ஆளாக்க வேண்டும்என்று குமரப் பெருமான் திருவடிகளைப் போற்றி வேண்டுகிறார்.

ஆகவே, நாமும் அடிகளாரின் அருள்வாக்கை சிரமேற்கொண்டு ஷண்முகனின் பாதக் கமலங்களைப் பற்றி நல்வழிப் பெறலாமல்லவா?

வாய்கொண்டு உரைத்தல் அரிது என்செய்கேன் என்செய்கேன்
வள்ளல் உன் சேவடிக் கண்
மன்னுது பொன்ஆசை மண்ஆசை பெண்ஆசை
வாழ்ந்து உழலும் எனது மனது
பேய்கொண்டு கள்உண்டு கோவினல் மொத்துண்டு
பித்துண்டவன் குரங்கோ?
பேசிறு குலாலனல் சுழல்கின்ற திகிரியோ?
பேதை விளையாடும் பந்தோ ?
கால்கொண்டு பாய்கின்ற வெவ் விலங்கோ?
பெரும் காற்றினல் சுழல் கறங்கோ ?
கால வடிவோ? இந்திரஜால வடிவோ?
எனது கர்ம வடிவோ? அறிகிலேன்
தாய்கொண்ட சென்னையில் கந்தகோட்டது உள்வளர்
தலம் ஓங்கும் கந்த வேளே
சண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே 23

மண்ணாசை, பொன்னாசை, பெண் ணாசை இம்மூன்றுதான் இவ்வுலகில் மனிதனுக்கு முக்கிய பேராசையாய் மாறி பல புரட்சிகளை செய்து மனி தனை அழிவுப் பாதையில் அழைத் துச் செல்கிறது. பெரிய, பெரியசாம் ராஜ்யங்களெல்லாம் இவ்வாசை களில் மண்மேடு கண்டுவிடுகிற தல்லவா? இவற்றைப் பற்றிக் கொண்டு பயித்தியம் பிடித்து உன் திருவடியை நினையாமல் அலைந்து அவதிப்படும் என் மனதைக்கட்டுப் படுத்தி அடக்கி ஆட்கொள்ள வேண்டும் என்று இப்பாடலில் முருகப்பெருமானை வேண்டுகிறார் வடலூர் பெருமான்.

எல்லாப் பேறுகளையும் அளித்து அருள்பாலிக்கும் வள்ளலே! உன் திருவடியில் பதிந்து எண்ணுமல் என் மனமானது பொன், பெண், மண் என்னும் இம்மூவாசைகளில் மதி மயங்கி உழல்கின்றதே! அம் மனமானது செய்யும் கொடுமை

களை எவ்வாறு என் வாயினுல் சொல்லுவேன்.

நான்படும் இக்கொடுமைகளுக்கு என் செய்வேன்? பேய் பிடித்து, கள் குடித்து, தடியால் அடிபட்டு, குயவன் ஆட்டும் சக்கரம்போல் சுழலும் என் மனம் பித்தம் பிடித்த குரங்கோ? காற்றில் தடுமாறிச் சுழலும் காற்ருடியோ? எமனுடைய உருவமோ? மாயாவித்தையின் வடிவமோ? என் எண்ணத்தின் தோற்றமோ? எதுவுமே அறியாதவனுக இருக்கின்றேனே! அப்பா! முருகா!

பெற்ற தாயைப் போல் தன்னை வந்தடையும் குழந்தைகளைக் காப்பாற்றி பாதுகாத்து உயர்வளிக்கும் சென்னையில் கந்தக் கோட்டத்துள் அமர்ந்து அருளாசிகளை வாரி வழங்கும் ஆறுமுகப் பெருமானே! தெய்வங்களுக்கெல்லாம் மணிபோன்று தூய்மையானவனே! என்னைத் காக்கும் தெய்வமே என போற்றுகிருர் நம் வள்ளலார்.

வள்ளல் வழியில் நாமும் முருகனைப் பாடிப் பணிந்து நற்பேறுபெறலாமல்லவா?

பெண்களுக்கு மட்டும்

முகம் பளபளப்புடன் இருக்க......

- அரைத்து எடுத்த தேங்காய்ப்பாலுடன் எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்க்கவும். பிறகு கசகசாவையும் பின் பாலேட்டையும் சேர்த்துக் குழைக்கவும். பிறகு இதை தடவி வரவும். சோப்பை விலக்குதலசியம். தொடர்ந்து செய்து வந்தால முகம் கண்ணுடிபோல் மின்னும். (கசகசாவை அரைத்துச் சேர்க்கவும்).
- குளிப்பதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பு ஒரு ஸ்பூன் தேஙகாயெண்ணெயை எடுத்து முகத்தில் நனருகத் தடவுங்கள். ஊறிய பிறகு பயத்தம் பருப்பு மாவினுல் தேயத்து குளித்து விடுங்கள். முகம் பட்டு போலிருக்கும்.

யோசனை : கே. ஜெயா, சேலம்–1.

மௌனனகையா? புன்னகையா

பட்டு சுப்ரமணியம்

ஆலையின் சங்கு ஊதி ஓய்ந்தது. மாலை நான்கு முப்பது மணி. இரண்டாவது ஷிப்டிற்கு ஆட்கள் உள் நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அன்று சம்பள நாள். ஐந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே வந்து விட்டான் அந்த ஆலையின் தொழிலாளி காசிநாதன்.

வெளியே வந்தவன் நுழைவாசலில் நின்றுகொண்டு உள்ளிருந்து வரும் தொழிலாளர்களை நோட்டமிட்டுக்கொண்டிருந்தான். அவனை பார்த்து சிலர் கேலி செய்தும் சிரித்துக் கொண்டும் போய்க் கொண்டிருந்தனர்.

டேய் ராஜு......என்று ஓடிச் சென்று ஒருவனை நிறுத்தினான். எடுடா...என்றான்.

டேய் காசி...இந்த மாதம்ரொம்ப கஷ்டமா இருக்குதடா. அடுத்த மாதம் இந்த வட்டியும் அடுத்த மாத வட்டியும் சேர்த்துக் கொடுக்கிறேண்டா'

ராஜு......அசலை எப்பொழுது வேண்டுமானாலும் கொடு. ஆனால் வட்டியை மாதா மாதம் கண்டிப்பாய் கொடுத்திடனும். உ...ம்...சரி சரி...எடு என்று கூறி வரும் கூட்டத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தான்.

இருடா...என்று சம்பளம் வாங்கிய பணத்தைப் பிரித்துப் பார்த்தான் ராஜு.

அதற்குள் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை பிடுங்கிக் கொண்டு, சரி நேரமாகிறது முருகேசனை பார்க்க வேண்டுமென்று வேகமாக நடந்தான்.

வாடா......வட்டிக்காரா! செட்டிநாட்டு செட்டியார் வட்டியை மறந்தாலும் நீ மறக்கமாட்டியே. இந்தியன் பங்சுவாலிடியிலேயே இது ஒன்றுதான் ஒழுங்கா நடக்கிறது' இந்தா, போன மாத வட்டி பதினைந்து ரூபாய் என்று கொடுத்து விட்டு, மீதியை கணக்குப் பார்த்து கொண்டு சென்றான்.

முருகேசன்னு...முருகேசன்தான் தங்க குணம். ஆனால் ஆண்டவன் இவன் காலைத்தான் ஊனமாக்கி விட்டான். அவனவனை தேடி போய் வட்டி கேட்டா கொடுக்கிறதே கஷ்டம். இவன் என்னைத் தேடி வந்து வட்டி கொடுக்கிறான். அடுத்தவன் பட்டினி என்றால் கையில் கிடைத்ததைக் கொடுப்பவன். இவனுக்கா இந்த நிலை என்ற கலக்கத்தோடு அவன் நடந்துசெல்வதையே நோக்கிக் கொண்டிருந்தான்.

மறந்து போயிட்டேன். இந்த பாஸ்கர் பையன் போன மாதம் ஏமாற்றி விட்டான் இந்த மாதம் விடக்கூடாது. ஆளையேகாணோமே ஒரு வேலை போயிட்டு இருப்பானோ?' சரி இன்னும் கொஞ்ச நேரம் பார்க்கலாம். இல்லை வீட்டிற்கே போய் விடலாம்.

அப்பொழுதுவட்டிக்காரகாசியை ஏமாற்ற நினைத்த பாஸ்கர் சுவரேறி தப்பிக்க முயற்சித்து அவனருகிலேயே குதித்துவிட்டான். தன் பக்கத்தில் குதித்தவனை கட்டிப் பிடித்துக்கொண்டான் என்னடா.. புது மாப்பிள்ளை மாமியார்வீட்டுக்கு போக போகிறேனென்று கூறி போன மாதம் ஏமாற்றிட்டே. இந்த மாதம் என்னடான்னு சுவரேறி

வட்டியை.

அப்பா...ஆக மொத்தம் இன்றைக்கு வட்டி வசூல் அறுபத்தைந்து இன்னொருவன் முப்பத்தைந்து கொடுக்கணும். ஆகமொத்தம் நூறு ரூபாய். இந்த ரூபாயை இன்னொருவனுக்கு வட்டிக்கு விட்டால் மாதம் பத்து வட்டி. ஆ...ஹா...வட்டிக்கு வட்டி......நம் பணம் குட்டி குட்டியா சேருது என்று நினைத்துக் கொண்டே சென்றான்

காசி அண்ணே...உங்களைத்தான் தேடிக்கிட்டு வறேன் என்றான் எதிரில் வந்த ஒருவன்,

வாப்பா சேகர்! நானும் உன்னைத் தான் நினைத்துக் கொண்டு வருகிறேன்; இந்தாப்பா பணம் வட்டி போக பாக்கி தொண்ணூறுஇருக்கு மாதா மாதம் ஒழுங்கா வட்டியைக் கட்டிவிடு.

காசியின் வரவை எதிர்நோக்கி அவன் மனைவி சித்ரா காத்துக் கொண்டிருந்தாள்.

என்னசித்ரா...சாப்பாடு ரெடியா என்று அலுப்போடு உள்ளே நுழைந்தான் இரவு எட்டுமணிக்கு.

ஆமாம்...நம்ம குழந்தைகளுக்கு ஹார்லிக்சும், அமுலும் வாங்கி வரச் சொன்னேனே வாங்கி வந்தீர்களா? மாதம் ஒரு முழம் பூவும் மூன்று பொட்டலமும்தான் நாங்கள் கண்டது. உடுத்திக் கொள்ள அழகான துணிமணி உண்டா? போட்டுக்க ஒரு நகை தட்டுண்டா? எதிர்வீட்டு அம்பிகா இரண்டு சவரத்திலே செயின் பண்ணி போட்டுக்கொண்டிருக்கிறாள். நீங்க என்னடான்னா ...சதா...வட்டி...வட்டின்னு...

சித்ரா பெண்களுக்கு புன்னகை தாண்டி. அழகு பொன்னகையல்ல, பொன்னு மின்னினா ஆசைதீராதடி பெண்ணு சிரிச்சாத்தான் ஆசை [illegible] னகை வேண்டுமா? புன்னகை போதுமா?

மீண்டும் சொல்கிறேன் பொன்னகை உயிருக்கு ஆபத்து, புன்னகைதான் மனதிற்கு டானிக் என்றுகூறிக்கொண்டே குறட்டை விட்டான்.

சில மாதங்கள் ஓடியது. காசிக்கு கடுமையான டைபாய்டு ஜுரம். தொழிலாளர் மருத்துவ மனைக்குச் சென்றுவந்தான். நோய்தீரவில்லை. திடீரென்று ஒருநாள் கடுமையான குளிர், உடலெங்கும்ஈரம்தட்டியது. ஜன்னி பிடித்துவிட்டது. ஏதோ பிதற்றினான். அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் முதலுதவி செய்தனர். பலனில்லை மாதக் கடைசி. சித்ரா கையில் பணமுமில்லை. சிலரை அனுப்பி வட்டிக்கு விட்டவர்களிடம் பணம் கேட்டாள். எல்லோரும் அனுதாபப்பட்டனர். ஆனால் யாரிடமும் பணம் இல்லை, முதல் தேதியைக் காட்டினர்.

அவன் உயிருக்கே ஆபத்தாய் தோன்றியது, செய்வதறியாதுகண்ணீர் விட்டாள். அவள் மீது பரிதாபப் பட்ட எதிர்வீட்டு அம்பிகா தன் ஒரு சவரன் நகையை கொடுத்தாள் நண்பர்கள் உதவியால் அடகு கடையில் வைத்து பணம் வந்து சேர்ந்தது. உடனே தனியார் மருத்துவமனையில் சேர்ந்தனர்.

சில நாட்கள் கழித்து வேலைக்கு செல்லும் அளவிற்கு உடல் தேறியது அவன் படுக்கையிலிருந்தபோது சித்ரா பட்ட துன்பங்களையும் எதிர்விட்டு அம்பிகா செய்த உதவியையும் கூறி கண்ணீர் விட்டாள். அவள் கண்ணீரை துடைத்து ஆறுதல் கூறி அம்பிகாவிற்கு நன்றி செலுத்தினான்.

பூரண குணமடைந்துவேலைக்குச் சென்றான். அன்று சம்பள நாள். இரவு எட்டு மணிக்கு வீட்டிற்கு வருபவன் மாலை ஆறு மணிக்கெல்

[illegible] இரண்டு பொட்டலங்களையும் பெற்றுக் கொண்ட சித்ரா சலிப்போடு கீழே வைத்துவிட்டு தன்வேலையை கவனிக்கலானுள்.

என்ன சித்ரா! பையை அப்படியே வைத்துவிட்டாய். கொட்டிப்பார் என்ருன்.

அலட்சியமாகக் கொட்டிஞள். பழ வகைகளும் தின்பண்டங்களும் கீழே விழுந்தன. அதை பின் தொடர்ந்து அரை செண்டு மல்லிகைப்பூவும் ஆர்லிக்ஸ், அமுல் டின்னும் தொப்பென்று தரையில் உட்கார்ந்தது. அவளுக்கு வியப்பாய் தோன்றியது. யாருக்குங்க இதெல்லாம்?

நமக்குத்தான் என்ருன் காசி.

அருகிலிருந்த பார்சலைப் பிரித்தாள்,

இது...! நீங்கள் உடம்பு சரி இல்லாதபொழுது அம்பிகா அக்கா கொடுத்துதவிய செயின், அடகு கடையிலிருந்து வாங்கிவந்து விட்டீர்களா?

இன்னும் பார் என்ருன்,

[illegible] வைத்தார்களா? புதுசா இருக்கே!

நீ என் பெண்டாட்டிதானே.என் புத்தி உனக்கில்லாமலா போகும். இது வட்டிக்கு வாங்கவில்லை. என் தங்கக் குட்டிக்கு வாங்கி வந்தேன். வட்டிக்கு விட்டிருந்த பணத்தையெல்லாம் சேகரித்து பத்து சவரனில் செயின் செய்து கொண்டு வந்தேன்.

உண்மையாகவா?

ஆமாம் அப்படியே இரு என்று கூறி அதையெடுத்து அவள் கழுத்தில் கட்டிஞன் சித்ரா...வட்டி வட்டியென்று அலைந்தேன். ஆனுல் அந்த வட்டி சமயத்திலே என் உயிரைக் காப்பாற்றவில்லை. இந்த நகைதான் என் உயிரைக் காப்பாற்றியது. இனி தர்மம் செய்தாலும் செய்வேனே தவிர, வட்டியென்றும் கேட்கமாட்டேன். கொடுக்கவும் மாட்டேன்.

நான் திருந்தி விட்டேன். இல்லை உன்னுலே திருத்தப்பட்டேன். ஆசைக்கு உன் புன்னகை வேண்டும். ஆபத்துக்கு இந்தபொன் நகை வேண்டும் என்பதை உணர்ந்து விட்டேன் என்றவாறு ஆசையுடன் அரைசெண்டு பூவையும் அவள் தலையில் வைத்தான். ●

வைத்தியக் குறிப்புகள்

தொண்டைக் கம்மல்

தேன் மெழுகை பசு நெய்யில் போட்டு உருக்கி சிறிது சாப்பிட ,,தொண்டைக் கம்மல் தீரும்.

பருக்கள் உடைய

துத்தி இலையை அரைத்து பருக்களின்மேல் தடவ பருக்கள் உடையும்.

ஈர் போக......

படிகாரத்தை பொடித்து மை போல் அறைத்து நீரில் கரைத்து தலையில் தேய்ந்து சில மணி நேரம் கழித்து குளிக்க ஈர், பேன் போகும்

அறிவு உண்டாக

திருநீற்று பச்சிலையைப் பாலில் அரைத்து உட்கொண்டால் அறிவு உண்டாகும். —ஆர். ராஜ்குமார்.

அறிஞர்கள் சொன்னவை

மனம் ஓர் மாளிகை. இன்பத்தை துன்பமாக்குவதும், துன்பத்தை இன்பமாக்குவதும் மனம்தான். —மில்டன்

ஒழுக்கம் தவறியவன் பக்தியில் பிரவேசித்து விட்டால், அவனை விட சிறந்த பக்தர் கிடைக்கமாட்டார். —ஜான்ஸன்.

என்றும் கோயிலுக்கு நீதிதான் அஸ்திவாரம். ஆனால் நீதியை விட்டு, விட்டு அன்பை மட்டும் பெற முடியாது. —ரஸ்கின்.

ஒவ்வொருவரும் உயிரை மேன்மையாகவே மதிக்கின்றனர். ஆனால் வீரர்கள் உயிரைவிட மானத்தையே சிறந்ததாக எண்ணுகிறார்கள்.

— ஷேக்ஸ்பியர்.

நம்முடைய மனதில்தான் பெருமை உண்டாகிறதே தவிர மற்றவர்கள் கருத்தில் இல்லை. —கோல்ரிட்ஜ்.

தவறு இழைத்தால் நாணுதல் சரியே, ஆனால் அந்த தவறை ஒப்புக்கொள்ள நாணுதல் கூடாது. —ஆல்பரி.

சொத்துக்களை இழந்துவிட்டால் திரும்பப் பெற முடியும். நாணயத்தை இழந்துவிட்டால் ஒருபோதும் திரும்பப் பெற இயலாது.

—மில்டன்

வீரனுடைய சொற்கள் தெளிவாக இருக்கும். உண்மையோடு கலந்து நிற்கும். —அரிஸ்டாடில்,

இதுதான் செய்யத் தகுந்தது என்று தெரிந்திருந்தும் அதை செய்யாதவனே கோழையிலும் முதல் கோழையாவான். —கன்பூஷியஸ்.

விரும்பியபடி செய்வதற்கு முடியாவிட்டாலும், முடியும்வரை செய்தல் வேண்டும். —டிராக்ஸ்,

உண்மையுள்ள மனைவி கணவனுடைய வீட்டில் அடிமை, அவனுடைய மனதில் அரசி ஆவாள். —ரஸ்கின்

தொகுப்பு : கோபி சிவன்

ஒழுக்கம் வெண்மையான காகிதம் போன்றது. ஒரு தடவை அதில் சிறிது கறை படிந்தாலும் அதை முன்புபோல் வெண்மையாக்குவது மிகவும் கடினம். —ஜே. ஹேவஸ்

எல்லா மிருகங்களையும் விட தடித்த தோல் கொண்ட ஒரே மிருகம் 'மனிதன்'. —எம். டபிள்யூ. ஜாக்ஸன்.

சுத்தமான வீட்டை பள்ளிக்கும், கண்ணியமும் நேர்மையும் நிறைந்த பெற்றோரை ஆசிரியர்களுக்கும் ஒப்பிடலாம்.

—மகாத்மா காந்தி

தொகுப்பு : எஸ். பாலகிருஷ்ணன்

பாபா சொன்ன கதைகள்

13

தன்னைப் பெற்ற தாயைவிட தெய்வமென்பது மற்றொன்றில்லை

ஓர் நாள் சாயங்காலம் 4 மணி சுமார் மேகங்கள் ஆகாயம் பூராவும் சூழ்ந்து ஒரே இருட்டாய்விட்டது குளிர்க் காற்று வீசிற்று. தூறல் ரோடுகளைப் பூராவிலும் நனைத்துசுர மாக்கிவிட்டது, திடீரென கல் மாறி விழலாயின. குழந்தைகள் அவசர அவசரமாய் பள்ளிக்கூடங்களி லிருந்து வெளியில் வந்து அவரவர் களின் வீடுகளை நோக்கி ஓடினர்.

பாபம்-ஓர் கிழவி வெகு நேரமாய் ஓர் வீட்டின் வாசற்படியிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவள் ரோட்டில்வருகிறவர்களையும் போகி றவர்களையும் பார்த்துக் கொண் டிருந்தாளேயன்றி அந்த இடத்தை விட்டு—ரோட்டைத் தாண்டிச் செல்ல பிரயத்தனபட்டதாய்தெரிய வில்லை. ஏனென்றால் குடுகுடு கிழவி அவள் முகமோ – பல சுருக்கங்கள் விழுந்து மிகவும் பரிதாபமாய் காணப்பட்டது. அதற்குத் துணை யாக,மழையில் நனைந்ததினால்-குளி ரில் நடுங்கிக் கொண்டிருந்தாள். ஓர் அடி எடுத்துவைத்ததும்வழுக்கி விழுந்துவிடுவோமா என்ற பயத்தி னால் அடி எடுத்துவைக்கவும்தயங்கி நின்றுகொண்டிருந்தாள். அப்படி இருந்தும் வருகிறவர், போகிறவர் யாருமே அவள் பக்கமாய் பார்த்த தாய் தெரியவில்லை. பள்ளிக்கூடத் திலிருந்து அவசர அவசரமாய் வீட் டிற்குச் செல்லும் மாணவர்களில் சிலர், அந்தக் கிழவியைப் பார்த்தார் களே தவிர, தங்கள் தங்கள் வீட் டிறய் அவசரமாய்ப் போய் சேரும் உத்தேசத்தால் அவளையும் அவள் அவஸ்தையையும்யாருமே உணரவில்லை.

அந்தப் பள்ளியின் சிறுவர்களில் மோகன் என்ற மாணவன், பள்ளி யைவிட்டு வெளியில் வந்தான். அவனோ மிகவும் திடசாலி, விளை யாட்டுகளில் முதலிடம் பெற்றுவந் தான். பள்ளியில்புட்பால் விளையாட் டில் முதல் பரிசுபெற்றவன். அவன் கண்களுக்கு கிழவி தோற்றமளித் தாள். அவள் நடுங்குவதைக் கண் டான். அவள் சகாயமின்றி இருப்ப தையும் உணர்ந்தான், உடனே அவ னுக்குள் ஓர் ஆலோசனை ஏற்பட் டன அந்தக் கிழவியின பக்கமாய் ஓடினான் இதையெல்லாம்பார்த்துக் கொண்டு நின்ற தன் மாணவத் தோழர்கள் அவனைக் கூப்பிட்டார் கள். மோகன் மழைநின்றுவிட்டது, வீட்டிற்குப் போய் திரும்பி வா, புட் பால் ஆடலாம் என்றனர். ஆனால் அவனோ அவர்கள் கூப்பிடு வதையோ, சொல்கின்ற சொற் களையோ காதில் வாங்கிக்கொள்ள வில்லை. நிம்மதியாகவும் மெதுவாக வும் அந்தக் கிழவியின் பக்கமாய்ச் சென்று, பாவம, நடுங்கிக்கொண் டிருக்கிறாய், என் சகாயம் தேவை படுமா? என்று அன்புடன் கேட் டான்

அவனுடைய அன்புடன் கூடிய பேச்சுகள் அவளை உற்சாகப்படுத்தி ஓர் சக்தியை ஏற்படச் செய்தது. அவள் முகம் பிரகாசமடைந்தது. மெதுவாகத் தன் பொக்கைவாயால் சிரித்தாள். கொஞ்ச நேரத்திற்கு முன் தனக்கு யாருமே துணையில்லை எனவும், தனிப்பட்டவள் எனவும், திக்கில்லாதவள் என எண்ணியவள் மறுபடி பகவானுடைய கருணை கடாக்ஷத்தினால் தன்னை நாடி வந்த சிறுவனைப் பார்த்தாள். அவனும் உடனே, 'அம்மா' என பரிவுடன் கூப்பிட்டான். அவளும் 'அன்பனே இந்த ரோட்டைத் தாண்டி. என் வீடு உள்ளது. அங்கு என்னைக் கொண்டு போய் சேர்க்கும் சகாயத்தைச் செய்வாயா? நிலத்தில் கால் வைத்ததும் வழுக்குகிறது, என்னால் நடக்கமுடியவில்லை, கால்கள் நடுங்குகின்றன என்றாள். உடனே மோகன் அவளுடைய கையை தன் கழுத்தைச் சுற்றிபற்றிக் கொள்ளச் செய்து 'மெதுவாய் நட, அம்மா, உங்களை உங்களதுவீட்டில்கொண்டு விடுகிறேன்' என இருவரும் மெதுவாய் கிழவியின் வீட்டை நாடி நடந்தனர்.

அவர்கள் இருவரும் நடக்கும் போது அவர்களுக்குள் அன்புடன் ஏற்பட்ட சம்பாஷணை விவரம் :—

அவனுடைய சேவா செய்கையை பற்றிக் கிழவி புகழ்ந்தாள். மறுபடி அவனுடைய இருப்பிடம், அவனுடைய தாய் தந்தையரின் விவரங்களைக் கேட்டறிந்து கொண்டாள். தன் [வீட்டையடைந்ததும் அவனுக்கு ஆசி கூறினாள். அளவிலடங்காத ஆனந்தம்–மனம் அடங்கி பேச முடியாமல் திணறினாள். அவள் இரண்டு கைகளையும் கூப்பி, 'அந்த பகவான் உனக்குச் சமீபமாய்இருப்பார், அவர் உனக்கு எப்போதுமே ஆனந்தமயமான வாழ்க்கையை அருளுவார்' எனக் கூறினாள்.

மோகன் அளவிலா ஆனந்தத்துடன் தன் வீடு சேர்ந்தான். அங்கு தன் பள்ளித் தோழர்களைச் சந்தித்தான் அவர்கள் அவனிடம், யார்? அது? அந்தக் கிழவி என்றனர் மறுபடி அவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டாய்? அவள் யாருடைய தாயோ? நீஏன் அவளுக்குச்சகாயம் செய்யவேண்டும்? எனமற்றோர் நண்பன் கேட்டான். இதைக் கேட்ட மோகன் 'நல்லகேள்விடா. இது என கூறிவிட்டு. நானில்லாதபோது என் தாயாருக்கு அப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டால் நீங்கள் யாராவது சகாயம்செய்யமாட்டீர்களா? அவள் உண்மையில் உங்களில் ஒருவனுடைய தாயாயிருந்தால் சும்மா இருப்பீர்களா? என்றதும் யாவரும் ஸ்தம்பித்துப்போய்விட்டார்கள்.

மோகன் கூறிய விஷயம் யாவரையும் ஸ்தம்பிக்கச்செய்தன. அவர்களில் ஒருவன், மோகனுக்கு தன் தாய் என்றால் எவ்வளவோ அன்பு என்றான். ஆம் யாரானாலும் அவரவர்கள் தாயாரை நேசிக்காமலா இருப்பார்கள். பத்து மாதங்கள் சுமந்து எவ்வளவோ கஷ்டங்களுக்குப்பிறகு பெற்றுவளர்த்த தாயாரின் பேரில் அன்பு இல்லாவிட்டால், இந்த பிரபஞ்சத்தில் யாரை நேசிப்பது? தன்னை உண்டாக்கிய தாயாரையே கௌரவிக்காமற்போனால் மகன் எனவும் கூறவும் முடியுமோ என மற்றொருவன் கூறினான்.

மோகன், மோகன், உன் மூலமாய் ஓர் நல்ல விஷயத்தைக் கற்றுக் கொண்டோம். நீ எங்களுக்கு நண்பனாக இருப்பதற்கு எவ்வளவோ சந்தோஷப்படுகிறோம் என நண்பர்கள் பலரும் ஒன்றாய் கூறினார்கள்.

1. மோகனைப் போல்ஒவ்வொருவரும் யாவரையும் தாய்போல் நேசிக்கவேண்டும்.

2. கிழவிக்கு அன்புமொழிகளால் உற்சாகம் ஏற்பட்டதுபோல் ஒவ்வொருவரையும் அன்பால உற்சாகபடச் செய்யவேண்டும்.

தொகுப்பு : R. பாலபட்டாபி,
உடுமலைபேட்டை.

விவேகமும் பக்தியுணர்வும்

சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகள்

சில பொருட்களைப்பற்றி நாம் வெறும் தர்க்கத்தினுல் மட்டும் தீர்மானம் செய்துவிடமுடியாது. அந்த மாதிரி நிலைகளில் வேதம் நமக்கு உற்ற நண்பனைப் போல் உதவுகிறது தேவையான விளக்கங்களை தருகிறது. அதனுல்தான் 'ஆப்த வாக்யம்' என்றுவேதத்தைச்சொல்கிருர்கள், ஆனுல் இதற்கு வேதத்தில்நம்பிக்கைவேண்டும் நம்பிக்கை இல்லாதவர்களும் இருக்கலாம் அல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு நாம் தர்க்கரீதியாகத்தான் பதில் சொல்லவேண்டிவரும்.

வேதத்தை நம்புகிறவர்களுக்கு முதலில் இறையுணர்வு பக்தி அவசியம் வேண்டும். எந்தப் பொருளையும் அணுகுவதற்கு முதலில் ஒரு தகுதிவேண்டும், வேதத்தைப்பற்றி பேச கடவுள் பக்திதான் முதல்படி. வேதத்தைப் புரிந்துகொள்ளவும் இந்த பக்திஉதவுகிறது. கடவுளிடம் பக்தி செலுத்துவது என்பதுமக்கள் சமுதாயத்துக்குப் பொது நியதி இறையம்சத்தைப்பற்றி, அவரவர்கள் தங்கள் அறிவு நுட்பத்துக்கேற்பப் புரிந்துகொள்வர்.

கடவுள் இயல்பைப் பற்றிப் பல விதமாக, தாங்கள் அறிந்தபடி கூறுவதைப் பார்த்திருக்கலாம். ஆனுல் எங்கும் வியாபித்துள்ள ஸர்வக்ஞனை இறைவனின் நம்பிக்கையை, அருள் திறத்தை, அவன் தாங்கும் திருவுருவங்களின் தத்துவத்தை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது.

ஒரு வக்கீலைவைத்துஒருவழக்கை நீதிமன்றத்தில் வாதாடுகிருேம். வக்கீலின் வாதத் திறமையின்மையாலோ அல்லதுவேறுகாரணங்களாலோ அந்த வழக்குத் தோற்றுவிடலாம். மீண்டும் திறமையான வக்கீலை வைத்து மேல் மன்றத்தில் வழக்கைத் தொடர்கிருேம் அப்போது வழக்கில் வென்றுவிடுகிருேம். அப்படி இரண்டாம் முயற்சியில் வென்றதுக்கு வக்கீலின்வாத திறமை காரணமா? அல்லது புதுச் சட்ட நுணுக்கத்தை எடுத்துக் காட்டியதனுல் வழக்கு வென்றதா? இப்படியொரு சந்தேகம் வரலாம், ஆகவேதான் சங்கரபகவத்பாதர் வேதத்தை அனுசரித்து வரும் தர்க்கத்தையே நாம் பின்பற்றவேண்டும் என்று கூறியிருக்கிருர். வாதத் திறமை மட்டும் வழக்கை வெல்லப் போதாது. ஆதாரமான சட்ட நுணுக்கந்தான் வழக்கை வெல்ல காரணம் இப்படியெல்லாம் வேதத்தால் நமக்குப் பயன்கிடைக்கிறதா? அதன் அடிப்படையில் காணும் தர்க்கரீதியான முடிவுதான் இயல்பானது. இறைவன் சர்வ வியாபியாக இருக்கிருர் என்பதில் சந்தேகமில்லை. 'சம்சயாத்மா விநச்யதி' என்று கூறுவார்கள் உலகியல்இன்பங்களில் மூழ்கி பொருள்களின் மேல் உள்ள ஆசையை விட முடியாதவர்களுக்குத்தான இறைவ



னின் அருளில் சந்தேகம் உண்டாகும். இறைவன் இல்லை என்று கூறவும் இவர்களுக்குத் தைரியம் இருக்காது. இறைவனை ஒப்புக்கொள்ளவும் தயங்குவார்கள். இந்த இரண்டுங் கெட்டான் நிலைக்குக் காரணம் உலகப்பற்று.

ஸர்வக்ஞன், ஸர்வவியாபி என்று வேதங்கள் வர்ணிக்கும் இறைவனின் அருளின் சம்சயம் கொண்டவர்கள் நிச்சயம் நகரத்தையே அடைவர். இகத்திலும் இன்பம் காணமாட்டார்கள்.

இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்வார்கள். ஒரு குடியானவனிடம் ஒரு கோழி முட்டை இருந்தது. அந்த முட்டை பொரித்தால் ஒரு கோழிக்குஞ்சு வெளிவரும். அந்தக் குஞ்சு பெரிதானால் முட்டையிடும். அந்த முட்டைகளிலிருந்து பல் கோழிகள் உண்டாகும். பெரிய கோழிப்பண்ணை உருவாக்கிவிடலாம் என்று கோட்டை கட்டினான். ஆனால் முட்டையை சுவைத்துப் பார்க்கும் ஆசை அதில் பாதியைச் சாப்பிட்டு விட்டு மீதிப் பாதியைக் குஞ்சு பொரிக்க வைத்திருந்தானாம்.

நாஸ்திகனாக இருப்பவன் நல்ல சுகபோகங்களை இம்மையில் அனுபவிப்பான். ஆஸ்திகனாக இருந்தால் இம்மைக்கும், மறுமைக்கும் இன்பம் வருமாறு செய்துகொள்வான். இரண்டும் இல்லாதவன் தானும் சாப்பிடமாட்டான், பிறருக்கும் உதவமாட்டான் என்று நீலகண்ட தீட்சிதர் கூறுகிறார்.

சந்திர மண்டலமும் சரி, பூவுலகமும் சரி பலவிதமான பரமாணுக்கள் பலவிதங்களில் ஒன்று சேர்ந்தே உண்டாகியிருக்கின்றன. பரமாணுவிலிருந்துதான் அகிலமே தோன்றியிருக்கிறது.

பரமாணுவிலும் பரமாணுவாகவும் இறைவன் விளங்குவதாக நம் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அகிலத்திலுள்ள பரமாணு எல்லாவற்றுள்ளும் இறைவன் இருக்கிறான் என்பது இதனால் தெளிவாகும். நம்குரலை பெரிதுபடுத்தி ஒலிக்கும் ஒலிப்பெட்டியைக் கண்டுபிடித்திருக்கிறார். நம் உடையை ஒருவர் நெய்து தந்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் ஒரு காரண கர்த்தா இருக்கிறார். இந்த பிரபஞ்ச விஷயத்திற்கும் இந்த உதாரணம் பொருத்தமாக இருக்கும். இந்த உலக படைப்புப் பற்றிய அறிவு ஏற்பட்டு இதைப் படைத்திருக்கிறான். அவனைத்தான் ஈசுவரன் அல்லது இறைவன் என்கிறோம்.

ஒரு சாதாரண மண் பானையைக் கூட நம்மால் செய்ய முடியாது. அதற்கும் கம்பையும் சக்கரத்தையும் மண்ணையும் உபயோகித்து ஒரு குலாலரினால்தான் பானையைச் செய்ய முடிகிறது. அகில உலகத்தையும் அண்ட சராசரங்களையும் படைத்துள்ள கர்த்தா எவ்வளவு மகத்தான சக்தி உள்ளவராக இருக்கவேண்டும்.

இறைவன் எந்த மூலப் பொருளை வைத்துக்கொண்டு இந்த உலகத்தைப் படைத்தான்? அப்படி இருந்திருந்தால் அந்தப் பொருளைப் படைத்தவர் யார்? அதையும் இறைவன்தான் படைத்தானா என்று நாஸ்திகர்கள் சில கேள்விகளை எழுப்புவார்கள்.

ஒரு ஜால வித்தைக்காரன் நொடியில் ஒரு மாஞ்செடியை உற்பத்தி செய்து காட்டுகிறான், இனிப்புப் பண்டங்களை வரவழைத்து கொடுக்கிறான். அவன் கையில் எந்த பொருளையும் வைத்துக்கொண்டு இவற்றைச் செய்யவில்லை. மந்திர பலத்தினாலோ, உபாசனைப் பலத்தினாலோ ஜாலங்களை செய்துகாட்டுகிறான். வயிற்றுப் பிழைப்புக்காக வித்தைகளைச் செய்து பிழைக்கும் ஒருவனுக்கு இத்தகைய சக்தி இருந்தால், சர்வவல்லவனான இறைவனுக்கும் இந்த உலகைப் படைக்கும் ஆற்றல் இல்லாமல் இருக்குமா?

மனிதனுடைய அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற தகுதி உண்டாகிறது. வேதாந்தத்தைக் கேட்பதால் பலர்பிரம்மஞானத்தை அடைகின்றனர்.

பொறியியல் துறை வேலைக்குப் போகவேண்டுமென்றால், அதற்குரிய பொறியியல் படிப்பு படித்திருக்கவேண்டும் அதேபோல இறைவனைப்பற்றியறிய ஞானம் உண்டாக விவேகம், வைராக்கியம், சமதமாதிகள், முமுக்ஷுத்வம் ஆகியவைபெற்றிருக்கவேண்டும்.

மனிதர்கள் இறந்து போவதை அன்றாடம் பார்த்திருந்தும், நாம் மட்டும் சாசுவதமாக இருக்கப் போகிறோம்என்றுமனிதப்பிறவியை அளித்த இறைவனிடம் பக்தி செலுத்தாமல் இருப்பது அறிவீனம். இறப்பைப் பார்த்ததும் வாழ்வில் விரக்தி வருவதில்லை. காயகல்பம் சாப்பிட்டு ஆயுளை வளர்த்துக் கொள்ளலாம் என்றேமுனைகிறோம். பெரிய பெரிய மருத்துவர்களை எல்லாம் போய்பார்க்கிறோம் பிறருக்கும் உதவியாக இராமல், வயதுக்கேற்ற விவேகமில்லாமல், பொருளின் மேலும், மனைவி மக்களின் மீதும் பற்றுடன் வாழ்வது மதியீனம். வயதாக ஆக உலகப் பொருளின்மேல் விரக்தி வளரவேண்டும். இறைவன் மீது பற்று மிகவேண்டும். விவேகமும் பக்தியுணர்வும் அதிகமானால் தான் வேதாந்தக் கருத்துகளைக் கேட்பதின் முழுபயனையும் அடைய முடியும். மற்றவர்களும் வேதாந்தக் கருத்துக்களைக் கேட்டு வந்தால் ஓரளவு ஞானம் பெறலாம்.

இறைவன் அருளைப் பெற உலகப் பொருளில் விரக்தி வரவேண்டும். இந்த உலகமும் இந்த வாழ்வும் சாசுவதமானவை அல்ல என்று உணரவேண்டும். இந்தஉணர்வுவந்தால் உள்ளத் தூய்மையேற்படும்.

பிறகு இறைவனைக் கோயிலில் போய்த்தான் தரிசிக்கவேண்டும் என்ற நியதியில்லை. புறக்கண்ணை மூடி ஐந்துநிமிடம் தியானித்தால் அந்த இறைவனின் ஜோதியைத் தரிசிக்கலாம் இந்தநிலை கைவரப் பெற்றவுடன்உள்முகத்தியானத்தில் ஈடுபட்டு இறைவன் இதயத் தாமரையில் கொலுவீற்றிருப்பதாகப் பாவித்துவந்தனை செய்யவேண்டும். விசுவரூபியான இறைவன் உள்ளேயும் கைப்பிடி அளவு இதயக் கமலத்தில இருப்பதையுணர முடியும்.

உள்ளத் தூய்மையுடன் இறைவனின் சௌலப்ய குணத்தைப்பற்றி சிந்தித்தால் அவன் இருப்பதை நிச்சயம் உணரமுடியும். வெளிப்பிரமாணங்களே தேவைப்படா. வயதுக்கேற்ற விவேகமும் உலகப் பொருளின்மேல்விரக்தியும் காலக்ரமத்தில் ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் இறைவனின் அருளில் நிச்சயம் சந்தேகமே ஏற்படாது. இறைவனின் அருளைப்பற்றி பேசிக்கொண்டே உலகப்பொருளின் பற்று விடாமலிருக்கும்மனிதர்களையும் பார்க்கிறோம். இத்தகையவர்களைப் போன்றவர்களால்தான் இப்படி ஓர் ஐயம் உண்டாகவேவழி பிறக்கிறது குழந்தைகள் அறியாமையினால் தவறு செய்கின்றன. அதே தவற்றை வயதானவர்களும் செய்யலாமா? அப்புறம் வயதானதற்கு என்ன அடையாளம்? உள்ளத்தூய்மையுடன் விவேகத்தை வளர்த்துக் கொள்ளவேண்டாமா? உரிய பருவத்தில் பொருள்களின் மேலுள்ள பற்றைவிட்டுவிடவேண்டாமா? இந்த நிலையில் வாழ்ந்து பார்த்தால் எப்பொருளிலும் இறைவனின் சாந்நியத்தை உணர முடியும்.

தொகுப்பு : சேது, சென்னை

ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்

(ஸ்ரீ. லீலாசுகர் அருளியது)

கண்ணனது தரிசனம் காண வேண்டி மனம் வியாகூலப்பட்டு நிற்கும் லீலாசுகர் மேலும், கண்ணனது சொல்லின் விசேஷங்களைக் கூற முற்படுகிறார்.

பர்யாசி தாம்ருத ரஸானி பதார்த்த பங்கி
ப்பல்குனி வல்கித விசால விலோசனானி
பால்யாதி கானி மதவல்லவ பாவிதானி
பாவேனுடந்தி ஸுத்ருசாம் தவஜல்பிதானி 33

ஆதியோடு அந்தம் வரை பரிபூர்ணமாக விளங்கும் அமிருதம் போன்று ரஸானுபவம் மிகுந்து, உலகில் உள்ள பொருட்களையெல்லாம் சாதாரணமாகச் செய்யும் சஞ்சலம் மிகுந்ததும், விசாலமான தாயும் உள்ள கண்களுடன், தனது இளம் வயதிற்கு மீறிய பேச்சுக்களை பேசும் தன்மையுடைய கண்ணனை விவரிக்கிறார் லீலாசுகர்.

கண்ணா, நீ பேசும் பேச்சுக்கள் பெரியோரையெல்லாம் ஆகர்ஷிக்கிறது உனக்கு நிகராக எண்ணும் கோபர்கள் பலரும் நாணும்படி ரஸானுபவம், அர்த்த புஷ்டியோடு விளங்குகிறது உன் சொற்கள். நந்தகோபரும் மற்ற பெரியோரும் உன் உபதேசத்தைப் போற்றுகின்றனர்.

அர்த்த விசேஷமான சொற்களின் மதுரம் ஒருபக்கமிருக்க, பேசும்போது உனது அழகிய விழிகள் மிகவும் கவர்ச்சிகரமாக விளங்குகிறது. கோபிகள் மனதில் உன்னுடைய சொற்கள் புரண்டு கொண்டே இருக்கும். அவர்கள் உன் பேச்சுகளை திரும்பத்திரும்ப எண்ணி களிப்புறுகின்றனர் அத்தகைய உன் பேச்சுக்கள் என் செவிகளிலும் விழவேண்டும் என்று அவாவுறுகிறார் லீலாசுகர் கண்ணனை நோக்கி.

புன: ப்ரஸன்னேன முகேந்து தேஜஸா
புரோ வதீர்ணஸ்ய க்ருபா மஹாம்பு தே :
ததேவ லீலா முரளீரவாம்ருதம்
ஸமாதி விக்னய கதானுமே பவேத் 34

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பி.எல்., சென்னை

க்ருஷ்ண பக்ஷசந்திரனைக் காட்டிலும் விசேஷமாகப் பிரகாசிக்கும் பூர்ண சந்திரனையும்விட அழகிய திருமுகத்தையுடைய கண்ணா, அன்பு அவதரித்து பெரும் கருணா ஸமுத்ரமாக விளங்கிய கண்ணனல்லவா நீ, உலகெல்லாம் போற்றும்படி வேணுகானஞ் செய்து திருவிளையாடல் புரிந்தவனல்லவோ நீ, அத்தகைய உன் கிருபையை எனக்கருளி, உனது அமுதமயமான சொற்களை என் செவிகள் அனுபவிக்கச் செய்வதோடு. என் சமாதி நிலையில் என்முன் வந்து உன் வேணுவின் நாதத்தால் என் சமாதியைக் கலைத்தருளும் பாக்கியம் எனக்கு என்று கிட்டும். கண்ணனின் குழலோசையும், தரிசனமும் தன்னை யோக சமாதியிலிருந்து கலைக்கவேண்டுமென்பது லீலாசுகரின் ஆசை.

பாவேன முக்த சபலேன விலோகனேன
மன்மானஸே கிமபி சாபலமுத்வஹந்தம்
லோனேன லோசனரஸாய நமீக்ஷணோ
லீலாகிசோரமுப கூஹிது முத்ஸுகா: ஸ்ம: 35

எல்லோரும் ஸமாதி நிலை பெற வேண்டி நிற்பர். ஆனால் இங்கு லீலாசுகர் ஸமாதிநிலையை உனது தரிசனம் கொடுத்து கலைத்தருள் என்று வேண்டினார்.

இதுவரை சாஸ்திர ஞானங்களையெல்லாம் சிரமத்தின் பேரில் கற்றறிந்து சமாதியோகம் பெறும்நிலை பெற்றேன். ஆனால், கண்ணா, உன் குழந்தை உருவத்தில் நீ பால்ய பருவ சேஷ்டைகள் எல்லாவற்றையும் காட்டி உன் கடைக்கண் நோக்கினால் என் மனம் உன்னையே அனுபவிக்கும் ஒரு பேராசையுடையவனாய் செய்துவிட்டாய் கண்கள் களிக்கும் உன் அமிர்தமயமான பாலகனான திகழும் உருவம் கண்ட பின் என் மனம் இருப்பிலில்லை.

உன்னையே கண்டுகளிக்க பேரவா கொள்ளுகிறது. இந்த ப்ரத்யட்ச ஞானம் கொடுக்கும் இப்போதைய ஸமாதி முன்னிலும்பேராசையோடு உன்னையே நாடி நிற்கும்போது சாதனைகளால் ஏற்படும் அந்த ஸ்மாதியைக் காட்டிலும், இப்போதுள்ள என் நிலை உன்னையே என் மனதில் அனுபவிக்க எண்ணுகிறது அந்த நிலையையே நான் மேலும் விரும்புகிவேன் அருள்வாய்கண்ணா என்கிறார்.

திருமண பட்டு ஜவுளிகளுக்கு
சாரதா ஜவுளிக்கடை
ராஜ வீதி, கோயமுத்தூர்.
போன்: 23127

அதிர பிம்பாதர விப்ரமேண
ஹர்ஷார்த்ருவேண ஸ்வரஸம்பதாச
அநேன கேனுபி மனோஹரேண
ஹா ஹந்த ஹா ஹந்த மனோ துனே

ஹா! என்ன நிலை ஹா என்ன நிலை என்று என் மனம் சஞ்சலமடைகிறது தன்னிலையே இருக்கவொண்ணுமல் என் கண்முன் கண்ணு நீ நிற்கும் தோற்றம் உன் கோவைச் செவ்விதழ்களையே பார்க்கச் செய்கிறது. அவ்விதழ்களில் அமர்ந்துள்ள குழலின் இசைக்க உன் அதரங்கள் அசையும் அசைவானது என் மனதை தன்னிலையிலிருந்து தடுமாறச் செய்கிறது.

அந்த வேய்ங்குழலிலிருந்து கிளம்பும் நாதம் என்னை ரஸானுபவத்திருல் மெய்மறக்கச் செய்கிறது. தனியே நிற்கும் மரமானது பெருங்காற்றில் எவ்வாறு அல்லல்படுமோ அவ்விதம் நிலை தடுமாறிநிற்கிறன் நான், உன் தோற்றத்தின் பலனுக என்கிருர் கண்ணனிடம் லீலாசுகர். (தொடரும்)

மண்ணும் பெணணும் ஒன்றுதான். இரண்டுக்கும்தான் மனிதர்கள போரிடுகிறாகள்,

திருமணம் எனற சூதாட்டத்தில ஓர் ஆண்மகன் முதலில் தனது சுதந்திரத்தை இழககிருன். அடுத்து சுக போகஙகளை இழக்கிருன. கடைசியில பெண்டாட்டிக்கும பிள்ளைகளுககும் வேலைக்காரனுகி சம்பாதித்து போடுகிருன். —மூர்.

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி வகுககும். உள்ளடங்கிய கோபம் பழிக்கு வழிதேடும —புல்வேர்.

பக்திரத்னாவளி

மகான் விஷ்ணுபூரி அருளியது

ஸ்ரீகிருஷ்ணர் பக்திமார்க்கத்திற்கு அனுசரணையாக சங்கம் உதவுகிறது என்பதையும் சாதுக்களின் உயர்வையும் கூறுதல் :

ந ஹ்யம்மயானி தீர்த்தானி ந தேவா ம்ருஞ்சிலாமயா :
தே புனந்த்யிருகாலேன தர்சனுதேவ ஸாதவ : 41

ஞானிகளாகிய சாதுக்களின் தரிசனமே மனதைத்தூய்மைப்படுத்துகிறது இதனுல் தீர்த்தங்கள்உயர்ந்தவையல்லவென்றே. கல்லிலும் மண்ணுலும் செய்யப்பட்ட மூர்த்தங்கள் உயர்ந்தவையல்ல என்று கொள்ளவேண்டாம். இவைகளை அண்டி அடையும் புண்யவிசேஷங்தைக்காட்டிலும் மிகவும்சீக்கிரமாக மகான்களின் தரிசனம் பலனளிக்கிறது என்பதே கருத்து.

மகான்களை தரிசித்த மாத்திரமே பலனளிக்கும் என்பது ஸ்ரீகிருஷ்ணரின் துணிவு.

மகான்களின் உயர்வு பற்றி ஸ்ரீகிருஷ்ணர் கூறல் :

அஹோ வயம் ஜன்மம்ருதோ லப்தம் கா த்ஸனர்யேன தத்பலம்
தேவானுமபி துஷ்ப்ராபம் யத்தேகேச்வரதர்சனம்
கிம் ஸ்வல்பதபஸாம் ந்ருருணுமர்சயாம் தேவசக்ஷுஷாம்
தர்சன—ஸ்பர்சன—ப்ரச்ன—ப்ரஹ்வ—பாதார்சனுதிகம் 42–43

போகிகளாகிய மகான்களின் சேர்க்கை தேவர்களுக்குக்கூட கிட்டாதது. ஆகவே நம்மைப்போன்ற மனிதர்களுக்கு சிறு தபஸும் பகவானை விக்ரஹங்களில் பூஜிப்பதனுல் ஏற்படும் பலனுலும் தானுண்டு, அவ்வாறிருப்பினும் நாம் மிகவும் கொடுத்துவைத்துள்ளவர்கள், மகான்களை அடைந்து அவர்களோடு பழகி, அவர்களுடன் சம்பாஷித்து, அவர்களை பூஜிக்கவும் இயலுகிறது. நம் போன்ற மனிதர்களால் இத்தகைய ஒரு தன்மையால் மனிதர்களாகிய நமக்கு பிறவியின் பெரும்பயனைப் பெற இயலுகிறது.

பி. எஸ் பரமேஸ்வரன், பி,ஏ.,பி,எல்., சென்னை.

ஸ்ரீகிருஷ்ணர் மகான்களின் சங்கம் உயர்ந்தது எனக் கூறல் :

நாக்னிர்ன ஸூர்யோ ந ச சந்திரதாரகா ந பூர்ஜலம் கம்
சர்வஸனோ அத்த வாங்மன :

உபாஸிதா பேதக்ருதோ ஹரந்த்யதம் விபார்ச்சிதோ
க்னந்தி முஹூர்த்த ஸேவயா

யஸ் யாத்ம வ்ருத்தி : குணபே த்ரிதாதுகே ஸ்வதீ :
கலத்ராதிஷு பௌம இஜ்யதி :

யத்தீர்த்த புத்தீச்ச ஜலே ந கர்ஹிசித் ஜனேஷ்வமி க்ஞேஷு
ஸ ஏவ கோகரா : 44 – 45

நெருப்பு, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, ஜலம், ஆகாயம், காற்று, பேச்சு, மனம், முதலியவற்றைப் பூஜிக்கும் மனிதர்களால் உண்மை பக்தி பெற இயலாது. அவை பாபத்திற்கு வழியான செய்கைகளையும் அழிக்காது. அத்தகைய வழிபாடுகள் யாவும் தன்னலம் கருதி மனிதன் செய்கிறான். அவனுக்கும் மற்றவருக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு அதனை நீக்கும் எண்ணத்தைக் கொண்டே செய்யப்படுபவை இந்த பூஜைகள் யாவும்.

ஆனால் சிறு அவகாசம் கிடைத்த போது ஏற்படும் மகான்களின் சேர்க்கை பாப எண்ணங்களை அறவே அழிக்கிறது. முக்குணங்களின் விளைவாக ஏற்பட்ட இந்தப் பிணத்துக்குச் சமானமாகிய உடலை ஆத்மாவாக எண்ணி, தனது மனைவி மக்கள் சுற்றம் யாவும் தனதாக எண்ணுபவன் மண்ணாலும் கல்லாலும் செய்யப்பட்ட உருவங்களைப் பூஜிக்கத் தகுந்ததாகவும், தடாகங்களை தீர்த்தங்களாகவும் ஏற்பான். ஆனால் அத்தகையவன் பெரியோரிடமும் மகான்களிடமும் தெய்வத் தன்மையை அறிவதில்லை. அவ்வாறு வாழும் மனிதனை ஆடுமாடுகளுக்கு புல் சுமையைத் தாங்கிச் செல்லும் கழுதைக்குச் சமானமாகச் சொல்லலாம்.

இங்கு மகான்களிடம் தெய்வம் குடிகொண்டிருக்கிற நிலையை விளக்குகிறார் ஸ்ரீகிருஷ்ணர். இத்தகைய மகான்களின் சேர்க்கையைக் கொள்ளாது, வெறும் சிலைகளையும் தீர்த்தங்களையும் தொழுவதாகக் கூறுபவன் உண்மையில் பக்தி நெறியோடு ஒழுகாதவன். அவனை உண்மை பக்தியுடையவனாகக் கொள்வது இயலாது. வெறும் ஆஷாடபூதியே எனகிறார் ஸ்ரீகிருஷ்ணர்.

ராஜா பகீரதன் கங்காதேவியிடம் மகான்களின் சேர்க்கையின் உயர்வு பற்றி விவரித்தல் :

ஸாதவோ ந்யாஸின : சாந்தா ப்ரம்ஹிஷ்டா லோகா பாவனா :
ஹரந்த் யகம் தே அங்கஸங்காத் தேஷ்வாஸ்தே ஹ்யதபித்தரி : 46

மகான்கள் உலக விஷயங்கள் யாவற்றையும் துறந்து தியாகம் நிறைந்து விளங்குவர். சாந்தம் நிறைந்து பகவானிடத்திலேயே மனம் லயித்தவராக விளங்குவர். அத்தகையோர் உலகத்தைப் புனிதமாக்குவர் அவர்களின் சேர்க்கை பாபங்களை அழிக்கும். ஏனெனில், பாபங்களை நீக்கும் ஸ்ரீஹரி அவர்களுள் வசிக்கிறான்.

நாரத முனியிடம் வஸுதேவர்மகான்களின் உயர்வுபற்றி கூறல் :

பூதானும் தேவசரிதம் துக்காயச சுகாயச
ஸுகாயைவ ஹி ஸாதூனும் த்வாத்ருசா—மச்சுயுதரத்மானும்
பஜந்தியே யதா தேவான் தேவா அபி ததைவ தான்
ச்சாயேவ கர்மஸாசிவா : ஸாதவோ தீனவத்ஸலா : 47

வேத சாஸ்திரத்தின்படி விதித்துள்ள கர்மாக்களைச் செய்வதினுல் தெய்வங்களிடமிருந்து நன்மைகளையும் தீமைகளையும் பெறுகிருர்கள். சாஸ்திரத்தின் விதிப்படி செய்வதால் நன்மை ஏற்படுகிறது முறை தவறிச் செய்தால் தீமை ஏற்படுகிறது. ஆனுல் மகான்களின் இணக்கம் அப்படியல்ல. மகான்களின் மனம் சதா பகவானையே அண்டி நிற்கிறது. பகவானிடமே சேர்க்கை நன்மையைத் தவிர வேறெதும் கொடுப்பதில்லை.

தேவர்களை பூஜிப்பதால், அவர்களுக்கு நாம் அளித்த பூஜைக்குத் தக்கபடி பலனளிக்கிருரிகள் தேவர்கள். எப்படி நிழல் தனது உண்மைப் பொருளைச் சாருமே அப்படியே தேவர்கள் தமக்குச்செய்யும் பூஜைக்குத் தகுந்தபடி பலன் கொடுப்பர்.

மகான்கள் தமது கருணைமயமான அன்பினுல், தன்னலமில்லாது அண்டியவராவருக்கும் நன்மையே செய்வர். அவர்களுக்கு விருப்பு வெறுப்பு ஏதுமில்லை.

கடவுள் நம்பிக்கைக்கு அடுத்து உழைபபில நம்பிககை வேணடும். —பொலி.

உழைப்பே வாழ்க்கையின் சாப்பாடு. இன்பம் ஊறுகாய. —போர்ப்ஸ.

காட்டுமிராணடியாக இருந்த மனித இனத்தை உயாத்தியது எது? பாலையும் காட்டையும வயலாக உருமாற்றியது எது? பட்டினி, துயரம இவறறிறகுப் பதிலாக வளத்தையும் வசதியையும தநதது எது? உழைப்புதான். —மெக்கலக்.

கவிஸேரி சுப்பிரமணிய சாஸ்திரிகள்

87

ஸ்ரீ கிருஷ்ணனுல் தோற்கடிக்கப் பட்ட ஜாம்பவான், தனது எதிரியை பகவான் எனத் தெளிந்து, தனது தவறை உணர்ந்து அவரிடம் சகல பிராணிகளுக்கு சக்தியாகவிளங்கும் மகாவிஷ்ணுவே நீர், எல்லாவற்றை யும்படைத்தவர், காலஸ்வரூபி, சேது வின் வழியாகலங்கையை அடைந்து ராவணுதிகளை வதம் செய்தவரும் நீரே. ஆகவே உம்மைச் சரணடை கிறேன் என்ருன். பகவான் மிகவும் சந்தோஷமடைந்து அடிபட்டிருந்த ஜாம்பவானைத் தமது கரங்களால் தடவிக்கொடுத்து பின் தனக்கு ஏற்பட்டிருக்கும் வீணை அபகீர்த்தி யைப்பற்றிக் கூறி தாம் சியமந்தக மணியை தேடி வந்திருப்பதைக் கூறினுர். பகவான் நிலையை அறிந்து ஜாம்பவான் ரத்தினத்தைஅவரிடம் சமர்ப்பித்ததோடு, தனது மகளான ஜாம்பவதியை அவருக்கு அளித் தார் மேலும் பல ரத்தினங்கள் கொண்டு பகவானைத் திருப்திபடுத் தினுர் ஜாம்பவான். பின் ஜாம்ப வான் மோக்ஷத்தைஅடைந்தார்.

பன்னிரண்டு நாட்கள் குகை வாயிலில் நின்று ஸ்ரீகிருஷ்ணருக் காக காத்திருந்த ஜனங்கள், அவர் வராததால் மிகவும் துக்கமடைந்து துவாரகையை அடைந்தார்கள். இச்செய்தியைக் கேட்ட ருக்மணி, தேவகி, வசுதேவர் மற்ற பந்துக் களும் வருத்தமடைந்தனர். மேலும் சத்ராஜித்தை நிந்தித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணர் திரும்பி வரவேண்டி சந்திரபாகா என்னும் துர்க்கையை பூஜித்தனர். துர்க்கையும் அவர் களுக்கு ஆசீர்வாதம் செய்தாள். ஸ்ரீகிருஷ்ணர் குகையிலிருந்துவெளி வந்து ரத்னத்துடனும், ஜாம்பவதி யுடனும் துவாரகையை அடைந்த தும் எல்லோரும் சந்தோஷமடைந் தனர்.

பின், உக்கிரசேனமகாராஜாவின் சபையில் எல்லோர் முன்னிலை யிலும் ஸத்ராஜித்தை அழைத்து வந்து ரத்தினத்தைக் கொடுத்து அது தனக்கு கிடைத்த விவரத்தை யும் கூறினுர், ஸ்ரீகிருஷ்ணர். சத்ரா ஜித் வெட்கமடைந்து ரத்தினத்தை பெற்று வீட்டை அடைந்தான். இதன்பின் தீர யோசித்து தான் செய்த தவறை உணர்ந்தசத்ராஜித் ஸ்ரீகிருஷ்ணனுக்கு தனது மகளான சத்யபாமையை மணம் செய்விப்ப தாக கூறியதோடு ரத்தினத்தையும் சமர்ப்பித்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் ஸத்ராஜித்தையே அந்த சியமந்தகரத்தினத்தைவைத் திருக்கும்படி கூறி, அவன் மகளான சத்யபாமாவை முறைப்படி விவாகம் செய்துகொண்டார். சூரிய பக்தனு

[illegible] சத்ராஜித்திடமே ரத்தினம் இருந்தது.

பாண்டு புத்திரர்களும் அவர்கள் தாயார் குந்தி தேவியும் அரக்கு மாளிகையில் எரிக்கப்பட்டு மரண மடைந்தார்கள் என்றசெய்திகேட்ட ஸ்ரீகிருஷ்ணர் துக்கம் விசாரிக்க திருதராஷ்டிரனிடம் பலராமனுடன் சென்றார். அஸ்தினாபுரத்தில் பீஷ்மர், திருதராஷ்டிரர் விதுரர், காந்தாரி, துரோணர் முதலிய எல்லோரையும் பார்த்து விசாரித்தார். அவர்களும் மிகவும் வருத்தம் தெரிவித்தனர். உண்மையறிந்த ஸ்ரீகிருஷ்ணர் ஏதும்தெரியாததுபோல்நடந்து கொண்டார்.

அப்போது துவாரகையில் அக்ரூரும், கிருதவர்மாவும் சததன்வாவைப் பார்த்து இந்த சத்ராஜித் பெண்ணை நமக்குத் தருவதாகக் கூறி பின் ஸ்ரீகிருஷ்ணனுக்கு விவாஹம் செய்தான். ஆகவே சத்ராஜித் திடமிருந்து நாம் ஏன் சியமந்தக மணியைப் பெறக் கூடாது என்று கூறினர்.

சததனவாவும் புத்திமயங்கினவனாய் ஸத்ராஜித்தை அவன் தூங்கும் சமயத்தில் அனாதரவற்ற ஸ்திரீகள் கதறுவதையும் கவனியாது பசுவை கசாப்புக் கடைக்காரின் கொல்வதுபோல் கொன்று அந்த ரத்தினத்தைக் கவர்ந்தான்.

சத்தியபாமை தன் தந்தையின் இழப்பைக் கேட்டு அவரது சடலத்தை எண்ணெய் கொப்பரையில் வைத்துவிட்டு அஸ்தினாபுரத்தை அடைந்தாள். ஸ்ரீகிருஷ்ணனை தரிசித்து மிகுந்த தாபம் உடையவளாய் தன் தந்தையின் மரணம் பற்றி தெரிவித்தாள்.

சகலவுமறிந்த வாசுதேவனும் உலக வழக்கப்படி 'நமக்கு மிகுந்த கஷ்டம் நேர்ந்தது' என கண்ணீர் விட்டார். பிறகு பலராமனுடன் சேர்ந்து சத்யபாமாவுடன் ஸ்ரீகிருஷ்ணன் துவாரகையையடைந்து சததன்வாவைக் கொன்று ரத்தினத்தைத் திரும்ப அடைய எண்ணினார்.

இதையறிந்த சததன்வா க்ருதவர்மாவிடமும் அக்ரூரரிடமும் தனக்கு உதவி செய்யும்படி வேண்டினான். அவர்கள் கிருஷ்ணனை விரோதித்துக் கொள்வது தகாது எனக் கூறினார். ஆகவே அக்ரூரரிடம் ரத்தினத்தைக் கொடுத்து விட்டு சததன்வா குதிரை மீதேறி துவாரகையை விட்டுச் செல்லலானான்.

இதையறிந்த கிருஷ்ணரும் பலராமரும் ரதத்திலேறி பின் சென்று மிதிலா நகருக்கு அருகேஒருதோட்டத்தில்சததன்வாவை ஸ்ரீகிருஷ்ணர் கொன்று அவனிடம் ரத்தினம் இருக்கிறதா என்றுதேடஅதுகிட்டவில்லை. சுததன்வாவை வீணே கொன்றோம். ரத்தினம் அவனிடமில்லை என்று கிருஷ்ணர் பலராமரிடம் கூறினார்.

அந்த ரத்தினத்தை சுததன்வா எவனிடமாகிலும் கொடுத்திருப்பான். ஆகவே துவாரகை சென்று அவனைத் தேடு என்று கூறிவிட்டு பலராமர் ஜனக மகாராஜாவைக் காண மிதிலாநகருக்குச் சென்றார். மிதிலா நகரில் சில வருடங்கள் பலராமர் ஜனகருடைய அதிதியாகத் தங்கினார். அப்போது துரியோதனன் அவரையணுகிபலராமரிடம் கதாயுதம் பழகினான்.

ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையை அடைந்து சத்தியபாமையிடம் சுததன்வாவை கொன்றது வீண் எனவும், ரத்தினம் அவனிடம் கிட்டவில்லை என்று கூறினார். பின் தனது மாமனாருக்குச் செய்யவேண்டியகிரியைகளைச் செய்வித்தார்.

ஸத்ராஜித்தைக் கொல்லும்படி தூண்டிய கிருதவர்மாவும் அக்ரூர

(32ம் பக்கம் பார்க்க)

காஞ்சி குமரகோட்டக் குமரன்

முருகப் பெருமான் திருத்தலங்களில் எங்குமே காணாத நான்கு கைகள் கொண்ட திருவுருவ அமைப்புடன் கூடிய குமரபெருமானைக் காஞ்சி குமரக் கோட்டத்திலதான் காணமுடியும்.

இம்முருகன் மூலவர் படம் இல்லாமையால குணடுசி ஓவியர் சித்ர லேகா அவர்களுடன் காஞ்சி சென்று, கோவில் நிருவாக அதிகாரி திரு. காசி நாதன் அவாகளைக கேட்டேன் உடனே சிவாச்சாரியார் அவர்களை வர வழைத்து அலஙகாரம் செய்து தயார் செயதுவிட்டார். அன்பர் சித்ரலேகா அவர்கள் வரைப்த உருவமே இந்த இதழ அட்டைபபடத்தில் காட்சியளித்து அருள்பாலிக்கிறார்.

அட்டைப்படம் அச்சானவுடன் சென்றவாரம் காஞ்சி சென்று குமரன் திருவடியில் வைத்து எனது வாசகர்கள் சார்பாக அர்ச்சனை செய்து அன்பர் ராஜசேகர சிவாச்சாரியார் அவர்கள கறபூரஹாரத்தி காட்டுகிறா, குமரப் பெருமானை தரிசித்துக் கொள்ளுங்கள. இவவிதழ அட்டையில் முருகப்பெரு மானைப் பிரார்த்திக கொள்ளுங்கள்.

இத்திருக்கோவிலின் விசேஷ வரலாறறை எழுதித் தரும்படி என் அன்புக் கட்டளையை செயல் அலுவலா திரு. காசிநாதன அவர்களிடம சமர்ப்பித்தேன். மிகவும் எளிய நடையில் விளக்கமாய் அவர் எழுதியுளளதைப் படியுங்கள்.

என் அனபு வாசகர்கள்! சார்பாக திரு காசிநாதன் அவர்களுக்கு நனறி கூறி, முருகன் திருவருளைப் பெறறு நலவாழ்வு வாழ என் அன்பு நேயர்களை வேண்டுகிறேன்.

—ஆசிரியர்.

ஒருகரம் தனில் கண்டிகை வடம்பரித்து, ஒருதன்
கரலந்தனில் குண்டிகை தரித்து, இருகரங்கள்
வரதமொடு அபயம்தரப் பரம்பொருள் மகன்ஓர்
திருமுகம் கொடுத்த சதுர்முகன் போல் விதிசெய்தான்.

—கந்த புராணம்.

திருமுக மண்டலத்தில் ஒளி துலங்க ஒருமுகமும் நான்கு திருக் கரங்களும் கொண்ட ஒப்பற்ற எழில் வடிவம் கொண்டு மேற்கு நோக்கி நமக்கு அருள்பாலித்து நம் குறை களைத் தீர்க்கிறான் குமரகோட்டத் துக்குமரன் இங்குள்ள குமரப்பெரு மானின் உருவம் வேறெங்கும் காண முடியாத அருங்கோலம் ஆகும். முருகப் பெருமானின் திரு வுருவ அமைப்புகளைப் பல வகை யாகச் சான்றோர் கூறுவர் பால சுப்ரமணியர், தாரகாரி, மயில் வாக னர், வள்ளிதேவசேனாபதிபோன்று பலவகையாகக் கூறப்படும் மூர்த் தங்களுள் இங்குள்ள மூலமூர்த்தி பிரம்மசாஸ்தா என்பவராவர்.

பிரணவத்துக்குப் பொருள் தெரி யாத பிரம்மதேவரைக் குட்டிச் சிறையிலடைத்துவிட்டுப் பிரம்ம

நா. காசிநாதன்

தேவர் செய்துவந்த படைப்புத் தொழிலைத் தாமே செய்தருளிய திருக்கோலம் இதுவாகும். மேல் வலது திருக்கரத்தில் உருத்திராக்க மணிமாலையும், மேல் இடது திருக்கரத்தில் நீர்க்குண்டிகையும், மற்ற இரு திருக்கரங்கள் அபய வரதமாகவும் திகழ, இத்தலத்து முருகப்பெருமான் காட்சி தருகிறார். இந்த அழகிய திருக்கோலத்தையே கந்த புராண ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார் மேற்கண்ட பாடலில்குறிப்பிடுகின்றார். இந்த கோலத்தில்மூல மூர்த்தி உள்ள தலம் இது ஒன்றே ஆகும்.

காஞ்சிபுரத்தில் திருகுமர கோட்டம் அமைந்துள்ள தன்மை மிகவும் போற்றற்குரியதாகும், இறைவனுடைய வடிவங்களுள் சோமாஸ்கந்த வடிவம் என்பது சிறப்புடையது. அதாவது இறைவனுக்கு இடப்பக்கத்தில் இறைவி இருக்க இடையில் முருகப் பெருமான் உள்ள வடிவம் (இறைவன்-முருகன்–இறைவி) சோமாஸ்கந்த வடிவம் என்று கூறப்படும். இந் நிலை கோயில் அமைப்பிலேயே இங்கு உள்ளது ஒரு பெருஞ்சிறப்பாகும் திருவேகம்பர், காமாட்சியம்மன் ஆலயங்களுக்கிடையில்இக் குமரகோட்டம் அமைந்துசோமாஸ்கந்த வடிவத்தை நமக்கு என்றும் நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

காளமேகப் புலவர் காஞ்சிக்கு வருகை தந்தபோது இப்பெருமானை பாடியுள்ளார். அவர் காலத்தில் (கி.பி. 14–ம் நூற்றுண்டில்) இக் கோயில் சிறிய அளவில் கீரைப் பாத்திகளுக்கிடையில் இருந்துள்ளது அதனுல் அவர், 'குமரக்கோட்டக் கீரை' என்று தொடங்கி காஞ்சியிலுள்ள அதிசயங்களைப் பாடுகிறார். அதற்கு முன்பேஇக்கோயில் உள்ளமையை கி.பி. பதினேராம் நூற்றுண்டில் இக்கோயிலில் கந்த புராணம் அரங்கேறியமையால் அறியலாம்.

கந்தபுராணத்தை பாடியருளிய சிவாச்சாரியார் இக்கோயிலின் அர்ச்சகராவார். அவரது கனவில்முருகன் தோன்றி 'திகட சக்கரம்' என முதலடி எடுத்துக்கொடுத்துக் கந்த புராணம் பாடச் செய்தார். நூல் அரங்கேற்றத்தில் வந்த தடையை தானே புலவனாக வந்து நீக்கி அருளினுன். எனவே 11-ம் நூற்றுண்டுக்கு முன்பே இக்கோயில் இருந்திருக்கிறது.

கி.பி. 10-ம் நூற்றுண்டில் இராஜ ராஜ சோழனின் தமையனும்சுந்தர சோழனின் மகனுமான ஆதித்தகரிகாலன் காஞ்சியில் பொன்மாளிகை கட்டி தன் தந்தை வந்து தங்க ஏற்பாடு செய்ததாகச் சரித்திரம் கூறுகிறது. எனவே கி.பி. 10ம் நூற்றுண்டுவாக்கில செல்வாக்குகுறைந்திருந்த பிற்காலச் சோழர்களால் அல்லது சோழர்களின் அரசியல் அதிகாரிகளால் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது.

ஈறுசேர் பொழுதிலும் இறுதி இன்றியே, மாறிலா திருந்திறம் வளங்கொள் காஞ்சியில் கூறுசீர் புனைதரு குமரகோட்டம் என்பதால் இக்கோயில் மிகப்புராதனமானது என்று அறியலாம்.

சென்ற நூற்றுண்டில் வாழ்ந்திருந்த பாம்பன் சுவாமிகள் காஞ்சிபுரம் வந்து ஜவுளிக் கடைசத்திரத்தில் தங்கியிருந்து இங்குள்ள கோயில்களையெல்லாம் தரிசித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்ப இரயில்நிலயம் சென்றார். குமர கோட்டம் உள்ள இடம்தெரியாமையால் அவர் குமரனைத் தரிசிக்காமலேயே திரும்பிச் சென்றுர். அப்போது இரயிலடிக்குச் சென்று கொண்டிருந்த அவரை ஒரு வண்டிக்கார சிறுவன் தடுத்து, குமர கோட்டத்தை தரிசித்தீர்களா எனக் கேட்க, 'இல்லையே அது எங்கே

இருக்கிறது?" என்று சுவாமிகள் கேட்டார்.

நான் வழிகாட்டுகிறேன் என்று சிறுவன் கூற, இரயில் போய்விடுமே என்று சுவாமிகள் தயங்க, தாங்கள் திரும்பி வரும் வரையில் இரயில் போகாது என்று கூறி, சிறுவன் அவரை வழிகாட்டி அழைத்துக் கொண்டு வந்து குமரக்கோட்டத்தைக் காட்டி மறைந்தான் முருகனே முன்னின்று வழிகாட்டினான் என்றுணர்ந்த சுவாமிகள், 'ஒரு சொம்பிலேயிருந்து' என்று தொடங்கி, அப் பெருமானை, 'கூற்றனுயிர் உண்ட பரமேட்டி சுதன் என் குமர கோட்டத்தமர்ந்த குகன்' என்று பாடி வணங்கினார் அவர் திரும்பி இரயிலடிக்கு வரும் வரையில் சென்னை செல்லும் வண்டி புறப்படாமல் இருந்தது என்பது நடைபெற்ற உண்மை நிகழ்ச்சியாகும்.

கால வேறுபாடுகளுக்கேற்ப பல நிலைகளில் திருப்பணி செய்யப்பட்டு இன்று அழகிய பொலிவுடன் விளங்குவதோடு, கச்சியப்பர் நூலகம், சியான மண்டபம் போன்ற அரிய பகுதிகளையும் பெற்று அன்பர்கள் பயன்பெறும் வகையில் இக்கோயில் திகழ்கிறது இத்திருக்கோயில் நவக்கிரகம் சிவாகமப்படி அமைந்துள்ளது வேறு எங்கும் இப்படி இல்லை. இத்திருக்கோயில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள உருகுமுள்ள பெருமான் காஞ்சியிலுள்ள 11 திருமால் திருப்பதியில் ஒன்று.

இத்திருக்கோயில் விலை உயர்ந்த ஆபரணம் 'வைரவேல்', இங்கு நடைபெறும் கந்தஷஷ்டித் திருவிழாவின்போது ஆறுமுகனுக்கு அணிவிக்கப்படுவது வழக்கம்.

இத்திருக்கோயிலில் குமார தந்திர ஆகமப்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றது. இக்கோயிலில் வைகாசி விசாகப் பெருந்திருவிழாவும், ஐப்பசி கந்தஷஷ்டி விழாவும் மிகச் சிறப்புடையவை.

காஞ்சிக்கு விஜயம் செய்யும் ஆன்மீக அன்பர்கள், அபூர்வமான உருவ அமைப்புள்ள சக்திவாய்ந்த குமரப் பெருமானை அவசியம் தரிசித்து, அவனருள்பெற்றுநல்வாழ்வு வாழ வேண்டுகிறேன்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் மிகவும் பயந்து நடுங்கினவர்களாய் அயல்தேசம் சென்றனர்.

சில காலத்தில் துவாரகையில் அரிஷ்டங்கள், சரீர வியாதிகள், நில நடுக்கம் முதலிய ஏற்பட்டது ஜனங்கள் இவற்றிற்கு அக்ருரர் அங்கு இல்லாததுதான் காரணம் என்ற காரணம் என்றனர். ஸ்ரீகிருஷ்ணர் உண்மையில் ரத்தினம் வெளிச் சென்றதே எனத் தெளிந்து அக்ருரரை அழைத்துவரும்படிக் கூறினார்

அவர் வந்ததும் அக்ருரரிடம் ஸ்ரீகிருஷ்ணன் அந்த ரத்தினம் உம்மிடம் சததன்வாவால் கொடுக்கப்பட்டது என்று தெரிய வருகிறது. இந்தச் செய்தியை நான் சொன்னால் பலராமன் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே நீரே எல்லோர் முன்னிலையிலும் அதனை எடுத்துக் காண்பிக்கவேண்டும் என்று கூறி அதன்பின் நீரே வைத்திருக்கலாம் என்று கிருஷ்ணர் கூற, அக்ருரர் ரத்தினத்தை எடுத்து சபையில் அதைக் கிருஷ்ணரிடம் கொடுத்தார். இதனால் ஸ்ரீகிருஷ்ணன் அக்ருரரை தேசாந்திரம் அனுப்பினார் என்ற வதந்தியும் நிவர்த்தியாயிற்று.

(தொடரும்)

லக்ன பலன்

குண்டூசி ஜோஸ்யர்

(16 - 5 - 83 முதல் 15 - 6 - 83 வரை)

மேஷம்

நல்ல பலன்கள் காண்கிறது. யாரிடமும் கடுமையாக நடந்து கொள்ளவேண்டாம். சொத்துக்களின் மீதுள்ள பந்தங்கள் நீங்கும். தொழில், வியாபாரம், சுறுசுறுப்பாக நடைபெற ஆரம்பிக்கும். தெய்வீக காரியங்கள் நடைபெறும். பிதுரார்ஜித சொத்து கிடைக்க வாய்ப்பு உண்டு. சிரமப்பட்டு பெறவேண்டியிருக்கும். தங்களது குறைபாடுகளை நீக்கிக்கொள்ளவேண்டும். கடன் விஷயத்தில் ஜாக்கிரதை தேவை.

அதிருஷ்ட எண்கள் : 4,5,7.

நல்ல தேதிகள் : 1,2,3,4,6,7,9, 10, 24, 26, 27.

ரிஷபம்

மாதக் கடைசியில் வேலைப் பளு அதிகமாகும். பிரயாண அலைச்சலும் இருக்கும் எதிலும் நிதானமாக இருக்கவும். எல்லாம் நல்லபடியாகவே நடைபெறும். திட்டப்படி காரியானுகூலம் இருக்கும். நிதானமாக நடந்துகொள்ளவும். வியாபாரிகள் மாற்றங்கள் எதுவும் செய்யாமலிருப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண் : 5, 8, 9

நல்ல தேதிகள் : 1, 2, 3, 6, 11, 16, 20, 23, 30.

மிதுனம்

மாத ஆரம்பம் நல்லபலன்களாகவும் மாதக் கடைசியில் செலவதிகமாகவுமிருக்கும். புதிய முயற்சிகள் கடினமாக இருக்கும். குடும்பத்தில் சில தொந்தரவுகள் ஏற்படலாம். மன நிம்மதி குறைவு ஏற்படலாம். ஆயினும் போக போக பணவரவு சுபச் செலவுகள் ஏற்படும். பெண் கல்யாணமும் நடைபெறலாம். வியாபாரிகள், உத்தியோகஸ்தர்களுக்கு போட்டி ஏற்படும். பிரயாணங்களும் உண்டு.

அதிர்ஷ்ட எண் . 5, 3, 1.

நல்ல தேதிகள் : 1, 2, 3, 4, 10, 15, 17, 22, 28.

கடகம்

செலவுகள் நிறைய இருந்தாலும் சமாளிக்கக் கூடிய பணவரவுஇருக்கும். புதிய ஆடையாபரண, வாகன சேர்க்கையேற்படலாம். வீட்டில் வியாதியஸ்தர்களுக்கு நோய் தீரும் தொழிலில் உயர்வும்ஊதியலாபமும் கிடைக்கும். புத்திரர்களால் நல்ல செலவு ஏற்படும்.

அதிர்ஷ்ட எண் . 3, 4, 8.

நல்ல தேதிள்க : 2, 6, 10, 14, 16, 22, 29,

சிம்மம்

உறவினர் மூலம் தொல்லைகள் ஏற்படலாம். பூமி, வீடு, வாகன வகைகளில் தொல்லைகளேற்படலாம். குடும்பத்தில் வீண்செலவுகள் ஏற்படலாம். சிலர் கடன்வாங்கவும்

லாம். வியாபாரிகளுக்குப் பணத் தட்டுப்பாடு, வீண் கவலையேற்படலாம். சிறு பிரயாணமுமிருக்கும்.

அதிர்ஷ்ட எண் : 6, 7, 9

நல்ல தேதிகள் : 1, 2, 4, 14, 15 19, 24, 29.

கன்னி

கவலை சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். புதிய முதலீடு செய்யவும் வாய்ப்புண்டு. புதிய பொருள்சேர்க்கையும் இருக்கும். பெரியோர்களுடைய ஆதரவுஇருக்கும். சகோதரர் உதவிசெய்வார்கள். வியாபாரிகட்கு சிறிது விரயமேற்படலாம். தொழிலாளர்கட்கு நல்ல பலன் கிட்டும்.

அதிர்ஷ்ட எண் : 3, 4

நல்ல தேதிகள் : 2, 4, 5, 7, 12, 16, 22, 27.

துலாம்

காரியங்கள் நினைத்தபடி நடக்காது. ஆயினும் எப்படியோ நடந்துவிடும். பிரச்சனைகள் இருந்தாலும் சுபமாகவே முடியும் ஒருதிடீர்தனப் பிராப்தி ஏற்பட வழியுண்டு. இது ஒரு நல்ல மாதமாக இருக்கும். வியாபாரிகள் அதிக ஆதாயம்எதிர்பார்க்க முடியாது. உத்தியோகஸ்தர்கள் நல்ல பலனைப் பெற வழிஏற்படும்.

அதிர்ஷ்ட எண் : 5, 8, 3.

நல்ல தேதிகள் : 5 6, 8, 12, 17 23, 29.

விருச்சிகம்

குடும்பத்தில் பெரியோர்களுடன் மனஸ்தாபமேற்படலாம். அரசாங்க உதவிகள் கிடைக்கும். வீண்செலவுகளுக்கும் குறைவில்லை. கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பெரிதாகஎதுவுமில்லை.

நல்ல தேதிகள் : 1, 2, 5, 6, 7, 12, 14, 24, 30.

தனுசு

இடம், ஸ்தான மாற்றமேற்படும். இது நன்மைக்காகவே இருக்கும், குழந்தைகளைப் பற்றி கவலைப்படவேண்டிவரும். யந்திரங்கள் : வீடு, வாகனம் பழுது பார்க்கவேண்டியிருக்கும். புதிய பொறுப்புகளை நல்லபடி கவனிக்க முடியும். வியாபாரிகளுக்கு நல்ல வாய்ப்புள்ளது.

அதிர்ஷ்ட எண் : 1, 2, 8

நல்ல தேதிகள் : 1, 2, 3, 4, 11 16, 28, 29, 30.

மகரம்

வீடு, வாகனம், உத்தியோகம், உறவினர் எல்லாமே முரண்பாடாக இருக்கும். மனசஞ்சலம், குழப்பம் எல்லாமுண்டு. தொழிலிலும் மந்த நிலை இருக்கும். மேலதிகாரிகளின் கெடுபிடியும் தொந்தரவுமிருக்கும். வியாபாரத்திலும் கடினமான போட்டி இருக்கும் இடமாற்றமும் ஏற்படலாம். பகவானை நம்பி காரியங்களைச் செய்யுங்கள்.

அதிர்ஷ்ட எண் : 4, 8

நல்ல தேதிகள் : 6, 7, 8, 9, 16 20, 26, 28, 30.

கும்பம்

கவனக் குறைவால் சில காரியங்கள் கெடலாம். பணவரவு நிறைய இருக்கும். உடல் நலம் குறையலாம். ஏதோவொரு மனசஞ்சலமுமிருக்கும். வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

அதிர்ஷ்ட எண் : 6, 7, 9

நல்ல தேதிகள் : 2, 3, 5, 11, 18, 24, 27.

(அடுத்த பக்கம் பார்க்க)

கிரிதர கோபாலா

(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் 10 :

தோழி! நான் பிரபு கிரிதரகோபாலனுக்கு என் உடைமை எல்லாவற்றையும் ஒப்பித்துவிட்டேன். அவ்விதம் இருந்தபோதிலும் நான்மறைவாக இந்த வியாபாரத்தைக் கூறுகின்றேன். சிலர் இஃது உண்மை அன்று என்றும், இன்னும் சிலர் கபடமென்றும், இந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை நான் திருடிவிட்டேன் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். இவர்கள் எல்லோரும் உண்மையைப் பேசவில்லை. நான் உலகமறியமத்தளம்கொட்டிக்கண்ணனை வாங்கியுள்ளேன். நான் கண்ணனுக்கு ஊஞ்சல்பண்ணி எழுந்தருளபண்ணியிருக்கிறேன். நன்றாக என்னுடைய நகைகள், தொடி, கங்கணம் அனைத்தையும் அவரிடம் ஒப்புவித்து விட்டேன். இன்னும் சிலர் என்னை முழுவதும் அவருக்கு அளித்துவிட்டேன் என்கிறார்கள். அவர் கருப்பு என்றும் சிவப்பு என்றும் சொல்கிறார்கள் நான் என் கண்களை நன்றாகத் திறந்து கொண்டு முழு சம்மதத்துடன் என்னை அவருக்கு அளித்துவிட்டேன். நன்றாக சீர்தூக்கிப் பார்த்து, தராசில் நிறுப்பவள்போல், அவருடைய முழுவதுமான பெருமைகளை, அறிந்து கொண்டு, என்னை அவருக்கு அளித்து விட்டேன். முன்பிறவியிலேயே அவரால்வாக்களிக்கப்பட்டு என்னை இந்த பிறவியில் அவரால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டு விட்டேன். ஆகவே, முழுவதிலுமே கிரிதரநாதர் கிருஷ்ணனுக்கு நான் அடிமை, அவர் எனக்கு ஸ்வாமி.

பாடல் 11:

ஏ தோழி! எனக்கு கேவலம் கிருஷ்ணனே வாழ்க்கைப் பேறு (ஜீவனம்), அவரை விட்டு எனக்கு வேறு விஷயத்திலோ அல்லது ஆசையோ ஒன்றுமில்லை. ஏ! கிருஷ்ணா! நான் உன் திருவடிகளைப் பற்றி வழிபாடு செய்வேன். இந்த வழிபாட்டைத் தவிர எனக்குஅணிவகைகளோ, ஒப்பனைகள் செய்வதிலோ. மணமுள்ள பொருள்களைப் பூசுவதிலோ விருப்பம் இல்லை. இந்தச் சுற்றம் உறவுகளெல்லாம் எனக்கு மரணத்துக்குச் சமம். ஆகவே, எனக்கு ஸ்வாமி கிரிதர கோபால். கிரிதரநாதர், அவரை அடைந்துவிட்டபிறகு இந்த பிறவி எனக்கு ஒரு பொருட்டல்லவாகி விட்டது.

பாடல் 12 :

ஆகவே, என்னைப் பற்றி யார் எது வேண்டுமானாலும் நல்லதோ, கெட்டதோ, சொல்லிக் கொள்ளட்

மீனம்

எல்லாவிதத்திலும் நன்மையாகவே இருக்கும். க்ஷேத்ராடனம் செய்வார்கள். பிரயாணங்கள் நிறைய இருக்கும். வியாபாரிகள் புதிய முயற்சிகள் செய்வர். உத்தியோகத்தில் இடமாற்றமுமிருக்கும். இந்த மாதம் நன்றாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண் : 2, 7, 10

நல்ல தேதிகள் : 1, 4, 5, 7, 10 12, 18, 20, 29.

டும். எனக்கு கண்ணன் மீதிருக்கும் பேரீடுபாடு ஒருநாளும் குறைவடையாது. என்காதல் முற்றிவிட்டது. அதனால் சில பேர்கள் எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்கிறார்கள். அவருடைய மயக்கினால், நான் சாதுக்களுடைய கூட்டத்தை அடைந்து கெட்டு விட்டேன் என்கிறார்கள். அவர்களுடைய கூட்டத்தில் நவாசாரம்போல கலந்துவிட்டேன். ஆகவே ஆடையில் நூல் போல ஒன்றிவிட்டேன் என்று ஏசுகிறார்கள். மீராதேவி சொல்கிறாள் "ஆம். நான் என் மாளிகையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன். சத்குரு ஒருவர் என்னை அந்தத் தூக்கத்திலிருந்து விடுவித்தார். அந்தகார இருட்டில்நான் தனியாகத் தவித்துக்கொண்டிருந்தேன் சத்குரு எனக்கு இந்த இருட்டைத் தவிர்க்க ஞான ஒளியை அளித்தார் நான் இப்பொழுது விழித்துக்கொண்டேன். இனி ஒருநாளும் நான் கண்ணனை மறக்கமாட்டேன்.

பாடல் 13.

ஏ, ராணா! என்மீதுகுற்றம்சாட்டுகிறாயே, முன்னேற்பாடாகவே, ஏன் என்னை நீதடுக்கவில்லை? இப்போது எனக்கு கண்ணனிடம் விருப்பம் ஏற்பட்டு விட்டது. இதை நான் விலக்குவது சரியன்று. என்னால் உனக்கு அவமானம் ஏற்படுமாயின் என்னைக் கொன்றுவிடு. தியாகம் செய்துவிடு. ஆனால் உன் பயத்தினால் நான்கண்ணனிடம்வைத்திருக்கும் பிரேமையை விடமாட்டேன். நான் எப்பொழுதும் கண்ணனையே உகசரித்து வாழ்வேன். இதுஉனக்கு வெறுப்பு உண்டாக்கியிருக்கும். என்னைக் கொல்வதற்கு நஞ்சை அனுப்பிவைத்தாய், நான் நம்பினவரைக் காப்பவரான கண்ணபிரானை மனத்தினால் வணங்கி அந்த நஞ்சினைக் குடிக்க, அதுஎன்னை ஒன்றும் செய்யவில்லை அது எனக்கு புகழமுதமாகிவிட்டது. என் பிரபு சியாம் சுத்தர் தீனபந்து, அவரே தனிப்பட்ட மனிதனின் உள்ளத்தை முழுவதும் அறிவர். ஆகவே அவரே என்னை முழுமையாகக் காப்பாற்றுவார். மயில் இறகுகளை அணிந்த கண்ணன் என் உள்ளத்தில் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கிறார். ஆகவே இந்த மீராபாயின் தலைவர் கிரிதரநாதர் அவள் கேவலமாக, தனிப்பட்ட ஒருவளாக நாட்டியமாடும் கண்ணனுக்கு அடிமை. அடிமைப்பட்டவள் என்று தன்னை சொல்கிறாள் மீராதேவி.

நல்ல புத்தகம்:

ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதைகள்

குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் பக்கத்துக்கு பக்கம் ஆப்செட் நீதிப் படங்களுடன் இதில் கருத்துள்ள பனிரெண்டு கதைகள் இடம் பெற்றுள்ளன. சின்னச் சின்ன கதைகளாக கதையின் இறுதியில் ஒரு நீதி போதனையுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

குழந்தைகளுக்காக அழகான படங்களுடன் ஆங்கிலப் புத்தகங்கள் வெளியிடுவதைப்போல இந்நூலைப் பிரசுரித்திருக்கிறார்கள்.

விநாயகப் பெருமான் – பார்வதி தேவி கதையோடு ஆரம்பித்து 'பொய்யும் உண்மையானது' என்பதோடு நீதிக்கதைகள் முடிவடைகின்றன. உயர்ந்த காகிதம், நேர்த்தியான அச்சு, பெரிய சைஸ், 48 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரு. 4-00.

வெளியிட்டோர்: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4.

உபாஸனை

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

தமிழ்ககூறும் நல்லுலகில் கவியோகி சுத்தானந்த பாரதி அவர்களைத் தெரியாதவர்கள இருககமாட்டார்கள். சிறநத தேசபகதர், பததிரிகையாளர் ஆசிரியர், யோக சமாஜம் என்ற பெயரில அடையாறில் பல வருடஙகளாய் சிறந்த ஆன்மீக தொண்டாறறி வந்த இவர் ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் போனற பல நாடுகளில பிரயாணம் செயதவர். பல பாஷைகளில பயிற்சி யுள்ளவர். சமீப ஆணடில் ராமனுதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகே சோழபுரம் என்ற கிராமத்தில் சுமார் 30 ஏக்கர் இடத்தில இபபுனித சமாஜத்தின் அறப்பணி தொடர்நது நடைபெற்று வருகினறன இங்கு 1979 முதல் சுவாமிஜியின் பெயரால் சுத்தானந்த பாரதி தேசீய வித்யாலயம் உயர்நிலைப் பள்ளி நடைபெற்று வருகிறது. தொழில்கல்வி இணைந்த குருகுலமாக தொண்டாற்றி வருகிறது

ஸ்ரீ சுவாமிகள நூற்றுககணக்கான நூல்களை எழுதியுள்ளார்கள் காவியங்கள, சிறுகதைகள், பெரிய தொடர் நாவல்கள், பெரியோர்களின் வரலாறுகள், கட்டுரை ஆராய்ச்சிகள். இலககியம், அரசியல சரித்திர குறிப்புகள். பிரயாண நூலகள, தெலுங்குக காவியஙகள் போன்ற பலவித அம்சங்கள நிறைந்த இலககிய சேவைகளை செயதுள்ளார்கள், செய்தும் வருகிறார்கள்.

இலககியத்திறகே இலக்கணமாய் அறிவுப பெட்டகமாய் உள்ள இவரை நம் அரசு கவனியாமல இருபபது ஏனோ ?

பரமசுத்தமாய் உளள சுத்தானநத பாரதியை தேசீய சொத்தாக ஏற்று பேணி காக்க வேண்டாமா ?

தூய்மையிலும் அரசியல் கலந்துவிட்டால் எப்படி அசலுக்கு மதிப்பு வரப்போகிறது ?

இப்பெரியவர் மனநிறைவுடன் என் மதிப்பிற்குரிய வாசகநேயர்களுக்காக உபாஸனை என்ற பெயரில் மிகச சிறந்த பயனுள்ள புனிதத் தொடரை ஆரம்பித்துளளாாகள. ஆன்மீக உள்ளம் கொணட அன்பர்கள் படித்து பயன் பெற வேண்டுகிறேன்

—ஆசிரியர்.

உபாஸனை 1.

உபாசனை என்றால் வழிபாடு, வேதாகாம விதிப்படி இஷ்டதெய்வத்தை ஆராதனை செய்தல் என்பதாகும். இதனால் மனத்தூய்மை, மனத்திட்பம், வினைத்திட்பம், சக்தி விளக்கம், காரியசித்தி பெறலாம். வழிபாடுகள் பலவகையாகும். உள் வழிபாடு, தியானத்தால் இயங்கி மன ஒருமை தரும்; சொல்வழிபாடு அருள் வாக்குகளையும் உபதேச மந்திரங்களையும் உருவேற்றி இயங்கும் மந்திர ஜபத்தைக் குருமூலம் உபதேசம்பெறவேண்டும், புறவழிபாடு உருக் கடவுளை முறைப்படி அபிஷேகம், அருச்சனை, தூப தீபம் காட்டுதலால் இயங்கும்.

அப்பர் சுவாமி பாடுகிறார் ;

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீதிலும் உன்னை மறந்தறியேன்—நின்
நாமம் என் நாவில் மறந்தறியேன்.

மகாயோகியான சுந்தரமூர்த்திநாயனுர் பாடியுள்ளதையும் படியுங்கள்:

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திரு பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரை ஊரிப்பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நமச்சிவாயவே.

விழுப்பிலும் துயிலிலும்கூட சுந்தரர் நாக்கு நமச்சிவாய என்ற பஞ்சாட்சரத்தை மறக்கவில்லை.

மறவா நினைவே பிறவா வழியாம்

உபாசனை முறைப்படி இயன்றல், அந்தரங்க சுத்தியும் யோக சித்தியும் பெறலாம்,

செய்வதெல்லாம் ஆராதனம்

பகவான் ஆதிசங்கரர் சிவானந்த லகரியில் அருளுகிருர்.

ஆத்மாத்வம் — நீயே ஆத்மா

கிரிஜாமதி — என் மதியே சிவசக்தி பார்வதி

ஸஹசராப்ராணு— உயிரேஉடன் இயங்குவோர்

ஸரீரம் க்ரஹம் — உடலேபூஜாக் கிரகம்

பூஜாதே விஷயோப போகரசனு— நுகர்வதெல்லாம் பூஜை, வழிபாடு.

நித்ரா — ஸமாதிஸ்திதி. உறக்கமே ஸமாதிநிலை.

ஸஞ்சார பதயோ : ப்ரதக்ஷிண விதி — நடப்பதெல்லாம் கோயில் வலம் வருவதே

ஸ்தோத்ராணி ஸர்வா கிரௌ — தான் இயம்புவதெல்லாம் தோத்திரமே.

யத்யத் கர்மகரோமி — நான் செய்யும் காரியம் எதுவானுலும்

தத்தத் அகிலம் — அதெல்லாம் சம்போ தவ ஆராதனம்—சிவனே நின் வழிபாடாம்,

நின்றும் இருந்தும் கிடந்தும் எங்கும் எதிலும் ஜீவநாதனுன சிவனை வழிபட்டனர் தூயபக்தர்.

பழிகார உலகிலே, பாபக் கிடங்கிலே எத்தனையோ குற்றங்களை, பாவங்களை அறியாமக்கள் செய்கின்றனர். பட்டினத்தார் ஜீவன் செய்த குற்றங்களுக்கெல்லாம் சிவனிடம் மன்னிப்பு கேட்கிருர் :

சொல்லால் வரும் குற்றம்
சிந்தனையால் வரும் தோடம்
செய்த பொல்லாத தீவினைகள்
பார்வையில் பாபங்கள்

புண்ணிய நூல் அல்லாத கேள்வியைக்கேட்டிடும் தீங்குகள்

எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே எனவணங்குகிருர்.

X X X

அன்பன் அன்பினுற் செய்த வழிபாடெல்லாம் ஆண்டவன்ஏற்கிருன்

கண்ணப்பன் செய்த அன்பு வழிபாடு உங்களுக்குத் தெரியும். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின் தன்மையை, மாணிக்கவாசகரும் போற்றிப்பாடுகிருர்.

நான் கண்ட ஒரு பக்தனைப்பற்றி பேசி முடிக்கிறேன், நான் பிறந்தது சிவகங்கை. என் வீட்டிற்கு எதிரே சிவன் கோயில். அதற்கு நேரே மேற்குக் கோடியில் பெருமாள் கோயில், நான் காலை பெருமாள் கோவில், மாலை சிவன் கோயிலில் வழிபாடு செய்வதும் பாடுவதுமாயிருந்தேன்.

ஹர ஹர ஹர ஹர மஹாதேவ—சிவ
பார்வதி ரமணு ஸதாசிவா

என்னும் மந்திரத்தை நடராஜப் பெருமான் சந்நிதியில் ஓதிக்

கொண்டே உள்ளொருமை கூடி தியானத்தில் ஆழ்வதுண்டு.

எனக்கொரு நண்பன் வாய்த்தான், அவன் பிறவிக் குருடன், அவனுக்கொரு தாயில்லாப் பிள்ளை உண்டு, அப்பன்பெயர்மகாதேவன் மகன் பெயரோ சின்னமகாதேவன். அவன் கோலைப் பிடித்து மகன் வழி நடத்தினன். நான் சொல்லும் மந்திரத்தைக் கேட்டுக் கேட்டு அவனுக்கும் மனப்பாடம் ஆனது.

அவனும் எப்போதும் அல்லும் பகலும் நின்றும் இருந்தும்கிடந்தும் என்றும் 'ஹரஹரஹரஹர மகாதேவ-சிவ பார்வதி ரமண சதாசிவ' என்று சொல்லிக்கொண்டு வந்தான், அதனுல் அவனுக்குஹரஹர மகாதேவன் என்ற பெயரே வழங்கலாயிற்று,

நான் கோவிலுக்குள் புகுந்ததும் அதே மந்திரம் சொல்லி என்னைவரவேற்பான், அவன் நீண்டுயர்மேனியான்;நல்லபலசாலி;சிவபக்தியுடன் சிவத் தொண்டும் செய்துவந்தான், கோவில் பூசை மணியடிப்பது, பெருக்கி மெழுகுவது. தோட்டத்தில் பூஞ்செடிகளுக்கு தண்ணீர் வார்ப்பது, மலர் கொய்வது, மாலை கட்டுவது, பிரதோஷ நாட்களில் வீடுவீடாகச் சென்று அரிசி பருப்பு எண்ணெய் வசூலித்துகுருக்களிடம் தருவது கோயில் உழவாரம் பணி செய்யும்போது ஏதாவது பணம் காசு கிடைத்தால் கோயில் உண்டியலிலே போடுவது, திருவிழாக் காலத்தில் சுவாமி தூக்குவது, தேர் இழுப்பது—இவ்வாறு எல்லாக் காரியங்களையும் ஹர ஹர மகாதேவ ஜபத்துடனே செய்துவந்தான்.

அவன் அல்லும் பகலும் உரக்க ஹரஹர மந்திரம் சொல்லுவது கோயில் பக்கத்திலிருந்த டம்பாசாரி வக்கீலுக்குத்தொல்லையாயிருந்தது. 'டே, நான்சென்ஸ் ஹரஹர இனி இப்படிக் கத்தினுல் பப்ளிக் நியூசென்சு என்று போலீஸில் சொல்லி உன்னை சிறைக்குஅனுப்பி விடுவேன் கவனம் என்று மிரட்டினுர்,

பக்தன் பணிவுடன் 'ஐயா, இந்த மந்திரமே என் மூச்சு; மூச்சுவிட்டாலும் போலீசு சிறையிடுமா? அதுவும் சிவன் இச்சையானுல் நடக்கட்டுமே—அங்கும் சிவமயமே, சிவ நாமமே' என்று பணிவுடன் சொன்னுன்,

ஒருநாள் பிரதோஷத்திற்கு அரிசி வசூலிக்க வந்தபோது நாயை ஏவிவிட்டான், வக்கீல் குமரஸ்தாவோ பக்தனின் தடியை பறித்தான். நாயோ அவன்மேல் விழுந்துபிடுங்கியது. அரிசிக் கூடையுடன்பக்தன் கீழே விழுந்தான். கால் புண்ணுனது.

ஹ...ஹ...ஹ...அட ஹரஹரக் குருடா உன் சிவன் கண்ணைத் திறக்க முடியவில்லையே என்று கேலி செய்தான், பக்தன் அவன் சித்தமிருந்தால் கண்ணும் திறக்கலாம் என்ருன்,

சுந்தரமூர்த்தி நாயனுர் இழந்த கண்ணைப் பெற்ற அற்புதத்தைஅவனுக்குச் சொல்லி ஆறுதல் கூறினேன், கண்ணப்பன் கதையைசிவராத்திரியன்று பக்க வாத்தியங்களுடனே செய்தேன், பக்தனுக்கு நம்பிக்கை வலுத்தது. சிவார்ச்சனை மலர்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டு;

உன்னைக் காண வேண்டும்
கண்ணைத் தா சிவா
என்னைத் தொண்டனுக்கி
இன்பந் தந்தவா.

என்று பாடத் தொடங்கினுன், பிரதோஷத்தன்று,

இன்றெனக் கருளி
இருள் கடிந்தே
நன்றுனைக் காணச் செய்
நடராஜ சிவனே

என்று பாடிக்கொண்டே காலைவழி

பாடு நடந்தபோது சிவ சந்நிதியில் விழுந்து கும்பிட்டு

கண்ணைத் திறப்பாய்—
முக்கண்ணு உன்னைக் காணவே
பண்ணுக்குருகும்
பசுபதியே.

என்று மெய்மறந்து பாடினான், ஆடினான், விழுந்து புரண்டான்— கண்ணீரால் உடம்பு நனைந்தது, கண்ணும் திறந்தது,

தீபாராதனை நடக்கிறது. சர விளக்கேற்றி பட்டர் ஆகமமுறைப் வழிபாடு நடத்துகிறார்.

அகக்கண்ணைத் திறந்தாய்
— சிவனே
முகக்கண்ணுந் திறந்தாய்
தக தக தகவெனத் தணலும் சந்நி
தானத்தைக் கண்டு வந்தேன்

ஹர ஹர சிவ சிவா மஹாதேவ— என்று மகிழ்ந்து விழுந்து கும்பிட்டு கோவிற்பணியே கதியென்று வாழ லானான்,

அவன் மகனும் திருமறை நூல்க ளெல்லாம் கற்றறிந்து ஓதுவராகிப் பெரிய புராணம் படித்தலேபெரியாத் தொண்டானான்,

சிவநாமம் இருவரையும் திரு வருள் தொண்டராக்கியது,

(தொடரும்)

பொன்னான புனிதப் பணி

திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயத்திற்குச் செல்பவர்கள் அருள் மிகு கற்பகாம்பாள் சந்நிதியின் நேரெதிரே வெளிப்பிரகாரத்தில் வாயிலார் நாயனார் சன்னதியில் அமர்ந்து லலிதா சஹஸ்ரநாமம் சொல்லும் பூவையர்களைப் பார்க்காமல் இருக்கமுடியாது. முப்பது ஆண்டுகளாக இவ்வருந்தவப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ கற்பகம் சுவாசினி சங்கத்தினர், அப்பணியின் நினைவாக அருள்மிகு கற்பகாம்பா ளுக்கு தங்கத்தில் சகஸ்ரநாம திருசதி நாமாக்கள் பொறித்த காசு மாலை (1008 காசுகள் கொண்டது) செய்து அம்பாளுக்கு அணிவித்து அனை வருக்கும் அருளாசி கிடைக்கச் செய்ய முனைந்திருக்கிறார்கள்.

காஞ்சிப் பெரியவர்களின் அருளாசியுடன் நடைபெறும் இப்புனிதப் பணியில் அன்பர்கள் அனைவரும் பங்குகொண்டு அம்பாளின் அருளாசி பெற்றுய்யுமாறு வேண்டப்படுகிறது. ஒவ்வொரு காசும் சுமார் அரை சவரன் நிறைமதிப்புடையது.

இப்பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி அன்பர்கள் தங்களால் இயன்ற தங்கத்தை வாரி வழங்கி நற்பயனடையுமாறு வேண்டப்படு கிறது.

காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ. முத்துலட்சுமி (தலைவி, ஸ்ரீகற்பகாம்பாள் ஸஹஸ்ரநாம கோஷ்டி) —
9. அருணகிரி முதலி தெரு. சென்னை-600 028.

தகவல் : டாக்டர். எஸ். விஸ்வநாத சிவாச்சாரியார்

நாடகமே உலகம்

பகவான் மனிதனையும் படைத்து மனம் என்ற ஒன்றையும் வைத்தான். இந்த மனம்தான் மனிதனை அலைக் கழிக்கிறது. அதை செய்யலாமா, இதைச் செய்யலாமா, அங்கே ஓடலாமா, இங்கே போகலாமா என்று சதாக் காலமும் சிந்திக்கச் செய்கிறது. மனதை வாட்டுகிறது. எல்லாவற்றுக்குமே விதி என்ற ஒன்றையும் ஏற்படுத்தினான் பகவான். அதன்படிதான் எதுவும் நடக்குமென்று ஏற்பாடும் செய்து வைத்திருக்கிறான். இதை மட்டும் ரகசியமாக வைத்திருக்கிறான்.

தலையெழுத்து நிபுணரென்று யாரும் இன்னும் ஏற்படாததால் இந்த விதி என்பதுஎப்படியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்த விதிப்படி எல்லாம் நடக்கும். ஆனால் விதிப்படி எல்லாம் நடக்கட்டும் என்று யாரும் கையைக் கட்டிக் கொண்டு வீட்டோடு உட்கார்ந்திருந்தால்உலகத்தில் வாழ்க்கை ரசிக்காது. உலகம் சுறுசுறுப்பாக இயங்காது அதனால்தான் கடவுளையும் நம்பு, துடுப்பையும் தள்ளு என்றார் ஒரு பெரியவர்.

ஓடத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு எல்லாம் கடவுள் செயல், விதிப்படி நடக்கும் என்றால் ஓடம் நகருமா? அலைகாற்று வந்தால் என்ன செய்வது? தெய்வ பலமும் வேண்டும், முயற்சியும் நம்பிக்கையும் வேண்டும். தெய்வ நம்பிக்கை முயற்சி இரண்டும் ஒன்று சேரும் போது தெய்வ பலமும் ஏற்படும். மனிதனாகப் பிறந்தவர்களுக்கு எது எது எப்போது நடக்க வேண்டுமென்பது பகவானால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ள விஷயம்.

மனிதன் பகவானை நம்பி முயன்றால் அந்தந்த சமயங்களில் அது நடக்கும்.' ராமதாஸருக்குராமனிடம் பக்தி அதிகம் அவருக்காகக்கோயில் கட்டினார். தானீஷாவின் பணத்தை எடுத்து செலவு செய்துவிட்டார். அதன் பலன் சிறைவாசம். பன்னிரெண்டு ஆண்டுகள் சிறையிலிருந்தார். அப்போதும்கூட ராமனிடம் பக்தி குறைவில்லை. ஹே ராமா! இதுவென்னசோதனை? என்றுதான் அழுதார் பனிரெண்டாண்டுகளானதும் பகவான் அருள்புரிந்தார். இன்றைக்கும் அதன் அடையாளங்கள் உள்ளன.

மாணிக்கவாசகர் கதையும் இப்படித்தான். பாண்டிய மன்னனிடம் குதிரை வாங்குவதற்காக கிடைத்த பணத்தை பகவத்கைங்கர்யத்துக்கு செலவழித்துவிட்டார், அதனால் பல தண்டனைகள், துன்பங்கள் ஏற்பட்டன, ஆனாலும் அவர் பரமேச்வரனிடத்தில் வைத்த பக்தி குறையவில்லை. ஈஸ்வரனே குதிரைக்காரனாக வந்தார். நரிகளையெல்லாம் பரிகளாக்கிப் பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தார். மாணிக்கவாசகரை தப்புவித்தார்.

பல நாட்கள் வறுமையால்வாடிய ப்ராம்மண ஸ்திரீக்கு ஆதிசங்கரரின் அனுக்ரகம் கிடைத்தது இவளுக்காக அவர் சனகதாரா ஸ்தோத்ரம் செய்ய தங்க நெல்லிக்கனிகளாக வீடு பூரா வர்ஷித்தது. இதையெல்லாம் முன்னமேயே செய்திருக்கக் கூடாதா? முடியாது.

அதற்குக் காலம் வரவேண்டும். அதுவரையில் காத்திருக்க வேண்டும் நம்பிக்கையோடு பக்திஇருக்க வேண்டும். எந்த துன்பம் வந்தாலும் எல்லாம் அவன் செயல் என்ற எண்ணம் வேண்டும். இவர்களுக்கு அவனருள் நிச்சயம் கிடைக்கும்.

— வைரம் ராஜகோபால்

உலகங்காத்தான் மூலி

வைத்திய மேதை - சுவாமி ஹரியானந்தா, லக்ஷ்மீபுரம், கீழ்க்கரை

உலகங்காத்தான் மூலி யெனப்படும் இம்மூலிகை மலைப்பகுதிகளில் அதிகம். மணற்பகுதிகளில் மழைக் காலங்களில் தென்படும். செடி இனத்தைச் சேர்ந்த இந்த மூலிகையின் இலைகளைத் தேவையான அளவு சேகரித்து நிழலில் நன்கு உலர்த்தி இடித்துசீலைவடிவுசெய்து குழி அம்மியிலிட்டு காமவீரச் செடியின் சமூலச் சாற்றுல் ஆறு மணி நேரம் நன்கரைத்து கழற்சிக்காய அளவு மாத்திரை செய்து காலை ஒரு மாத்திரை வீதம் உண்டு வர வேண்டும்.

அதிக பித்ததால் நரம்புகளின் சக்தி குறைகிறது, நுண்ணியவேலைகளைச் செய்யும்போது கைவிரல்கள் நடுக்கம் ஏற்படுதல், சிறு அதிர்ச்சியைக்கூட தாங்காமல் இதயம்வேகமாக துடித்தல், தேகம் நடுங்குதல், எப்பொழுதும் இதயம் பயந்த சுபாவத்துடன் முகக்களை குன்றுதல், போக சக்தி குறைதல், விந்து உற்பத்தி குறைதல், இருக்கும் கொஞ்சநஞ்ச விந்துவும் நீர்த்துப் போய் தண்ணீர்போல் வெளியாகுதல் போன்றவைகளுக்கு இந்த உலகங்காத்தான் மூலி குறைநீக்கி காப்பாற்றும் சக்தி படைந்தது.

வியாதியை அறிந்து ஒரு மண்டலம் முதல் மூன்று மண்டலம் வரை உண்டுவர ஆண்மை நரம்புகள் சக்திபெற்று மேற் கண்டகுறைகள் முற்றிலும் நீங்கி பித்தம் குறைந்து; உடல் வளர்ச்சி உடலுறுப்புகள் வளர்ச்சி பெற்று தேகம் பூரிக்கும். உடல் அழகு கொடுக்கும். தேகம் இறுகும்.

உலகங்காத்தான் மூலியின்சமூல மாத்திரையை (வேர் முதல் காய் வரை—இடித்து—தால போதம் மூலியின் இலைச் சாற்றுல் அரைத்து) ஒரு மண்டலம் உண்ண கபாலபிணிகள் அனைத்தும் நீங்கி அறிவு பிரகாசிக்கும். முகத்தில் ஜீவகளை பிரகாசிக்கும். இரு மண்டலம் இக்குளிகையை உண்ண இதயதிடம் மேலோங்கும். எவ்வளவு கஷ்டமான வேலைகள்செய்தாலும்களைப்பு தோன்றுது. சகல இருதய பிணிகளும் விலகும் ஆஸ்த்மா, க்ஷயம், காசம், இருதயவலி, இருதயவாய்வு மாரடைப்பு முதலிய நோய்கள் அனைத்தும் மறைந்து திடமிகு இதயத்தை பெற்று விளங்குவர் மூன்று மண்டலம் இந்தக் குளிகையைத் தொடர்ந்து ஆவின்பாலில் உண்டு வர—பயங்கர ரணங்கள், கரப்பான், ஆறாத விஷ நீர்ப்புண்கள் நீங்கி அங்கம் மாசுமறுவற்று புனிதமடையும். பதினெட்டு வகை குஷ்டப் பிணிகளும் நீங்கும் நான்கு மண்டலம் சாப்பிட்டால் கருத்த தேகம் பொன்னிறமாகும் வைசூரி தழும்பு கூட மறைந்துவிடும் ஆறுமண்டலம் உண்ண காயம் கற்பமாகும். நரைமுடி கருக்கும் தேகத்திலுள்ள சகல பிணிகளும் நீங்குவதோடு பூரண ஆயுள் வரை எப்பிணியும் அண்டாது. சந்திரனை ஒத்த முக அழகுடன் கடைசிவரை வாழலாம். சக்திமிக்க இந்த மூலிகை—உயரிய காயகற்ப மூலிகையாகும்.

தங்க, வைர நகைகளுக்கு
K.R. & சன்ஸ் ஜுவல்லர்ஸ்
பெரியகடை வீதி, கோயமுத்தூர், Ph: 23633

அத்வைதி யாருக்கும் விரோதி அல்ல

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ.ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள்

சமுதாயப் பணி சமுதாயமனைத்துக்கும் பொதுவானது மனித சமுதாயம் ஒன்று என்ற கண்ணோட்டத்துடன் சமுதாயப் பணி செய்யப்பட வேண்டும்

பாரதநாட்டின் கலாசாரம் மிகவும் பழமையானது அதுதோன்றிய காலம் இன்னது என்று ஆராய்ச்சியாளர்களால் வரையறுத்துச் சொல்ல முடியாத பழமை வாய்ந்தது. இந்த கலாசாரம் காரணமாகதான் எத்தனையோ வேறுபாடுகளுக்கிடையேயும் ஆன்மீக நெறி ஒருமைப்பாட்டு உணர்வுடன் இருக்கிறோம்.

தொன்மையான கலாசாரம் காரணமாகத்தான் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். எத்தனையோ மன்னர்கள் நம் நாட்டைக் கைப்பற்றி தங்கள் கலாசாரத்தைக் கொண்டு வந்த போதிலும், அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வாழும் மனப்பான்மை அந்த பழமையானகலாச்சாரம்தான் நமக்குத் தகுந்தது. அடுத்தவர்களை அழிப்பது நமது கலாசாரம் அல்ல. நாம் அழியாமல் காக்கவே அந்தக் கலாசாரம் உதவுகிறது.

இன்று நம்மிடையே சமயப் பிடிப்பு குன்றி வருகிறது. மனித வாழ்க்கையில் சமயப்பற்று இருந்தால்தான் நல்ல எண்ணங்கள், உணர்வுகள் மலர்ந்து வாழ்க்கை சீரானதாக அமையும். சமயப்பற்றும், கலாசாரப் பற்றும் இருந்தால் எத்தனையோ ஆக்ரமிப்புகளையும் நாம் தவிர்த்துவிட முடியும்.

சமயப்பணி என்பது சமுதாயப் பணியையும் உள்ளடக்கியது. ஆனால் சமுதாயப்பணி ஒரு சார்புடையதாக இருக்கக்கூடாது. அனைவரும் சமம் என்ற பொதுநோக்கோடு சமுதாயப் பணி அமைய வேண்டும் அத்வைதி யாருக்கும் விரோதி அல்ல என்று ஆதிசங்கரர் கூறியுள்ளார்கள். ஆகவே, ஹிந்துக்கள் யாருக்கும் விரோதிகள் அல்லர் ஹிந்துக்கள் உணவு, உடை, நாகரீ

குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள் பிரஸ்டீஜ் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில் எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எல். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள் :

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை :

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

கத்தில் வேறுபட்டவர்களாக இருந்தாலும் கலாசாரத்தைப் பொறுத்த மட்டில் ஒன்றுபட்டவர்களாக இருக்கவேண்டும்.

உலகில் நெருக்கடிகள் தோன்றி வன்முறைகள் தலைதூக்கியுள்ளதோடு பக்திநெறி குறைந்து வருகிறது. லௌகீக வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் பெற்று பக்தியில்லாமல் வாழ்ந்துவிடலாம்என்ற நம்பிக்கை வளரத் தொடங்கிவிட்டது. இதனால்தான் இயற்கையின் சீற்றங்கள் நம்மை பெருமளவுக்குப் பாதிக்கிறது.

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மனிதன் வலிமையுள்ளவனாக இருந்தாலும் அவன் தன் வாழ்க்கையைப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ளுதற்கு இறைவனின் ஆசி தேவை. ஹிந்து மதத்திற்கு எப்பொழுதெல்லாம் ஆபத்து தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் மகான்கள் தோன்றிஅதற்குப் புத்துயிரளித்துவருகிறார்கள், அதன் காரணமாக பக்தி உணர்வு மங்கிவிடாமல் இருக்கிறது.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் மூலம் பக்தி மார்க்கத்தை நமக்குப் பெரியவர்கள் தந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் விளக்கும்வகையில் இந்திய சமய கலாசாரக் கண்காட்சியில் ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

பழந்தமிழ் நூல்களில் நாத்திகத்தைப் பரப்பும்பாத்திரங்களேபாடல்களோ இடம் பெற்றிருக்கவில்லை. உறுதியான தேசப்பற்றும் தெய்வ பற்றும் வளரவேண்டும் இந்து சமயத்தில் சைவம், வைணவம் என்று வேறுபாடுகள் இருந்தபோதிலும் தெய்வ நம்பிக்கையில் வேறுபாடு இருப்பதில்லை சமய வேறுபாட்டினால் சமயப்பற்று குன்றிவிடாமல் வளர்ந்துவர வேண்டும்

தொகுப்பு : ஏ எஸ்.எம்., சென்னை.

சிந்தனைக்கு.........

ஒவ்வொருவரையும் எங்கெங்கு, எப்படி எப்படி, எப்போது, வைக்க வேண்டும் என்று தராசில் நிறுத்துத்தான் கடவுள் வைக்கிறான்.

ஒரு 'நம்பிக்கை உள்ளவன், கண்ணாடி ஒன்று கீழே விழுந்தும் உடையாமல் இருந்தால் 'கடவுள் காப்பாற்றி விட்டார்' என்று நினைப்பான், நம்பிக்கை அற்றவன் அந்த இடத்தில் எதுவும் சிந்திக்கமாட்டான். 'அப்படியே நினைத்தாலும் நம் நேரம், நல்ல நேரம்' என்றுவது நினைப்பான்,

யாரையும் அநாவசியமாக சந்தேகப்படக்கூடாது. ஆனால் அஜாக்கிரதையாகவும் இருக்கக்கூடாது,

எல்லோரையும் நேசிப்பது எப்படி? ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு நல்லதைக் காண முயல வேண்டும்.

யாரிடமாவது நல்லவைஏதாவது இருந்தால் அதை மற்றவர்களிடம் கூறி புகழ்வது நல்லது,

யாரிடமாவது கண்டிக்கத்தக்கது ஏதாவது இருந்தால், அதை அவரிடமே கூறுவது நல்லது.

—வே சு. ஸ்ரீதரன்.

இந்து சமயம் என்ன செய்யவேண்டும்?

வே. சு. ஸ்ரீதரன்

இந்து மதம் அநாதியானது. உலகத்தின் மிகப்பெரும் மதங்களில் ஒன்று. அது மட்டுமல்ல, மிகச் சிறந்த மதமும்கூட. ஆனால் இன்று நடக்கும் நடப்புகளைப் பார்த்தால், மதத்தைப் பற்றிய சரியான அறிவும் தெளிவும் மக்களிடையே குறைந்து விடும்போல் தோன்றுகிறது. பல மக்களிடம் குறிப்பாக இளைய சமுதாயத்திடம் இந்தப்போக்குகாணப் படுகிறது. இதற்கு யார் காரணம்? இதற்கு என்ன செய்யவேண்டும்? இவைகள் தீரயோசிக்கப்படவேண்டியவை.

மதம் என்பது மனிதனை நல்வழிப் படுத்துவதற்காகத்தான் இருக்கிறதே தவிர, அதன் மேல் தீவிர வெறிகொண்டவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவோ அல்லது தன்னை ஒருபிரசாரக்கருவியாக ஆக்கிக் கொள்வதற்காகவோ அல்ல. ஆகவே நம் இந்துமதம் தோன்றிய வரலாறும் அதுவளர்ந்த விதமும் சிறந்த தத்துவங்களையும், அடிப்படை உண்மைகளையும்விளக்கும்நோக்கத்தில்தான் என்பது தெளிவு,

பல இதிகாசங்களும்,ஞானிகளும் புராண நூல்களும் இன்னும் பிற அம்சங்களும் நம் இந்து மதத்தில் ஏராளம், ஆனாலும் இன்னும் சமயத்தைச் சரியாகப்புரிந்துகொள்ளாதவர்கள் எண்ணிக்கைதான் அதிகமாய் இருக்கிறது. இதற்குக் காரணங்கள் சில உள்ளன.

கதைகள் இதிகாசங்கள், புராணங்கள் இன்னும் பல விஷயங்களை வெறும் எந்திரங்களாகவே நாம் படித்தும் கேட்டும் வந்திருக்கிறோம் அவற்றில் உள்ள உயிரோட்டங்களை, அடிப்படைஉண்மைகளை, தத்துவங்களைச் சரியாகவும், பெரிய அளவிலும் தெரிந்து கொள்ளவில்லை,

கதைகளில் பலருக்குச் சந்தேகங்கள் வருகின்றன, கதைகள் உண்மையாக நடந்த சம்பவங்களோ, இல்லை கற்பனையோ, இது அவரவர்கள் நம்பிக்கையைப் பொறுத்தது,

உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட்
உணவுப் பொருள்கள் உங்கள் அருகாமையில் உள்ள
கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வததல குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம் பேஸ்ட்
- டாம்-எக்ஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ் (GARLIX)
- கரகரப்பான, முறமுறப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

(REGD)

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,
சென்னை - 600 001. போன்: 20401 & 20402

ஆனுல் சில அருமையான கருத்துகளை விளக்குவதற்காகவே அவைகள் சொல்லப்பட்டுள்ளன என்பது தெரிகிறது.

உருவ வழிபாடுஎன்பதுஅறிவின் ஆராய்ச்சிக்குப் பொருந்தாததாய் இருக்கலாம். ஆனுல், மனிதனின் உணர்ச்சிகள், அவன் மனதின் இயல்புகள் இவற்றிற்குத்தக்கவாறு சில வழிபரட்டு முறைகளைப் பெரியவர்கள் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். அவைகளை அந்தக்கண்ணுேட்டத்தில் பார்த்தால்தான் விளங்கும்,

நம்பிக்கை என்பது பெரிய விஷயம். அதைப் புரிந்து கொண்டால், சமயத்தைப் புரிந்து கொள்வது சுலபம், சாதி வெறி, சமயவெறி இவைகள் எல்லாம் இருக்கவே கூடாது தொழில்களின் அடிப்படையில்; சாதிகள் என்று ஏற்பட்டது, உயர்வு தாழ்வு என்ற எண்ணங்கள் நிச்சயம் கூடாது, எல்லோரும் ஓர் குலம் என்றுதான் ஞானிகள் கூறியிருக்கிருர்கள்.

தவறுகள் செய்வது மனிதனின் இயல்பு நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ மதத்தின் பேரால் சில தவறுகளோ, தவருன அர்த்தங்களோ கொடுக்கப்பட்டிருக்கலாம். அவைகளை வெட்கப்படாமல் ஒத்துகொள்ள வேண்டும்.

சமயத்தைப் பற்றிய சந்தேகங்கள் எழுப்பப்படும்போது தகுந்த அறிவாளிகள் தக்கவிதத்தில் அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். வெறும் கதைகள், சடங்குகள் இவற்றைவிட உள் அர்த்தங்களும், தத்துவங்களும்தான் முக்கியம் எல்லோரும் அன்னத்தைப் போல், தேவையான, உபயோகமுள்ள, நல்ல விஷயங்களை எடுத்துக் கொண்டு, சாரமற்றவைகளையும். தேவையற்றவைகளையும் ஒதுக்கி விடவேண்டும் மதத்தை ஒழுங்காக அனைவரும் புரிந்துகொண்டு அதன் தர்மங்களை முடிந்தவரையில் பின்பற்ற வேண்டும்

தெய்வ நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டு மனிதனை ஒருகுறிப்பிட்ட வழியில் நடத்திச் செல்வது தான் மதம். ஆகவே, தெய்வ நம்பிக்கையில் கவனம் செலுத்தாது மதத்தில் கவனம் செலுத்திப் பயன் இல்லை.

அதேபோல், வெறும் பூசைகளுடனும், ஆசாரங்களுடன், சடங்குகளுடன் மதம் முடிந்துவிட்டது என்று நினைக்கவும்கூடாது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் சகோதர பாவத்துடன் சமரச நோக்கில் ஒற்றுமையுடன் வாழவும், ஏழைகள் வலிமையற்ருேர் இவர்கள் நலனில் அக்கறை காட்டவும் பழகிகொள்ள வேண்டும்.

வரதட்சணை, சாதி வேற்றுமை போன்ற தவறுகளை மதத்தின் பேரால் செய்து மதத்தின் புனிதத்தை மாசுபடுத்தாமல் இருக்க முயற்சி செய்யவேண்டும்,

மதத்தின் பொருளைப் பூரணமாக புரிந்துகொண்டு, எல்லா விஷயங்களையும் தீர ஆராய்ந்து எல்லோருக்கும் விளக்கும் ஆசையும், அறிவும் உள்ள அறிஞர்கள் வழிகாட்டியாக செயல்பட வேண்டும்.

குண்டூசி

வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 20

தனிப் பிரதி ரூ. 1-20

காஞ்சிப் பெரியவர் தமிழகம் திரும்பவேண்டும்

அறநிலையத்துறை அமைச்சர், ஆர். எம். வீரப்பன்

அர்ச்சகர்கள் குறைந்து வருகின்றனர். பத்தாண்டுகட்குப் பிறகு கோயில் அர்ச்சகராகப் பணிபுரிய யாரும் வரமாட்டார்கள். பல அர்ச்சகர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடுவது நமக்குத் தெரியும். திருச்சி மாவட்டத்தில் அர்ச்சகர் குடும்பம் ஒன்று தற்கொலையே செய்துகொண்டது.

ஒரு மொழி என்ற அளவில்சமஸ்கிருதமொழியைப் படிப்பதை அரசு எதிர்க்கவில்லை

காஞ்சிப் பெரியவர் தமிழ்நாட்டுக்குத் திரும்பவேண்டும். அப்பெரியவரின் பாதம் தமிழ்நாட்டின் மண்ணில் பட்டாலே இம்மாநிலத்துக்கு நல்லது.

அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும், கோவில் அர்ச்சகருக்கான பயிற்சி அளிப்பதற்காக அனுமதி, பயிற்சி, மற்றும் தேர்வு முறைகள் போன்றவை தொடர்பான விதிகளை வகுக்க, ஆகமசபை ஒன்று அமைப்பது என தமிழக அரசு தீர்மானித்துள்ளது ஆகம சபைஉறுப்பினர்களைத் தேர்வுசெய்ய இத்துறையில் சிறந்து விளங்கும் நபர்களின் பெயர்களையும் கமிட்டியில் எத்தனை உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும் என்பதையும்தெரிவிக்குமாறு அறநிலைய கமிஷனரிடம் கூறப்பட்டுள்ளது

காசியில் உள்ள காசிவிஸ்வநாதர் ஆலயத்தை உத்திரப்பிரதேசஅரசு மேற்கொண்டதுபோல, சிதம்பரம் நடராஜர் ஆலயத்தை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

சிதம்பரம் ஆலய நிர்வாகம் தொடர்பாக, அந்த ஆலயத்தின் பொது தீட்சிதர்களுக்கும், ஹிந்து அறநிலையத் துறைக்கும் இடையே ஏற்கெனவே சச்சரவு இருந்துவந்தது தெரிந்ததே.

சிதம்பரம் ஆலயம் ஒரு குறிப்பிட்டபிரவினருக்குமட்டுமேசொந்தமானது, தனியார் ஆலயம் என்றும் அதன் நிர்வாக உரிமைதங்களுக்கே உரியது என்றும் பொது தீட்சிதர்கள் கூறி வருகின்றனர்.

ஆகவே, கூடிய சீக்கிரம் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும். ❋

காந்தியடிகளும் காஞ்சிப் பெரியவரும்

காஞ்சி மாமுனிவர் துறவை மேற்கொண்டு தவசியாக விளங்கிக்கொண்டே மக்கள மத்தியிலேயும் வாழ்ந்து உலகின் நல்வாழவுக்கான போதனைகளை வழங்கிவருகிறாகள். ஒரு சமயம் காஞ்சிப் பெரியவர்களிடம் காநதியடிகள் பேசிக்கொண்டிருநதார். அடிகள் அநதிப் பொழுதுக்குள சாப்பிடும் பழககமுடையவர். எனவே சாப்பாட்டு வேளை நெருங்கிவிட்டதை ராஜாஜி அவர்கள் காந்திஜீயிடம் தெரிவித்தார். ஆனால் அடிகளோ, ‘இநத மகானுடன் பேசிகொண்டிருப்பதே எனக்கு சிறநத உணவு’ என்று கூறிவிட்டார். அப்படி மகாத்மாவே போற்றிய பெருமையுடையவா காஞ்சிப் பெரியவர்கள்.

—பா. ராமச்சந்திரன (கேரள ஆளுனர்)

உணமையைச சொல்ல உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேணடும்?

உண்மையைக் கேட்க விரும்புவோர்இருந்தால அதைச சொல்வதில் என்ன கஷடம்

—தாகூர்.

தியாகராஜ வைபவம்

தியாகராஜரின் பக்திக்கு ஓர் எல்லையில்லை, சதா தன் தெய்வத்தைத் தவிர வேறு சிந்தனை அவரிடம் காண்பதற்கில்லை. பக்தனாகிய அவருக்கு விஷ்ணுவின் வாஹனமாகியகருடனும் முக்கியமானவராகிறார். இந்த பாட்டில் கருடனைப் பார்த்து வேண்டுகிறார்.

ராகம் : உசேனி   தாளம் : ஆதி

பல்லவி

வினதாஸுத ராரா நா வினுதினி கைகோனரா (வி)

அனுபல்லவி

தனுஜகபாசம்புல கண்டிஞ்ச ராரா (வி)

சரணம்

அமரேசுனி கெலிசி நீ வமுர்தமு தெச்சி
விமல கீர்த்தி வஹிஞ்சி வெலஸில்லனவீர (வி)

ஹரிகி வாஹனமென மாயய்ய வேக ராராநீ
ஸரியென பக்துனி ப்ரோவ ஸமயமிதி ராரா (வி)

த்யாகராஜநுதுனி தாஸுடௌ தீரா
நாகாசன நின்னு விநு கதியெவ்வருரா (வி)

வருவாய்! ஓ வினதையின்புத்திரனான கருடனே, என்னுடையவார்த்தைகளைக் கேட்பாய், நான் உன் புகழ்பாடக் கேளாய்,

என் தேஹம் கட்டுண்டு உள்ள பாசங்களிலிருந்து (நாகபாசம் போன்றவை) என்னை விடுவிப்பாய்

தேவேந்திரனை ஜெயித்து அமிருதத்தைக் கொண்டு வந்த உனது கீர்த்தி மிகவும் சிறந்ததன்றோ! உன் பெருமையைப் போற்றுகிறேன், வா வா கருடனே. வேகமாய் வருவாய் மஹாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனே என்னைக் காக்க வருவாய் விரைந்து உனக்கு நிகரான விஷ்ணு பக்தியை யுடையவனாகிய என்னை காக்க விரைந்துவா.

தியாகராஜன் துதிக்கும் தெய்வத்தின் வாகனமாகிய கருடா, சர்ப்பங்களை ஆகாரமாக உட்கொள்ளும் நீ என்னைக் காப்பாற்றாவிடில் யார் காப்பார் ?

என்று கருடனையும் புகழ்ந்து தன் தெய்வத்தினை அழைத்துக் கொண்டு வேகமாக வரும்படி கூறுகிறார், சுவாமிகள்.

விளக்கம் :- பி. எஸ். பரமேஸ்வரன, பி.ஏ., பி.எல்., சென்னை.

அவதரித்த

ஸ்ரீபழநி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழநி

S. சித்தனுதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

★

பரிமள விலாஸ்

S. சித்தனுதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,

அடிவாரம், பழநி–624601.

போன் : கடை 405 வீடு & ஸ்டோர் : 406

அல்லிக்கேணியில் அதிசயக் காட்சிசாலை

❋

உங்கள் குடும்பங்களுக்கும், கல்யாணம் மற்றும்
விசேஷ வைபவங்களுக்கும் தேவையான எல்லாவித அவசியப்
பொருள்கள் எப்பொழுதும் உங்களுக்கு திருப்தியளிக்கும்
வகையில் நம்பகமான, நியாய விலையில் கிடைக்கும்

ரொக்க விலைக்கும், சுலபமான தவணை முறையிலும் தருகிறோம்

எவர்சில்வர் பாத்திரவகைகள், பிரிஸ்டிஜ குக்கர் மற்றும் பலவிதமான குக்கர்கள்
கிரைண்டிங் மிஷன் முதலிய உங்கள் வீட்டிற்கு தேவையான யாவும்
நம்பிக்கையுடன் வாங்க சிறந்த இடம்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

தமிழ்நாடு பாத்திரக் கடை

120, பெரிய தெரு — திருவல்லிக்கேணி, சென்னை-5.

எமது சார்பு ஸ்தாபனம் :—தமிழ்நாடு டிரேடிங் சென்டர், கல்பாக்கம்.

மஹேந்திரவாடி - உமாசங்கரன்

33. பவானி

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்று எரித்தார்க்கு இடம்போலும்; புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அங்கு அழல்மேல் கைகூப்ப அடியார் கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல அருள்புரியும் திருந ணாவே.

—சம்பந்தர் தேவாரம்.

கொங்குநாட்டின் பாடல் பெற்ற திருப்பதிகளுள்ஏழில்,திருநணா என்று சம்பந்தரால் பாடப்பெற்றஇத்திருப்பதி ஈரோட்டிலிருந்து பத்துக்கல் தொலைவிலுள்ளது.

வடநாட்டில் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகள் கூடுமிடம் பிரயாகை என்று பக்தர்களால் அழைக்கப்படுகிறது,

அந்தத் திரிவேணி சங்கமம் பாபங்கள் போக்கி புண்ணியங்கள் தரவல்லது.

அதற்கு இணையாக நம் தமிழகத்தில் காவிரி, பவானி, அமுதநதி ஆகிய மூன்று நதிகள் சங்கமமாகுமிடம் தக்ஷிணப் பிரயாகை என்று அழைக்கப்படுகிறது.

பக்தர்கள் வேண்டுகின்ற வரங்களையெல்லாம் வாரி வழங்குகின்ற அம்பிகைக்கு பவானி என்ற பெயரும் உண்டு,

அப்பெயரே நதிக்கும் இங்கே வழங்குகிறது. அந்நதிக்கரையிலே உள்ள திருத்தலத்திற்கும் வழங்குகிறது,

காவில் அரவம் இருசுடரைப் பற்றும் காலத்திலே
மேலுலகம் பெறுவோர் புனல் மூழ்க விரும்புவது
கோலம் மிகுந்த பவானியும் பொன்னியும் கூடுதுறை
வாவிப காசி நண்ணாவூர் பயில் கொங்குமண்டலமே

என்றுகொங்குமண்டல சதகத்திலே ஒரு பாடல் வருகிறது.

இங்குள்ள கூடுதுறையிலே திரிவேணி சங்கமத்திலே நீராடி இறைவனைத் துதிப்போர்க்குதீங்கெல்லாம் நண்ணாது என்று ஒரு கருத்து.நாளடைவில் நண்ணாவூர் என வழங்கி, திரு நணா என்று அழைக்கப்பட்டது.

ஆனால் அருணகிரிப் பெருமானே பவானி என்றுதான் தன்னுடைய பாடலில் பாடுகிறார்.

மலைமேவு மாயக் குறமாதின் மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவல் கொடியோனே திருவாணி கூடற்பெருமாளே

பவானி என்பதை வாணி என்று குறுக்கி அழைத்திருக்கிறார்.

இத்திருத்தலம் பவானி, சங்ககிரி, நாககிரி, மங்கலகிரி, வேதகிரி, பத்மகிரி என்னும் ஐந்து மலைகளுக்குப் மத்தியில் அமைந்திருப்பதால் பஞ்சகிரி மத்தியப் பிரதேசம் என்றும் அழைக்கப்படுகிறது.

இங்கு அந்தர்வாகினியாகக் கலக்கும் அமுதநதி பற்றிய ஒரு சுவையான வரலாறு.

அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்தது எல்லோருக்கும் தெரிந்த புராண வரலாறு.

அந்த அமுதத்தை ஒரு பங்கை மகாவிஷ்ணுவிடமிருந்து பராசர முனிவர் பெற்று அசுரர்கள் கண்ணில் படாமல் இங்கு ஒளித்துவைக்கிறார்.

அப்படி ஒளித்து வைக்கப்பட்ட அமுதமே லிங்க திருவுருவாக மாறி அமுதலிங்கம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

அமுதநதி, இந்த லிங்கத்தின் அடியிலிருந்து ஊற்றாகப் புறப்பட்டு காவிரி பவானியுடன் கலக்கிறது என்கிறார்கள்.

இந்நதிக் கரையிலே காயத்ரி லிங்கம் என்று மற்றொரு லிங்கமிருக்கிறது. அந்த இடததை காயத்ரி தீர்த்தம் என்று அழைக்கிறார்கள்.

இந்த தீர்த்த கட்டங்களிலெல்லாம் மூழ்கி எழுந்து பாபங்கள் நீங்கப்பெற்றவுடன் பிறவா வரமளிக்கும் இறைவனைத் தொழ கோயிலுக்குள் போகலாம்.

இக்கோயிலின் தலமரம் இலந்தை வடமொழியிலே பதரி என்றுபெயர். இதன் பொருட்டே பதரியாச்ரமம் என்றும் புராணம் இககோயிலை அழைக்கிறது.

கருவறையிலே வீற்றிருக்கும் இறைவனுக்கு கூடுதுறை நாதர், திருநணா உடையார், சங்கமேசுவரர் என்று பல பெயர்கள்.

சங்கமத் துறையிலே கொலுவீற்றிருக்கும் இறைவனை சங்கமேசுவரன் என்றழைப்பதும் பொருத்தம் தானே.

அம்பிகையின் பெயர் வேதநாயகி இந்த வேதநாயகி பல அற்புதங்கள் நிகழ்த்தியவர்.

சில வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட ஒரு புராணத் திரைபடமொன்றிலும் இனிய நிகழ்ச்சி ஒன்று சுவையாகஎடுக்கப்பட்டிருந்தது.

வெள்ளையர்கள் இந்நாட்டை ஆண்டபொழுது சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு தலைநகராக பவானி இருந்தது.

1802ம் ஆண்டு இங்குகலெக்டராக இருந்தவர் வில்லியம் காரோ என்னும் வெள்ளையர்.

பல லக்ஷக்கணக்கான மக்கள் தினமும் கோயிலுக்கு வந்து போவதைக் கண்ட கலெக்டர், இக்கோயிலின் பெருமைகளைக் கேட்டறிந்திருக்கிறார்.

அம்பிகையின் அருட்சக்தியைப் பற்றியும் அவருக்கு விளக்கமாக் கூறியிருக்கின்றனர்.

அவருக்கோ தானும் அம்பிகையை தரிசிக்க வேண்டுமென்ற தணியாத

ஆவல். அதிகாரபலம் தன்னிட மிருந்தாலும் தவருன முறையில் அதைப் பயன்படுத்த விரும்ப வில்லை.

பக்தர்களுக்கும் தெய்வத்திற்கும் அரசியல்வாதிகள் மதிப்புகொடுத்த காலம் அது.

அரசபீடத்திலிருப்பவர் ஆசையை நிறைவேற்ற அறங்காவலர் அநியாய வழியில் செல்லவில்லை.

அன்று வானம் பொய்க்காமல் மாதம் மும்மாரி பெய்தது.

ஹிந்துக்கள் அல்லாதவர்கள் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்பது நியதி.

கலெக்டரின் ஆசையையும்நிறை வேற்றவேண்டும். நம்முடைய தர்மத்தையும் மீறக்கூடாது. கோயிலின் வெளிச்சுற்று மதிலில் அம்பிகையின் சந்நிதிக்கு நேராக, கலெக்டர் அம்பாளை தரிசிக்கும் விதத்தில் சிறு துளைகளை ஏற்படுத்துகின்றனர்

தினமும் அம்பாளை அத்துளைகளின் வழியாக தரிசித்திருக்கிருர் வில்லியம் காரோ.

அம்பிகையின் தீவிர பக்தர்களில் ஒருவராகவும் ஆகிவிட்டார் அவர்.

ஒருநாள் இரவு அவர் பங்களாவில் உறங்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு சிறு பெண் குழந்தை கனவில் வந்து அவரை உடனே கட்டிடத்திற்கு வெளியே போகும்படி ஆணையிட, உடனே விழித்தெழுந்து வெளியே ஓடி வருகிருர். வெளிவந்த சில நிமிடங்களுக்கெல்லாம் கட்டிடம் இடிந்து விழுகிறது.

அம்பிகை குழந்தை வடிவில் வந்து தன்னைக் காத்தருளியதாக உணர்ந்தார் அவர்.

கட்டிலில் படுத்திருந்தபொழுது இந்நிகழ்ச்சி ஏற்பட்டதால், இத் நினைவாக, தந்தத்திலேயே ஒருசிறு கட்டிலைச் செய்து, தன்னுடைய பெயரையும் அதிலே பொறித்து 11—1—1804ம் ஆண்டு அம்பிகைக்குக் காணிக்கையாக வழங்கியிருக்கிருர்.

அர்ச்சகர் எல்லாவற்றையும் விவரித்து துரைமகனுர் கொடுத்த கட்டிலையும், அவர் தரிசித்த மதில் சுவற்று துளைகளையும் நமக்குக் காட்டி பெருமிதப் படுகிருர் இக் கோயிலிலே.

அர்ச்சகருக்கென்ன, நமக்கும் தான் உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

மாசற்ற பக்திக்கு மாதேவி அருளியதில் வியப்பென்ன. மதுராந்தகம் ஏரிக்கரையில் அன்றொரு நாள் ஸ்ரீராமன் காட்சி தந்தான் ஒரு வெள்ளையருக்கு. அண்ணனுக்குத் தங்கை இளைத்தவளா, இல்லை, சளைத்தவளா? தானும் ஒரு அற்புதத்தை நிகழ்த்திக்காட்டி காணிக்கையாக ஒரு கட்டிலையும் பெற்றுவிடுகிருள்.

இக்கோயிலிலுள்ள ஒரு தூணில் ஒரு அதிசய சிற்பம் உள்ளது. அச்சிற்பத்தின்மீது நீரை ஊற்றினுல் அது வாய்திறந்து சிரிப்பதுபோல் தோன்றுகிறது.

இக்கோயிலிலே சௌந்தரவல்லி தாயாருடன் ஆதிகேசவப் பெருமாளும் கோயில்கொண்டிருக்கிருர். ருக்மிணி, சத்யபாமையுடன் வேணு கோபாலனும் காட்சியளிக்கிருர்.

சங்கமத்திலும் நீராடிவிட்டோம். கோயிலையும் தரிசித்துவிட்டோம். வேறென்ன இங்கு விசேஷம் என்று கேட்பவர்கள் கடைவீதிக்குச் செல்லலாம். புகழ்பெற்ற பவானி ஜமக்காளங்களை வாங்கி, நெசவாளர்களையும் வாழவைத்த மன நிறைவோடு வீடு திரும்பலாம்.

அரசமரத்தை சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் தொடக்கூடாது.

மகாகவி காளிதாசர் அருளிய

ரகுவம்சம்

ஸ்ரீ. குருவாயூரப்பதாசன் - B. சுந்தரராமன், M.A., B.Ed.

42

குசனது தலைமையில் லவன், தக்ஷன், புஷ்கலன், அங்கதன், சந்த்ரகேது, சத்ருகாதி, ஸுபாஹு ஆகிய எட்டு சகோதரர்களும் ஒற்றுமையாக அஷ்டத்திக்கஜங்களைப்போல ராஜ்யபரிபாபலனம் செய்து உலகை காத்து வந்தனர். நீர்வளம், நிலவளம், படைபலம் ஆகியவற்றை பெருக்கினர்.

குசாவதி நகரில் ஒருநாள் தன் சயன அறையில் குசன் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது நடு இரவில் திடீரென்று குசனை யாரோ கூப்பிட்டதுபோல தோன்றியதால் கண்விழித்தான். தனது சயன அறையில் இதற்குமுன் கண்டிராத தோற்றத்தையுடைய ஒரு ஸ்திரீ நிற்பதைக் கண்டான் அவள் அழுக்கடைந்த உடையுடன் களையிழந்து மிகவருத்தத்துடன் காணப்பட்டாள் அறையின் கதவு மூடப்பட்டுகாற்று அதிகம் வீசாதிருந்ததால் தீபங்கள் அசைவின்றி எரிந்துகொண்டிருந்தன கோட்டைக் காவலரது எச்சரிக்கை குரல் மட்டுமே தூரத்தில் கேட்டது. அரண்மனை பணியாட்கள் யாவரும் தத்தம் தனிஇடத்தில் அயர்ந்து உறங்கிகொண்டிருந்தனர் தலையணையில் கையை ஊன்றிபடுக்கையினின்று சிறிது எழுந்து வியப்புடன் தன்னை உற்று நோக்கிய குசனை அந்த ஸ்திரீகைகூப்பிவணக்கம்தெரிவித்து 'ஜெய விஜயீபவ' என்று மங்கள வாழ்த்துக்களைக் குசனுக்கு கூறினாள்.

உட்புறம்தாழிடப்பட்டுள்ள அந்த அறையிலேதிடீரென்று பிரவேசித்த அந்த ஸ்திரீயைக்கண்டுஆச்சர்யம் அடைந்த குசன் அவளைப் பார்த்து, 'துக்கமடைந்த முகத்துடன் என் முன்நிற்கும் நீயார்? தேவஸ்திரீயா? யோக சக்தியால் யோகிகள்எங்கும் செல்வதுபோல இங்கு என்முன் வந்து நிற்கும் காரணம் என்ன? ரகுகுலத்தவரின் மனத்தை அறிந்து கூறவேண்டியதை கூறுவாயாக!' என்று கூறினான். அதற்கு அவள், 'அரசே! உமது தந்தை ராமர் பரமபதம் அடைந்தபோது அயோத்தி மக்கள் அனைவரைதம் அழைத்துச் சென்றுவிட்டார். குற்றமற்ற அந்த நகரத்தின் அதிதேவதையே நான். இப்பொழுது ரக்ஷகரின்றி இருப்பவள்' என்று பதில் உரைத்தாள்.

மேலும் முன்பு அயோத்திஏரானமான செல்வ வளத்துடனும், அடிக்கடி திருவிழாக்களுடனும், குபேரனுடைய அளகாபுரியைவிட சிறப்பாகக் காணப்பட்டது. இப்போது நீ அயோத்தியை விட்டுவந்து குசாவதியில் வசிப்பதால் நான் துக்ககரமான நிலையை அடைந்துள்ளேன். நாதனாகிய நீ இல்லாததால்கவனிப்பாரற்று நகர மாளிகை மேல் தளங்களும்,மதில்சுவரும்இடிந்துசோபை இழந்து காணப்படுகிறது. இரவில் ஒரு இடத்தை குறிப்பிட்டு காதலர்கள் தனித்து சந்தித்துக் கொண்டதந்த வனங்களிலெல்லாம் நரிகள் ஊளையிட்டு திரிகின்றன. பெண்கள் ஜலக்ரீடை செய்த வாவிகளில் காட்டெருமைகள் துளைகின்றன. வீட்டில் வளர்க்கப்பட்ட மயில்கள் வளர்ப்பவரின்றி வருந்துகின்றன. மிருதங்க சப்தமின்றி அவை ஆடுவதில்லை. பெண்களின் செம்பஞ்சு

ரஸம் பூசிய பாத சுவடுகள் பதித்த தடாகங்களில் மான்களைக்கொன்று புலிகள் ரத்தம் தோய்ந்த தன் பாதங்களை பதித்துவருகின்றன. சித்திரத்தில் எழுதப்பட்டுள்ள யானைகள் உண்மையான சிங்கங்களால் தாக்கப்பட்டு பாழடைகின்றன. மேலாடையின்றி செதுக்கப்பட்ட சிற்பங்கட்கு பாம்புச்சட்டைகள் மார்பில் அணிவிக்கப்பட்ட வஸ்திரங்கள்போல காட்சி தருகின்றன. தேவபூஜை செய்பவர்கள் இல்லாததால் ஸரயூ நதியின் மணற்பிரதேசத்தில் பூஜைப் பொருட்களான புஷ்பம், சந்தனம்முதலியன காணப்படுவது இல்லை. எனவே எனது வேண்டுகோளுக்கிணங்கி நீ குசாவதியை விட்டுக் கிளம்பி மீண்டும் அயோத்தியையடைந்து அதைபுதுப்பித்து தலைநகர் ஆக்கிக் கொண்டு ஆளவேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

குசனும் அயோத்தியா நகர தேவதை கேட்டுக் கொண்டபடி செய்வதாக உறுதி கூறினான். தேவதையும் மகிழ்ச்சியுடன் மறைந்தது. இந்த நிகழ்ச்சியைகுசன் வஸிஷ்டர் முதலான தவசிகளிடம் உரைத்தான் அவர்களும் ஸூர்ய குலத்தில் இதுவரை ஒன்றிரண்டுமன்னர்களாலேயே தரிசிக்கப் பெற்ற அயோத்யா நகர தேவதையை நேரில் தரிசித்தும், அந்த தேவதையாலேயே யாசிக்கப்படும் பாக்யமும் பெற்ற குசனைப் புகழ்ந்து கூறினார்கள்.

உடனே குசன் விந்தியமலைப் பகுதியிலுள்ள குசாவதியை வேத வித்துக்களான பிராம்மணர்களுக்கு தானம் செய்துவிட்டு அயோத்திக்கு கிளம்பினான். நால்வகை சேனைகள் மந்திரி பிரதானிகள் பரிவாரங்களுடன் அயோத்தியை நோக்கி கிளம்பிய குசனது பரிவாரங்களைப் பார்ப்பவர்கட்கு தலைநகரமே அயோத்தி நோக்கி செல்வதுபோல பிரமையேற்பட்டது. இவ்விதம்கங்கைக்கரையை அடைந்த குசன் அந்த நதியை வணங்கினான். யானைகளைப் பாலம்போல் செய்து நதியை கடக்க ஏற்பாடு செய்தான். பிறகு குசன் ஒரு சில நாளில் ஸரயூநதிதீரம் அடைந்தான். அதன் இரு கரைகளிலும் ரகு குலத்தவர் பலகாலமாக யாகம் செய்து நாட்டிய யூபஸ்தம்பங்கள் அப்பொழுதும் கெடாமல் இருப்பதைக் கண்டான். தனது பரிவாரங்களுடன் நகருக்கு வெளியிலேயே தங்கினான். சிற்பிகளால் சில தினங்களிலேயே அயோத்தி நகரைப் புதுப்பித்து வாஸ்து பூஜைசெய்து அயோத்யா நகரை நமஸ்கரித்து பிறகு நகரத்தில் யர்வருடனும் பிரவேசித்தான். அயோத்தி முன்பு பெற்றிருந்த சோபையைதிரும்பவும் பெற்றது. ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் சிறந்து விளங்கியது.

இவ்விதம் இருக்கையில் கோடை காலம் வந்தது. குளிர்ச்சியைக் கருதி அயோத்தி நகர பெண்கள் மெல்லிய உடைகளையும்முத்துமாலைகளையும் அணிந்தனர். செல்வமிக்க மனிதர்கள் இயந்திரியபொறிகளால் நீரினை தங்களை சுற்றி வாரி இறைக்கச்செய்து சந்தனக் குழம்பைபூசியபடி அமர்ந்து காலம் கழித்தனர். இவ்விதம்தாபம், தாஹம், வியர்வை இவற்றால் `கோடைக்காலதிதில் ஏற்பட்ட சிரமத்தை போக்கிக்கொள்ள விரும்பிய அரசனை குசன் ஸரயூ நதிக்கரையில் தங்குவதற்காக அழகிய சோலை வீடுகளை உண்டாக்கிக் கொண்டு தன் காதலிகளுடன் தங்கினான்.

குசனது மனைவியரும், காதலிகளும் குசனுடன் ஸரயூநதியில் இறங்கி விளையாடினர். அவர்கள் பூசிய வாசனைப் பொருட்கள் ஸரயூ நதி நீரை பல நிறங்களை உடையதாகச் செய்தது. தன் அழகிய உடலைத் தாங்க இயலாததால் குசனது காதலிகள் மிகவும்சிரமப்பட்டு

நீந்தினர். நீரைத் துளைத்தும் அடித்தும் விளையாடியதால் நழுவிய முத்துமாலைகளை உடைய பெண்கள் தம் மீது படிந்துள்ள நீர்த்துளிகளையே 'நல்முத்து என எண்ணி மேலும் ஜலக்ரீடையில் குசனுடன் ஈடுபட்டனர். நீரை வாரி ஒருவர் மீது ஒருவர் அடித்து விளையாடினர் முன்பு அவர்கட்கு உவமையாகக் கூறப்பட்ட பொருள்கள் அப்போது அவர்கட்கு மிக அருகில் இருந்தது. புருவத்தை ஒத்த சிற்றலைகளும், நாபியையொத்த கடும் சுழலும், மார்பகங்கட்கு உவமையாக விளங்கும் சக்ரவாக பறவைகளும் அப்பொழுது அவர்கட்கு மிக அருகிலேயே காணப்பட்டதால் அந்த உவமை பொருட்கள் மதிப்பிழந்து காணப்பட்டது. இவ்விதம் அழகிய அப்பெண்கள் கலைந்த கூந்தலும், அணிகலன்களும் விளங்க, நனைந்த ஆடையுடன் கரை ஏறினர். அப்பொழுது குசன் அகஸ்தியரால்ராமனுக்கு அளிக்கப்பட்டு ராமன் தனக்கு பட்டாபிஷேக சமயத்தில் பரிசாக அளித்ததும் எங்கும்வெற்றியை தரவல்லதுமான தன் தோள் வளை காணாமல் இருப்பதைக்கண்டு மிக வருந்தினான். குசன் அதை பெருமைக்காகவும் மதிப்பிற்காகவுமே விரும்பினான். நீர் முழுவதும் வலைஞர்களால் தேடியும் அது கிடைக்கவில்லை. ஆனால் அவ்வலைஞர்கள் 'ஸரயூ நதியின் மடுவில் வசிக்கும் குமுதன் என்ற நாகங்களின் அரசனே இந்த கங்கணத்தை அபஹரித்து இருக்கிறான் என்று கூறினர்.

எனவே குசன் கருடாஸ்திரத்தை பிரயோகிக்க எண்ணி கையில் எடுத்தான் உடனே மடுவைக் கலக்கிக்கொண்டு கூர்மாவதாரத்தின்போது பாரிஜாதவிருக்ஷத்துடன்

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 10, 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள்:

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர்: K. ராமலிங்கம் போன்: 842594

மஹாலக்ஷ்மி வெளிவந்ததுபோல குமுதன் தன் தங்கையான குமுதவதியுடன் அம்மடுவினின்று வெளிவந்துகொண்டிருந்தான். கையில் கங்கணத்தையும் எடுத்துக் கொண்டு தன் சகோதரியுடன் வரும் குமுதனைக் கண்ட குசன் கருடாஸ்திரத்தை பிரயோகிக்காது நிறுத்தினான். வணக்கத்துடன் வருகின்ற குமுதனைக் கண்ட குசன் கோபம் நீங்கினான். குமுதன் குசனை நமஸ்கரித்தான். பிறகு, 'அரசே! உலக நன்மைக்காக அவதரித்த மஹாவிஷ்ணுவான ராமனது புதல்வராகிய தங்களை விஷ்ணுவின் மற்றொரு அம்சமாகவே தாஙகளைக்கருதுகிறேன். எவ்வகையிலும் எனது மரியாதைக்குரிய தங்களுக்குப் பிரியம் இல்லாததை நான் செய்வேனோ? எனது சகோதரி விளையாடும்போது எதிர்பாராமல் மேலே இருந்து மடுவில் விழும் கங்கணத்தைப் பார்த்து இவ்வாபரணம் தங்களுடையது என்று அறியாமல் எடுத்துவிட்டாள்' என்றும் மன்னிப்பு கோரினான். மீண்டும் இந்த பவித்ரமான ஆபரணம் தங்கள் புஜத்தை அலங்கரிப்பதாகுக' என்று கூறி அதைக் குசனிடம் ஸமர்ப்பித்தான்.

பிறகு வினயமாக குசனிடம் ஆபரணம் எடுத்தல் என்ற குற்றத்தைச் செய்ததற்காக என் தங்கை குமுதவதி தங்கட்கு ஆயுள் முழுவதும் பணிவிடை செய்து அப்பிழையைப்போக்கிக்கொள்ள அனுமதிக்க வேண்டும். அதையே அவளும் விரும்புகிறாள் என்றும் உரைத்தான்.' குசனும் 'நீ எனக்கு சிறந்த உறவினன்தான்' என்று கூறி அந்த குமுதவதியையே தனது பட்டமஹிஷியாக்கிக் கொள்வதாகவும் வாக்களித்தான். பின் குமுதன் தன் உறவினர்களுடன் வந்து தன்குலத்திற்கு அணியான குமுதவதியை குசனுக்கு மணம் புரிவித்தான். குசன் மங்கள நூலணிந்த குமுதவதியின் கரத்தை அக்னி ஸாட்சியாக பற்றிய அளவில், தேவ துந்துபி முழங்கியது. தேவர்கள் குசன் மீது புஷ்பங்களை வர்ஷித்தனர். குமுதன் விஷ்ணுபுத்ரனை மாப்பிள்ளையாக அடைந்ததால் கருடனிடம் இருந்து பயம் நீங்கினான். குசனது நாட்டு மக்களும் இந்த புதிய நட்பால் ஸர்ப்பப் பயம் நீங்கி வாழ்ந்தனர். இவ்விதம் குசன் ராஜ்யத்தை தர்ம பரிபாலனம் செய்து ஜனங்களின் அன்பைப் பெற்று அரசாட்சி செயதுவந்தான். (தொடரும்)

புருஷ ஸூக்தம்

தமிழாக்கம் : கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

வேத மந்திரங்களில மிகவும் சிறபபான இடம்பெற்றுள்ள புருஷ ஸூக்தம், நாராயண ஸூகதம், ஸ்ரீ ஸூகதம் போனற மகாமநதிரங்கள் மனித குலத்திற்கே மாணிக்கமாய அமையப் பெற்றது. இவைகளை உள்ளன்போடு பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்பவர்களுக்கு பல நன்மைகள சித்திககும் என்று வேதஙகளில் சொலலபபட்டுளளது.

இபபுனிதமான மஹாமந்திரத்திற்கு மிகவும் எளிய நடையில் கவிதையாக தமிழாக்கம் செயதுள்ளார் கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவாகள். எழுத்தாளன் என்ற பத்திரிகையை கால் நூற்றுண்டிற்கும் மேலாக தொடாந்து நடத்தி வருகிருர். ஸ்ரீ சௌந்தர்யலஹரி, ஸ்ரீ சுபரமணிய புஜங்கம், ஸ்ரீருத்ரம போன்ற பல அரிய பொக்கிஷஙகளுக்கு தமிழக கவிதையாக இயற்றியுள்ளார்கள். தமிழக கூறும நலலுலகில் திரு ரெடடியார அவர்களைத தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஆஸதிக உலகக் காவலரான ரெட்டியார் அவர்களின் தமிழாகக கவிதையும் மூல மநதிரத்தையும அன்பாகள படித்து நற்பலனடைய வேண்டுகிறேன். அடுத்து நாராயண ஸூகதம், ஸ்ரீஸூகதம் தொடாந்து வெளிவர இருக்கிறது.

—ஆசிரியர்

ஸஹஸ்ர சீரஷா புருஷ : ஸஹஸ் ராக்ஷஸ் ஸஹஸ்ர பாத்
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்த்வா அத்ய திஷ்டத் தசாங் குலம் 1

ஆயிர மாயிரம் சிரங்களும் கண்களும்
ஆயிர மாயிரம் அடிகளும் உடையார்
மாயிரு ஞாலில் விரல்களின் அளவால்
மாதவன் தன்னை அளக்கவும் போமோ ?

புருஷ ஏ வேத(கும்) ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்
உதாம் ரு தத் வஸ்—யேசான : ய தன்னே ஞதி ரோகதி 2

அன்றும் இன்றும் இனி எக்காலும்
அகிலம் அனைத்திலும் அவரே புருடர்
என்றும் அன்ன மயமாய் ஈசன்
இருந்து மறைந்து தோன்றுவர் உலகில்

ஏதா வானஸ்ய மஹிமா அதோ ஜ்யா யர(கச்ச) பூருஷ :
பாதோऽஸ்ய விச்வா பூதானி த்ரிபாத ஸ்யா ம்ருதம் திவி 3

கண்களில் தெரிவது அன்னவன் வடிவில்
கால்பாகமே இவற்றிலும் மேலாய் புருஷன்
எண்ணியமுக்கால் பாகம் அமிர்த மயமாய்
இருக்கும் பரம பதந்தனில் என்றும்

த்ரி பாதூர்த்வ உதைத் புருஷ : பாதோऽஸ் யேஹா பவாத் புன:
ததோ விஷ்வங் வ்ய க்ராமத் ஸாசனா சனே அபி 4

உலகிற்கு மேலாய் விளங்கும் உத்தமன்
உணவாய் இங்கு ஒருபாகமே மிளிர
பலப்பல உயிரும் ஜடமுமாய் தோன்றி
பாரில் வெளிப்பட்ட விளக்கங்கள் ஆமே.

தஸ்மாத்—விராட ஜாயத விராஜோ அதி பூருஷ :
ஸ ஜாதோ அத்ய ரிச்யத பச்சாத்—பூமி—மதோ புர : 5

மூலத்திருந்து பிர்மாண்டமும் தோன்ற
முன்னவன் பிரமன் தோன்றிப் பரந்து
ஞாலம் படைத்து சீவர்கள் தமக்கு
நல்ல சாரீரம் பற்பல படைத்தான்

யத் புருஷேண ஹவி ஷா தேவ யஜ்ஞ—மதன்வத
வஸந்தோ அஸ்யா ஸீதா ஜ்யம் க்ரீஷ்ம—இத்ம : சரத் தவி: 6

விண்நிறைந்த பரம் பொருள் தன்னை
வியத்தகு வேள்வி மனத்தினில் தேவர்
எண்ணியே செய்தனர் இளவேனில் நெய்யாய்
எரிகோடை சமித்து பனி ஹவிசாய் ஆயது

ஸப்தாஸ் யாஸன் பரிதய : த்ரி : ஸப்த : ஸமித : க்ருதா :
தேவா யத் யஜ்ஞம் தன்வாந : அப்த்னன் புருஷம் பசும் 7

ஏழு மறைத்தொடர் பரிகளே யாக
இருபத் தொரு தத்துவம் சமித்துகளாக
வாழு முனிவரர் வேள்வி வளர்ப்பவராக
மறையவன் வேள்வி பசுவாயின னே.

தம்யஜ்ஞம் பர்ஹிஷி ப்ரௌக்ஷன் புருஷம் ஜாதம க்ரத :
தேன தேவா அயஜந்த ஸாத்யா ருஷயச் சயே 8

ஆதிவேள்வியின் நாயகன் தன்னை
அந்தவேள்வியில் எழுப்பினர் தேவர்
ஸாத்யர் முனிவரர் அனைவரும் சேர்ந்து
ஸர்வஹுத் வேள்வியை வளர்த்தனர் அன்றே.

தஸ்மாத்—யஜ்ஞாத் ஸர்வ ஹுத : ஸம்ப்ருதம் ப்ருஷ தாஜ்யம்
பசூ(குச்)ஸ்தா(குச்)சக்ரே வா யவ்யான் ஆரண்யான் க்ராம்யாச் சயே

ஸர்வஹுத் என்றவவ் வேள்வியில் அன்று
தயிரும் நெய்யும் தோன்றிய தோடு
மிருகம் பறவை பிராணிக ளெல்லாம்
மேதினி நிறையப் பிரமன் படைத்தான்.

தஸ்மாத்—யஜ்ஞாத் ஸர்வ ஹுத : ருச : ஸமானி ஜஜ்ஞிரே
சாந்தா(ஸி) ஜஜ்ஞிரே தஸ்மாத் யஜுஸ் தஸ்மாத் ஜாயத 10

ஸர்வஹுத் வேள்வி தன்னில் இருந்து
தரணியில் ரிக்—சாமவேத மந்திரமும்
சர்வசந்தஸ் யஜுர் வேதம் எல்லாம்
சதுர்முகன் காண முகிழ்த்து எழுந்தான்.

தஸ்மா தச்வா அஜாயந்த யே கே சோப யாதத :
கர்வோஹ ஜஜ்ஞிரே தஸ்மாத் தஸ்மாஜ் ஜாதா அஜாவய : 11

வேள்வியிலிருந்து குதிரைகள் ஓர்வரிசை
மிருபத்கள் மிருகங்கள் தோன்றின தோடு

ஆன்வினை யாற்ற அறமாம் பசுவும்
ஆடு செம்மறி வெள்ளாடுகள் தோன்றின.

யத் புருஷம் வ்யதது : கதி தாவ்ய கல்ப யன்
முகம் கிமஸ்ய கௌ பாஹூ கா ஊரு பாதா—வுச்யேதே 12

சங்கல்பம் தன்னால் தேவர்கள் பரமனை
சமைத்தது எவ்விதம் ? முகம் எது ?
அங்கங்கள் எவையெவை ? ஆயின பாதம்
ஆனதெவ்விதம் அறியவும் போமோ ?

ப்ராஹ்ம மணோஸ்ய முக மாஸீத் பாஹூ ராஜன்ய : க்ருத :
ஊரு ததஸ்ய யத் வைச்ய : பத்ப்யாம் சூத்ரோ அஜாயத 13

பார்ப்பவர் முகமாய் புஜபல முற்றோர்
பரமனின் கரங்களாய் வைசியர் தொடைகளாய்
வேர்ப்ப உழைத்து உலகுய்விக்கும் சூத்திரர்
வியத்தகு திருவடிகளாய் உருவங்களாயினர்.

சந்த்ரமா மனஸோ ஜாத : சக்ஷோ : ஸூர்யோ அஜாயத :
முகா—திந்த்ரச் சாக்னிச்ச ப்ராணாத் வாயு—ரஜாயத 14

மனமது பிறைமதி கண்களோ ஆதவன்
மாதவன் முகமதில் அக்னி, இந்திரனும்
தனது பிராணன் தன்னிலிருந் துலகெலாம்
சாரும் வாயுவென தோன்றின புவியில்.

நாப்யா ஆஸீ—தந்தரிக்ஷம் சீர்ஷ்ணோ த்யௌ ஸம வர்த்தத
பத் ஸாம் பூமிர்—திச—ச்ரோத்ராத் த தாலோகா(கும்) அகல்ப யன்

உந்தியில் வான்வெளித் தோற்ற மும்மற்று
உயர்சிரசில் சொர்க்கம் அடிகளில் பூமியும்
சந்தி திசைகளை செவிகளாய் சமைத்து
சங்கல்பம் தன்னால் படைத்தனர் அன்றே.

வேதாஹ மேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தம ஸஸ்து பாரே
ஸர்வாணி—ரூபாணி விசித்ய தீர: நாமானி க்ருத்வா அபிவதன் யதாஸ்தே

எல்லா உருவமும் படைத்து பெயர்களை
ஈந்து இயக்கி மகிமை மிகோனாய்
தொலிருள் கடந்த சோதி சுடரில்
தோன்றும் ஆதியை சிந்தையில் அறிவேன்.

தாதா புரஸ்தாத்—யமுதா ஜஹார சக்ர: ப்ரவித்வான் ப்ரதிசச் சதஸ்ர :
தமேவம் வித்வான்—அம்ருத இஹபவதி நான்ய: பந்தா அயனாய-வித்யதே

ஆதியில் பிரமன் அறிந்து தொழுதவர் எவரோ?
அமரேந்திரன் திசைகளில் கண்டவர் எவரோ ?
சோதியை அறிபவர் இப்பிறவி தன்னில்
சொர்க்கமும் முத்தியும் சொந்தமாய் அடைவார்.

யஜ்ஞேன யஜ்ஞ—மயஜந்த தேவா : தானி தர்மாணி ப்ரதமான் யாஸன்
தேஹநாகம் மஹிமான : ஸசந்தே யத்ர பூர்வே ஸாத்யா : ஸந்தி தேவா:18

மானத வேள்வியில் தேவர் வேள்விதாயகனை
வணங்கினர் அதற்குறு தர்மங்கள் அனைத்தும்
ஆனது முதன்மை ஆதியர் எங்கிருப்பினும்
அவ்விடம் சொர்க்கம் அடைகுவர் மேலோர்

இரண்டாம் பகுதி

அத்ப்ய: ஸம்பூத: ப்ருதிவ்யை ரஸாச்ச விச்வ கர்மணஸ்-ஸமவர்த் ததாதி
தஸ்ய த்வஷ்டா விதத‌த்-ரூபமேதி தத்புருஷஸ்ய விச்வ-மாஜான-மகரே

நீர்நில ரஸப்பகுதியிலிருந்து நிகரில்லா பிரம்மாண்டம் உதித்தது
பாரைப்படைத்த பரமனிலிருந்து பாங்குடன் விராட புருடன் உதித்தான்
வேறாய் விளங்கும் பரம்பொருளாந்த விராட புருடனுரு கல்பிதம் செய்து
சீருடன் எங்கும் வியாபிக்கின்றார் ஆதி சிருஷ்டியில் புருடன் விசுவ
ரூபம்உதித்தது

வேதாஹ மேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ் தாத்
தமேவம் வித்வா னம்ருத இஹ பவதி நான்ய: பந்தா வித்யதே அயனாய

இத்தகை மகிமை மிகக் கிட்ட வரும் ஈடிலா ஆதவன் நிறமுடையவரும்
சுத்த இருளுக் கப்பால் இருப்பவராகிய துய்ய புருடன் தனையான்
அறிவேன்

வித்தகன் புருடனை இவ்வா றறிபவன் விய னுலகில் முத்தனாய்
விளங்கிடுகின்றான்

இத்தரை மீதினில் முத்தியைப் பெறவே இதனைத் தவிரவழியெதுமில்லை.

ப்ரஜாபதிச்-சரதி கர்ப்பே அந்த: அஜாய மானோ பஹுதா விஜா யதே
தஸ்ய தீரா: பரிஜானந்தி யோனிம் மரீசீனாம் பதமிச்சந்தி வேதஸ : 3

பிரபஞ்சத்தை அபிமானிக்கும் பரம புருடன் பிரபஞ்சத்தி னுள்ளே
உறைந்திடு கின்றார்
பரம்பொருள் பிறவி வசப்பட்டிடாமல் பற்பலவடிவாய் தோன்றிடுகின்றார்
பரமனின் உண்மைப் படிவம தனையிப் பாரில் அறிஞர் ஆய்ந் தறிகின்றார்
சிருஷ்டி இயக்கும் உரிமை உடையோர் சில மரீசிஞானி பேறு
விரும்பிடு கின்றார்.

யோ தேவேப்ய ஆதபதி யோ தேவானாம் புரோஹித :
பூர்வோ யோ தேவேப்யோ ஜாத : நமோ ருசாய ப்ராஹ்மயே 4

தேவர் களிடத்தே தேவ தன்மை விளங்கவும்
சைதன்யராய் தேவ பிரகஸ் பதியுமாய்
தேவர்க்கு முந்திய ஹிரண்ய கர்பருமாகிய
ஸ்வயம் ப்ரகாச பரபிர்மத்தைத் தொழுவோம்

ருசம் ப்ராஹ்மம் ஜனயந்த: தேவா அக்ரே தத ப்ருவன்
யஸ் த்வைவம் ப்ராஹ்மணோ வித்யாத் தஸ்ய தேவா அஸன் வசே 5

பர் பிர்ம ஞானம் பரப்பிய தேவர்
பாருக் குரைத்த பரம ரகசியம் இதுவே
பிரம்மநாட்ட முடையோன் எவனே யாகிலும்
பின்னமில்லா திதனை அறிய தேவர் வசமாவார்.

ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பதன்யௌ அஹோரா ராத்ரே பார்ச்வே 6
நக்ஷத்ராணி ரூபம் அச்வினௌ வ்யாத்தம்

ஹ்ரீ தேவியும் திருவும் நினது தேவியர்கள்
இரவும் பகலும் நினதிரு பக்கம்
திருஉரு விண்மீன் மண்டல மாகும்
திருவாய் அசுவினி தேவராய் திகழும்

இஷ்டம் மனிஷாண அமும் மனிஷாண ஸர்வம் மனிஷாண 7

யாங்கள் விரும்பும் ஞானமே நல்குக
இவ்வுலக இன்பம் யாவுமே தருக
ஓங்கிய இகத்திலும் பரத்திலும் எமக்கே
உயர்வுறு நலன்களை உதவுக இறைவா.

நன்றி : திருவடி பதிப்பகம், திருச்சி.

(அடுத்து, நாராயண ஸூக்தம்)

இருமல் நோயாளிகள் கவனிக்கவும்

இருமலா ? இளைப்பா ? தும்மலா ?
பித்தத்தினல் ஏறபடும மயக்கம், இருதயம் படபடப்பு, நெஞ்சு வலி - பிடரி வலி - உடல் வலி – மலசசிககல்- பசி மநதம், ருசியின்மை–அடிககடி ஜலதோஷம-ஓயா தும்மல - நீர்வடிதல தலைபாரம் – இருமல் - கோழைக் கட்டு - மேல மூசசு - இளைப்பு கர்முர்ரெனறு இழுபபு - உடல பலஹீனம் - உடம்பு தேனுமை அசதி – சோர்வு- களைப்பு - ஆஸதுமாவின் ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோக்கியம் பெற உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

'சிவராஜ்' நெல்லிக்காய் லேகியம்

பவளசத்து, சிலா சதது, சிருங்கி சதது சோர்நதது 250 கிராம் புட்டி ரூ. 30-00
வெள்ளி ரேக் – பவள சத்து – பஸ்பம் கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 40-00

(போஸ்டேஜ் இலவசம்)

தேவையானவர்கள் V. P. பார்சல் மூலம் பெறலாம்.

— ஏஜெண்டுகள் தேவை —

தயாரிப்பு : **சிவராஜ் சித்த வைத்தியசாலை**
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுரம் எதிரில்)
காந்தி ஸ்டேடியம் சமீபம், சேலம் – 636 007

பெண்களுக்கு மட்டும்

நக்ஷத்திர குணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

மிருகசீரிஷம்

27 நக்ஷத்திரங்களில் 5வது இடம் பெற்றது மிருகசீரஷமாகும். இதற்கு நக்ஷத்திராதிபதி பூமிதேவியின் மகனுன பூமிகாரகன், தெய்வம் – சந்திரபகவான். யோனி பாம்பு, அஸ்தனமானது, தேவகணம், இத்தகைய நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அழகாகவும், பார்வையில் தனி நயமும், சாந்தமான சுபாவம், உயர்ந்த செல்வந்தர் குடும்பம், பக்தி, தயாளமான குணங்கள், கல்வியில் கலைவாணிக்கு சமம், ஆடம்பரத்தில் விருப்பமின்மை போன்ற குணங்கள் உடையவர்.

இவர்கள்பிறந்தபிறகுதாய்தந்தையர் குடும்பம் பூர்ணசந்திரன் போல் பொலிவுபெறும். கணவன்வாழ்க்கை மட்டும் இவர்களுக்கு சோகத்தை உண்டாக்கும். ஆனாலும்கவலைகளை வெளியே சொல்லாமல் கணவனே கண்கண்ட தெய்வம் என்ற பழமொழியை நிலைநாட்டும்பெண்மணிகள் இவர்.

சிலர், பார்ப்பதற்கு கம்பீரமான தோற்றம், தாய்தந்தையர்களை அதிகாரம் செய்யும் குணமும், பிறர் இவர்களிடம் பேச பயம்கொள்ளும் நிலையும், காட்டு இலாகா அதிகாரிகளாகவும் இருப்பவர்கள். கணவனை கைபொம்மையாக மாற்றிவிடுவர், மான்கள்மீதும், வேட்டைநாய்கள் மீதும் அதிக அன்பு வைத்துவளர்ப்பவர்கள், உல்லாசத்தையேவிரும்புவார்கள். வெண்ணிற ஆடைகளையும், விதவிதமான அணிகலன்களை அணியு ஆவலுடையவர்கள்.

சிலர் கஷ்ட ஜீவிகளாகவும், அநாகரீகமான செயல்களில்ஈடுபடுபவராகவும், கருநிறம, முகத்தில் பருக்கள் போன்றவைகளை பெற்றிருப்பர். பற்கள் வெளியே தெரியும். குளம், குட்டை ஏரிகள் ஓரத்தில் வசிப்பவர்கள். ஆவேசம் வந்தால் என்ன செய்கிறுர்கள் எனத் தெரியாது. சண்டைகளுக்கும் அஞ்சாதவர். தவறு செய்துபிறகுவருந்தும் குணம்இவர்களிடம் இராது. அநாகரீகமான பேச்சுகளிலும்ஈடுபடுவார்கள். இவர்கள் வாழக்கை மந்தமானது

முதல் பாதம்

இவர்கள் பார்ப்பதற்குஅழகுள்ளவர்கள், திடமான மனது, மனோதத்துவ நிபுணர்கள், பொன் அணிகள் மீது ஆசை, அதிகாரம் செய்யும் தன்மை, சில வேளைகளில் கொடிய சொல்லம்புகளால் புண்படுத்திவிடுவார்கள், தகப்பனுர்பொருள் அதிகம் கிடைக்கும், பரிசுகள், பட்டங்கள் பெறுபவர்களாகவும், 18வயதுமுதல் உயர்ந்தவாழ்க்கை உண்டாகும். இவர்கள் கணவன்மார்கள்உயர்ந்த



வம்சத்தைச் சார்ந்தவர்களாகவும், உயர்பதவியில் உள்ளவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்கள். தகப்பனார் உதவியால் இவர்கள் வாழ்க்கை நடக்கும். ஆதவனின் ஒளிபோல் இவர்கள் பெயர் பல தேசங்களில் பரவும்.

இரண்டாம் பாதம்

அழகிய சரீரம், அமுதமானவார்த்தைகள் பேசுபவர்கள். உடன்பிறந்தவர் சுகத்தால் முன்னேறுபவர்கள், வாக்கு வாதத்தால் வெற்றி பெற முடியாதவர்கள், 21 வயது முதல் உயர்ந்த வாழ்க்கையை அனுபவிப்பார்கள். கவிதாசிரோமணிகள், கலையரங்க நிர்வாகிகளாகவும் இருப்பர். இவர்கள் கணவன் எப்போதும் எழுத்தாளர்களாகவும், கணக்கு வேலை செய்து பொருள் சம்பாதிப்பவராகவும், மனைவியை அடக்கியாளக் கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள்.

மூன்றாம் பாதம்

இவர்கள் பார்ப்பதற்கு நடுத்தரமான உயரமும், அழகும் படைத்தவர்கள், இனிமையான சொற்கள், இனிமையான நாதத்தைக் கேட்க விருப்பமுள்ளவர்கள். ஒரு நிலையான வாழ்க்கை இராது. சஞ்சலமான வாழ்க்கையையே சந்திக்கவேண்டி வரும், வெளுத்த ஆடைகள், அலங்கார அணிகலன்கள், பொருள்கள் மீது ஆசை அதிகம் உள்ளவர்கள். ஆடவர்களிடம் விநோதமாக பேசுவதால் கணவன் விரோதத்தை தேடிக்கொள்வார்கள். வீட்டுவேலைகளை மற்றவர் செய்ய விட்டுவிட்டு இவர்கள் கட்டிலில் படுத்துறங்குவர், கணவன் மனம் நோகுமாறு செய்வர்.

நான்காம் பாதம்

இவர்கள் பார்ப்பதற்கு வசீகரமான முகம், சாஹஸமான காரியங்கள் செய்பவர்கள், விவசாய இலாகா அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், வாக்குத் திறமையுள்ளவர்கள், எதிரிகள் அஞ்சும்படி நடப்பர், தர்பார் வாழ்க்கை நடத்துபவர்கள், இவர்கள் கணவன்மார்கள் தங்கச்சுரங்கம் போன்ற இடங்களில் வேலை செய்பவர்கள். இருவரும் ஒரே இடத்தில் வேலைசெய்யும் வாய்ப்புள்ளவர்கள், சிலச் வழக்கறிஞர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களுக்கு பிரதிமாதம் ஞாயிறு புதன், செவ்வாய்க்கிழமைகளும், 3, 12, 21, 30 ஆகிய தேதிகளும், 3, 12, 21, 30 வயதுகளும் உகந்தவை. வாழ்க்கையின் பல முன்னேற்றங்களும், வெற்றி வாய்ப்புகளும் உண்டாகும். சூர்யதசை, சந்திரதசை, செவ்வாதசை புதன் மகாதசையில் இவர்கள் கணவனுக்கு உயர்பதவிகளும், பூமி வாகன லாபங்களும் வாழ்க்கையில் முன்னேற்றங்களும், தனலாபங்களும் உண்டாக்கும்.

குருமகாதசை, கேது தசை, சுக்ர மகாதசையில் குடும்ப சம்மந்த அமைதிக் குறைவுகள், உடல் அசௌகரியங்கள் நெஞ்சுவலி போன்ற பிணிகள் ஏற்பட்டு தொல்லை உண்டாகும்.

அவ்வமயம் துர்கா ஸூக்தபாராயணங்களால் நன்மைகள் உண்டாகும்.

கடமை

கண்ணன் ஒருவனால் துரியோதனன சைன்யியம் அனைத்தையும் அழித்திருக்க முடியும ஆனால அர்ஜுனனைப் போரிடச் செய்தான். ஏன? கடமையென்பது பிறந்த எந்த மனிதனுக்கும உணடு. அந்தக் காமாலை, காம பலன்களை பௌத்த மதமும் ஒப்புக்கொள்கிறது.

உங்கள் வாழ்வில்பேரானந்தமும் நிலைத்த சாந்தியும் நிலவவேண்டுமானால், நீங்கள் தெய்வீக இயல்புடன் கொண்டுள்ள தொடர்பை உணர்ந்து, அதனை வளர்த்து வலுப்படுத்திக்கொள்வது மிக அவசியமாகும். இத்தொடர்பை மனிதர்கட்கு உணர்த்தி, அதனை வாழ்க்கையை இயக்கும் சக்தியாக்க – வாழ்வின் முதலாக்க-ஞானிகள் பலரும்முயன்றுள்ளனர். உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தோன்றிய மதங்களின் நோக்கம் இதுவேயாகும்.

பல் பொருள்களிலும் பாய்ந்து செல்லும் மனத்தை பிடித்துநிறுத்தி மாறுதமெய்ப் பொருளிடையே தைல தாரைபோல் தொடர்ந்து செல்லுமாறு செய்வதே சமயங்களின் நடுநாயகக் கொள்கையாகும். லௌகீக வாழ்க்கையான சம்சார சாகரத்தில் அமிழ்ந்து விடாமல், மனத்தை உள்நோக்கிச் செலுத்தி சாந்தியைப் பெறுதல் வேண்டும். இதுவே சமயம் என்பதன் பொருளும் ஆகும்.

சமயத்தின் பல்வேறு நெறிகளும் பல்வேறு முறை யோகநெறிப் பயிற்சிகளும் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள உண்மைத் தொடர்பை மீண்டும் உணர்த்துவதேயாகும். இவ்வுலகில் உள்ள வேறு எந்தப் பொருளையும் இது என்னுடையது என்று கூறி என்று கூறி நீங்கள் உரிமை பாராட்டிக் கொள்ளமுடியாது நீங்கள் மதிப்பு வாய்ந்ததாகக் கருதும் உங்களது உடலும் உங்களுக்கு நிரந்தரமாகச் சொந்தமானதல்ல.

மேலும் உங்களது உடலை உங்களது என்று வைத்துக் கொண்டாலுங்கூட, உடலின்மீது எத்தகைய அதிகாரத்தை உங்களால் செலுத்த முடியும் என்பதை எண்ணிப்பாருங்கள். பொருந்தாத உணவை உண்டதால் வயிற்றுப்போக்கு ஏற்படும் பொழுது, "ஏ வயிறே, இவ்வாறு செய்யாதே" என அதிகாரம் செலுத்தி உங்கள் வயிற்றை நன்னிலைக்குக்கொண்டுவர உங்களால் முடியுமா? நீங்கள் மூன்று துறைகளில் "டாக்டர்" பட்டம் பெற்றவராக இருக்கலாம். அல்லது ஒரு நாட்டின் தலைவராக இருக்கலாம். இருப்பினும் உமது உடலின்மீது உமக்குள்ள ஆதிக்கம் மிக மிகக் குறைவானதேயாகும். எனவேஒரே ஒரு பொருளைத்தான் நீங்கள் 'என்னுடையது' என்று கூறி உரிமை பாராட்டிக் கொள்ள முடியும். அதுவே மெய்ப்பொருளான கடவுளாகும்.

அழியும் பொருட்களுடன் கொண்டுள்ள தொடர்பு முடிவில் துன்பத்தையே அளிக்கும். இது உறுதியான எளிய உண்மையாகும். மெய்ப்பொருளொன்றே உங்களது தீவிர ஏக்கங்களைத் தீர்த்து வைக்கும். மெய்ப்பொருட் தன்மையுடைய ஆத்மாவைமெய்ப்பொருளொன்றே திருப்தியுறச் செய்யும்.

நீங்கள் ஆத்மா. ஆத்மாவின் வெளிப்பாடே உங்களுக்குநிறைந்த திருப்தியைத் தரத்தக்கது. என்றுமுள்ள மெய்ப்பொருளிலேதான் நீங்கள் உண்மை இன்பத்தையும், உண்மைத்திருப்தியையும், உண்மை அமைதியையுமு, முழு நிறையுணர்வையும் அடைய இயலும்.

நன்றி :—தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
இராசிபுரம்.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : கே. ராதாகிருஷ்ணன், அலுவலகம் : நெ. 78, டாக்டர் பெஸன்ட்சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன் : 846434